Registered as a News Paper in Sri Lanka


பக்கம் 24 ரூபா 16/50

දිනමුරසු වාරමලර් ஜூலை 18-24, 2004

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 571



## அமைச்சர் டக்ளஸ் மீது தற்கொலைத் தாக்குதல் முயற்சி



## முறியடிப்பு!

நேரடித் தகவல்கள்

## தில்லி இயக்குநருடன் நேர்காணல்

## மகேஸ்வரனுக்கு உயிராபத்து

நாட்டிலிருந்து வெளியேறுகிறார்




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்


## அன்புகாட்டு அமைதி கிடைக்கும்

"இறைவன் நமக்குள் இருக்கிறான். அவனிடம் கபடமற்ற தூய்மையான மனத்துடன் பிரார்த்தனை செய். அவன் எல்லாவற்றையும் நாம் அறியுமாறு செய்வான். அகங்காரத்தை விட்டுவிட்டு அவனிடம் சரண் அடை. எல்லா வற்றையும் பெறுவாய்.

வேறொரு வீடுதேடி வீணிலே அலைய வேண்டாம்;
மாறுதல் இன்றி உன்றன் மனையிலே வாழ்வாய் நெஞ்சே.

"வெளி உலகில் மக்களோடு பழகும்போது எல்லோரிடமும் அன்பு காட்டு. அவர்களோடு ஒன்றாகக் கலந்து நன்கு பழகு. வெறுப்பு மனப்பான்மை கொள்ளாதே. 'அவன் உருவக் கடவுளை நம்புகிறான்; அருவக் கடவுளை நம்புவதில்லை. இவன் அருவக் கடவுளை நம்புகிறான்; உருவக் கடவுளை நம்புவதில்லை! அவன் ஹிந்து, இவன் முஸ்லிம், அவன் கிறிஸ்தவன்' என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு மக்களை வெறுக்காதே. இறைவன் யாருக்கு எப்படிக் கற்பிக்கிறானோ அதற்கேற்ப மனிதர்கள் வெவ்வேறு மன இயல்பு உடையவர்கள் என்பதை அறிந்துகொள். இவ்வாறு அறிந்து, முடிந்தவரை அவர்களோடு பழகு; அவர்களிடம் அன்பு காட்டு. அதன் பிறகு உன் சொந்த மனநிலையில் இருந்து சாந்தியையும் ஆனந்தத்தையும் அநுபவி. அறையில் ஞான விளக்கேற்றி அன்னை பிரம்மமயியின் முகத்தைப் பார். உன் உள்ளமாகிய வீட்டில் இறைவனது உண்மையான வடிவத்தைப் பார். காண்பாய்!

- ஸ்ரீ ராமகிருஷ்ணர்



## மனிதன் பாவியாக இருப்பதை கடவுள் விரும்புவதில்லை

தாம் படைத்த இவ்வுலகில் மனுக்குலம் பாவ இருளின் அதிகாரத்துக்குள் சிக்குண்டு தவித்துக்கொண்டிருப்பதைக் கண்ணோக்கின கடவுள், மீட்புக் கொடுக்க வேண்டும் என்ற "மாபெரும் இரக்கத்தின்" காரணத்தால் மனித ரூபம் எடுத்து உலகிற்கு வந்து, மனிதனுக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் மனிதனுக்கு விரோதமாகவும், இருந்த சகல கையெழுத்துக்களையும் குலைத்து சிலுவையின் மேல் ஆணியடித்து துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, அவை மனுக்குலத்தின் நடுவில் இராதபடிக்கு எடுத்து வெளியரங்கமான கோலமாகி சிலுவையின் மேல் வெற்றி சிறந்தார். இந்த மீட்பர் இன்றும் உயிரோடு இருக்கிறார். இறுதி நாளில் மண்ணில் வந்து நிற்பார். இதை விசுவாசிக்கிற மனிதர்கள் யாவரும் பரலோகம் செல்வார்கள். (Bible கொலோசியன் 1:1 - 4:18) வரை.

–சகோ.ப.பன்னீர்செல்வம், யாழ்.

## அல்குர் ஆனின் மகத்துவம்

அல்குர் ஆன், மனிதர்களுக்கு வழிகாட்டவென இறைவனால் அனுப்பி வைக்கப்பட்ட புனித வேதமாகும். ஒரு மனிதன் அதனைப் படிக்கின்றபோதும், ஓதுகின்றபோதும், அவனின் உணர்வுகள் கிளர்ச்சியடைந்து அமைதியடைகின்றன. அதன் மூலம் மனிதன் ஆன்மீகப் பயிற்சியொன்றையும் பெற்றுக்கொள்கின்றான். எனவே, எந்த நேரமும் குர்ஆனைத் தமது வழிகாட்டியாக நம்புகிறவர்கள் இக் கொள்கையைக் கடைப்பிடித்தல் கட்டாயமாகும்.

* அல்லாஹ்தஆலா கூறுகின்றான்:
நீங்கள் குர்ஆனை ஆராய வேண்டாமா? (அப்படிச் செய்யாமலிருக்க) உங்கள் இதயங்களில் அதற்கான பூட்டுக்கள் போடப்பட்டிருக்கின்றனவா?

(அல்குர்ஆன்)

* மேலும் இறைவனின் வேதத்தை நினைவூட்டுவதன் மூலம் உள்ளங்கள் அமைதியடைகின்றன.

(அல்குர்ஆன்)

வேப்பங்குளம், முஹிடீன் ஏ. றாசிக்

## கவிதைப் போட்டி இல.568



### பரிசுக்குரிய கவிதை

### புரியவில்லை

படத்திலுள்ள காட்சி
விளையாட்டா வெற்றியா
தெரியவில்லை,
நம் நாட்டில் நடப்பது
சமாதானமா யுத்தமா
புரியவில்லை.

– வானு,
ஆனந்தபுரி,
திருகோணமலை.

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### நட்பை அறியாத நண்பா

நட்பை அறியாத
நண்பனிடம் வைக்கும்
அன்பை விட
நன்றியுள்ள நாய்க்கு
வைத்தால்' – நன்றியை
வைத்து நன்மையை
செய்யும்.

– வ. ருசாந்தன்,
தாண்டியடி.

### சாண் வயிறு

நன்றி உள்ள
நாயைக் கொண்டு
சாகசம் புரிவது
சாண் வயிற்றுக்கே.

– எம்.சி. கலீல்,
72, ஹனிபா வீதி,
கல்முனை – 05.

### சொல்லுங்கள்?

ஒரு நாள் பழகி – நாம்
பல நாள் தவறு
செய்தாலும்...
வாழ்நாள் எல்லாம்
நன்றி மறவா – இந்த
நாய்கள் நல்லதா?
இல்லை – பல நாள் பழகி
ஒருநாள் அறியாது
தவறு செய்தால்
மறுநாளே...
கொன்றொழிக்கும் – அந்த
மனிதர்கள் நல்லவர்களா?

– எஸ். நாகேந்திரன்,
ஆரையம்பதி – 03

### கவனம்!

மிருகங்களோடு
பழகும்
குழந்தைகள்
மனிதர்களாகலாம் –
ஆனால்
மனிதர்களோடு
பழகும்
குழந்தைகளோ
மிருகங்களாகலாம்.
கவனம்!

– அ. சந்தியாகோ,
கண்டி.

### குழந்தை

எக்கவலையோ எதிர்பார்போவின்றி
தன் செல்லப் பிராணியுடன் கொஞ்சிக்
குலாவும் வெள்ளையுள்ளம் கொண்ட
இவ்விளம் பிஞ்சினைப் போல் நாமும்
இருந்திருந்தால் ஒருவேளை,
இவ்வுலகம்
படும் பாட்டை உணராமலே
இருக்திருக்கலாம்.

– டி. லெவனா,
இல. 90, ஜெயந்திபுரம்,
மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.571



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 24.07.2004

கவிதைப் போட்டி இல்.571
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### ஒப்பீடு!

மனிதன் சொன்னான்
"பல நாய்களில்
சில நாய்களுக்கு நன்றியுள்ளது"
நாய்கள் சொல்லியது;
மனிதர்களுக்குள்ளே
மனிதர்களை காண்பது
கஷ்டமாகவுள்ளதே!"

– ஏ.எப்.எம். றியாட்,
391ஃயு – 07,
முள்ளிப்பொத்தானை.

### நடப்பதைப் பார்க்க...

சமாதானப் புறாவும்
தப்புமுன் மடிந்தது
மன்றத்தில் மல்லுகள்
அகப்பட்ட தேரர்
மரணத்தின் விளிம்பில்
தில்லு முல்லு வேலைகள்
தினமும் புதிதாய் நம் நாட்டில்
நாட்டில் நடப்பதைப் பார்க்க
நாய்க்குக் கூட வாந்தி வரும்.

– சீ. தங்கவடிவேல்,
அரசினர் வைத்தியசாலை,
மட்டக்களப்பு.

### விதி

பணக்கார வீட்டுச் சிறுவனுக்கும் நாய்க்கும் இருக்கும் குதூகல சந்தோசமும் சுதந்திரமும்

ஏனோ ஏழைய வீட்டுச் சிறுவனுக்கு கல்வியில் கூட இல்லை.

அவன் விதி துஷ்பிரயோகங்களும் துன்புறுத்தல்களும் சுதந்திரமாக கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

– வ. சந்திரபிரசாத்,
மாமாங்கம்.

### சமாதானம்

எள்ளி நகையாடும்
இம்
மானுட உலகில்
நாய் துள்ளிக்
குதிக்கின்றதே.
சமாதானம் பிறக்கும்
என்றா?

ஐ.எஸ்.எம் லபர்
பறகஹதெனியா.

# உங்கள் பக்கம்

## எங்கள் பிரச்சினை

பதுளை மாவட்டத்திலுள்ள தெமோதரை நெதர்வில் பிரதேசத்தில் வாழும் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பல. இங்கு எந்தத் தேவைக்கும் தண்ணீர் வசதி அறவே கிடையாது. மிகவும் தொலை தூரம் சென்று தண்ணீர் கொண்டுவந்துதான், தமது பொதுத் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டியுள்ளது. கடுமையான வெயில் காலத்தில்போது மட்டும் தோட்ட அதிகாரியின் அனுமதியுடன் வண்டியில் தண்ணீர் கொண்டுவந்து தரப்படுகிறது. இப் பிரதேசத்திலிருந்து 290 அடி தூரத்திலுள்ள மின்சாரம் எமக்கு எட்டாக் கனியாகவே உள்ளது. எமது பகுதிக்கு மின்சாரம் வழங்க ஏன் இவ்வளவு தாமதமோ தெரியாது. இங்கு வாயில்லா பூச்சிகளின் வார்த்தைகள் முடக்கப்படுகின்றன. இவை தொடர்பான பொறுப்புள்ள அதிகாரிகள் கூடிய கவனம் எடுத்து எமது பிரதேசத்துக்குத் தண்ணீரும் மின்சாரமும் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

– இவ்வண்ணம்
கோ. சிவநேசன்,
தெமோதரை.




### வண்ண முரசு!

வற்றாத மலை ஊற்று
மங்காத செங்கதிர்.
ஓயாத அலை ஓசை
கொட்டோ கொட்டென்று
அதிர்ந்திடும் வீரமுரசே!
திக்கெட்டும் இசை பரப்பி
வாசகர் நெஞ்சில் இதம்
பரப்பி இனித்திடும் தினமுரசே!
வெள்ளி வந்தால் - என் வீட்டில்
தவழ்ந்திடுவாய் எல்லோர் கையிலும்
நெஞ்சங்களுக்கு தலைவணங்காத் தமிழ்
தரணியில் உதித்திடுவாய்
வண்ணமுரசே!
வாழ்க உன் பணி!
வளர்க உன் சேவை!!

– உன் வாசகன்
மணிவேல்ருத்ரா,
மாத்தளை.

## வாசக[ர்] சாலை

தினமுரசின் அதிர வைக்கும் பக்கங்களைப் புரட்டியபோது சிலிர்த்து நிற்கும் என் எண்ணங்களை வாசகர் பகுதியில் பகிர்ந்துகொள்வதில் விருப்பமடைகிறேன். அரசியலில் புகுந்து மக்களையும் நாட்டையும் பொய்மைப்படுத்தும் சில விடயங்களில் "மகேஸ்வரனும் மனோவும்" அரசியலுக்குள் மல்யுத்தம் என்ற மதியூகியின் ஆக்கம் அவர்களின் உள் பூசல்களையும் கபடத் தன்மையையும் அக்கு வேறு ஆணி வேறாகக் காட்டிய விதம் அவர்களின் போலித் தன்மையைப் புரிய வைக்கிறது! அத்தோடு முடியவில்லை. "தர்மசங்கடத்தில் சமரசம்" என்று எக்ஸ்றே ரிப்போர்ட்டியில் நரன் விளாசிய விதமும் வன்னிப் புலிகளின், சவால்களுக்கு கருணா அம்மான் எப்படி முகங்கொடுத்து வருகிறார் என்பதை விளக்கிய விதமும் உண்மையான சூழ்நிலையைப் புலப்படுத்துகிறது. வழமையான அதிரடியாரின் அலசலும் காதில பூ கந்தசாமியின் நளினப் பேச்சும் சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கிறது!

– இலக்கியா.

### "கிரிக்கெட்ஸ்" இப்போது கிரிக்கெட்!

பட்டி தொட்டி எல்லாம் பரவலாகப் பேசப்படும் கிரிக்கெட் என்ற விளையாட்டு அக் காலத்தில் "கிரிக்கெட்ஸ்" என அழைக்கப்பட்ட அபூர்வத் தகவலை 568ஆவது இதழில் "கிரிக்கெட்டின் வரலாறு" என்ற தலைப்பில் முரசே முதலில் முன்வைத்தது.

வாசகர்கள் வரலாற்றுச் சம்பவங்களை அறிய வேண்டுமென்றால் முரசுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

ஆடு மேய்க்கும் இளைஞர்களால் அப்போது ஆரம்பமான "கிரிக்கெட்ஸ்" இப்போது "கிரிக்கெட்."

– எம். சி. கலீல்,
72, ஹனிபா வீதி,
கல்முனை – 05.

### உன் சேவை எங்களுக்குத் தேவை

மலர் மொட்டு
மனம் விட்டு
மலரும் முரசில் பட்டு
இதைத் தொட்டு
எழுதுவது கவி மெட்டு
முரசின் விழி பட்டு.

முரசே! நீ வாரந்தோறும்
சுமந்து வரும் விடயங்கள்
என்னை மட்டுமல்ல, உன்
வாசகர்களாகிய
பல்லாயிரணக்கணக்கான
வாசகர்களின் மனதில்
குளிரூட்டி வியக்க வைத்துச்
செல்லும் உனக்கு என்
சார்பாகவும், உன்
இரசிகர்கள் சார்பாகவும்
பலகோடி நன்றிகளைக்
கூறிக்கொண்டு, உன் சேவை
எங்களுக்குத் தேவை, எனக்
கேட்டுக்கொள்ளும் உன்
ரசிகன்.

– எஸ்.எம்.எம். நாஸீர்,
இல. 79, பிரதான வீதி,
பண்டாரவளை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# சகோதரப் படுகொலைகளைத் தடுப்பதற்காகவே

# கருணா அணியுடன் தொடர்பு என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

"பிரபாகரனுக்கும் கருணாவுக்குமிடையிலான பிணக்குகளைத் தீர்ப்பதற்குச் சந்தர்ப்பம் கிட்டியிருக்குமானால் நிச்சயமாக அந்த முயற்சியில் நான் ஈடுபட்டிருப்பேன். ஆனால், அந்த வாய்ப்பு இப்போது இல்லாததால், ஒரு சகோதர யுத்தத்தைத் தடுப்பதற்காகவே நான் கருணாவுடன் தொடர்புகொண்டுள்ளேன். கருணா அணியினரை நல்வழிப்படுத்தும் முயற்சியிலேயே ஈடுபட்டுள்ளேன்" என்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கூறினார். கருணாவுக்கும் தமக்குமிடையிலுள்ள பிரச்சினை உள்வீட்டுப் பிரச்சினை. இதில் யாரும் தலையிடக் கூடாதென்று புலிகள் கூறுகிறார்களேயென்று கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு சொன்னார். 1985இல் ரெலோவின் தாஸ் குழுவினர் புலிகளைத் தேடியலைந்தபோதும் இதே மாதிரி தாஸ், இது இரண்டு இயக்கங்களுக்கிடையிலான பிரச்சினை, தலையிட வேண்டாமென்று என்னிடம் வலியுறுத்திக் கூறினார். அப்போது கிட்டு, தற்போதைய கடற்புலிகளின் தளபதி சூசை மற்றும் புலி முக்கியஸ்தர்கள் பலர் தலைமறைவாக இருந்தனர். எனினும் இதில் தலையிட்டதால் பல புலிப் போராளிகளை அன்று காப்பாற்ற முடிந்தது. இதேபோன்று பின்னர் ரெலோ இயக்கத்துக்குள் தாஸ் - பொபி பிரச்சினை ஏற்பட்டு, தாஸ் குழுவினரின் கொலை நடந்த கையோடு ஏற்பட்ட பிரச்சினையைத் தடுக்க நாம் தலையிட்டோம். வடமராட்சியிலிருந்து அப்போது ஒரு ஊர்வலம் புறப்பட்டது. இது உள்வீட்டுப் பிரச்சினை; தலையிட வேண்டாமென்று பொபி கூறினார். ரெலோ தலைவர் சிறீ சபாரத்தினத்தோடு எனக்கிருந்த நல்லுறவையும் பொருட்படுத்தாமல் நான் தலையிட்டதால் பல தமிழ் இளைஞர்களின் உயிர்களைப் பாதுகாக்க முடிந்தது என்றும் அவர் கூறினார்.

கருணாவோடு நீங்கள் கொண்டுள்ள தொடர்பு காரணமாகவே உங்கள் மீது புலிகள் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்த முயற்சியெடுத்தனரென்று கூறப்பட்டதேயென்று கேட்டபோது,

கருணா, பிரபாகரனோடு இணைந்திருந்த காலப்பகுதியிலேயே என் மீது தாக்குதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1995ஆம் ஆண்டு எமது கட்சி அலுவலகத்தில் வைத்து என் மீது புலிகள் கமாண்டோ தாக்குதல் முயற்சியில் ஈடுபட்டனர். அதில் எமது தோழர்கள் நால்வர் கொல்லப்பட்டனர். களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ் கைதிகளைப் பார்வையிடச் சென்ற என் மீது படுமோசமான கொலைத் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 2002ஆம் ஆண்டு புலிகளுக்கும் அரசுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, இரு தரப்பினாலும் கைதிகள் பரிமாறப்பட்டபோது, என்னைத் தாக்கியவரைத்தான் புலிகள் முதலாவதாகச் சிபார்சு செய்து விடுவித்துக் கொண்டனர். அப்போதெல்லாம் புலிகளை விட்டுப் பிரிந்து வந்த எவருடனும் நான் தொடர்புகொள்ளவில்லையே என்றார் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம்.

உங்கள் மீது குறிவைக்கப்பட்ட கொள்ளுப்பிட்டித் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கும் புலிகளுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லையென்றும், இது சமாதான விரோதிகளின் செயலென்றும் தமிழ்ச்செல்வன் கூறியுள்ளாரேயென்று கேட்டபோது,

ராஜிவ்காந்தி, பிரேமதாசா, நீலன் திருச்செல்வம் உட்பட நடைபெற்ற பல தற்கொலைத் தாக்குதல்களுக்குப் புலிகள் இதுவரை உரிமை கோரவில்லை. சமாதான காலத்திலேயே நூற்றுக்கு மேற்பட்ட படுகொலைகளைப் புலிகள் புரிந்துள்ளனர். எதற்குமே அவர்கள் உரிமை கோரவில்லையே. இது அவர்களின் வழமையான பல்லவிதான் என்றார் அவர்.

## அரசுடன் இ.தொ.கா.?

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசில் இணைந்துகொள்வதா? இல்லையா? என்பது பற்றிக் கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற இ.தொ.கா. அரசியல் உயர்பீடக் கூட்டத்தில் காரசாரமான விவாதம் நடைபெற்றபோதும் அரசுடன் தமது கட்சி இணைந்துகொள்வதை அதிகமானோர் ஆதரித்துப் பேசினர் என்று அக் கூட்டத்தில் கலந்துகொண்ட முக்கியஸ்தரொருவர் தெரிவித்தார். "வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைகள் வேறு; மலையகத் தொழிலாளர்கள் காலங்காலமாக முகங்கொடுத்து வரும் பிரச்சினைகள் வேறு. எனவே, அமரர் தொண்டமான் காலத்திலிருந்தே பின்பற்றி வந்த நடைமுறையைக் கைக்கொண்டு அரசுடன் இணைந்து மலையக மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும்" என்று அங்கு வலியுறுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார். எனினும் இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் இ.தொ.கா தலைவர் ஆறுமும் தொண்டமானுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார்.

## வழமை போன்ற வன்னிப் பேச்சு

கொழும்பிலுள்ள நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் கிளிநொச்சியில் சமாதான முன்னெடுப்பு, யுத்த நிறுத்தம், கருணா விவகாரம், மட்டக்களப்பு நிலைமை, கொள்ளுப்பிட்டிக் குண்டு வெடிப்புத் தாக்குதல் உட்படப் பல்வேறு விடயங்கள் பற்றிக் கடந்த 13ஆம் திகதி தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினார். சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நீடித்த இக் கலந்துரையாடலின்போது அரசாங்கத்தின் சமாதான நிலைப்பாடு குறித்தும் ஹான்ஸ் பிரஸ்கர் விளக்கினாரென்று கிளிநொச்சித் தகவல்கள் தெரிவித்தன. தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமுமில்லையென்று மீண்டும் வலியுறுத்திய தமிழ்ச்செல்வன், யுத்த நிறுத்தத்தைப் பேணுவோமென்று உறுதியளித்ததாகவும் கிளிநொச்சித் தகவல்கள் தெரிவித்தன. எனினும் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதற்கான ஆக்கபூர்வமான முடிவெதுவும் எடுக்கப்படவில்லையென்றும் அவ்வட்டாரங்கள் கூறின.

## விரைவில் விடுதலை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுவிப்பதற்கான முயற்சிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. நீதிச் சேவை ஆணைக்குழுவின் உத்தரவையடுத்து வழக்குத் தாக்கல் செயவதற்குப் போதிய சாட்சியங்கள் இல்லாத இளைஞர்கள் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளனரென்று ஆணைக்குழுவின பேச்சாளரொருவர் கூறினார். பெரும்பாலான இளைஞர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனரென்றும் சுமார் இருபத்தி ஐந்து வழக்குகள் மட்டுமே நீதிமன்ற விசாரணைகளில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## அமெரிக்காவில் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்கள் திணறல்

அமெரிக்கா சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களான இரா. சம்பந்தனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அங்கு மூக்குடைபட்டுத் திரும்பியுள்ளனரென்று வாஷிங்டனிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. வாஷிங்டனுக்கு அண்மையிலுள்ள பால்டிமோர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கலாசார விழாவில் கலந்துகொள்ளும்படி அங்குள்ள தமிழ்ச் சங்கங்கள் விடுத்த அழைப்பையேற்று இவர்கள் அமெரிக்காவுக்கு சென்றிருந்தனர். புலிகள் மீது அமெரிக்கா விதித்திருக்கும் தடையை மீளாய்வு செய்யக் கோருவதற்கும் புலிகளின் தன்னாட்சி அதிகார சபையை வலியுறுத்துவதற்கும் அமெரிக்க விஜயத்தைப் பயன்படுத்த நினைத்திருந்த இவர்களுக்குக் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடந்த ஏழாம் திகதி இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் பேரிடியாக அமைந்துவிட்டது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான கிறிஸ்டினா ரொக்காவைச் சந்தித்துப் பேசியபோது கிட்டத்தட்ட அரை மணித்தியாலம் புலிகளின் வன்செயல் நடவடிக்கைகளைக் காரசாரமாகக் கண்டித்தாரென்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தன்னைச் சந்தித்த இலங்கைத் தமிழர்களிடம் தெரிவித்தார். காதுக்குள் பஞ்சை அடைத்துக்கொண்டு இருக்க வேண்டும் போல் தமக்குத் தோற்றியதாகவும், கஜேந்திரகுமார் கூறினார். புலிகள் கொள்ளுப்பிட்டித் தாக்குதலை நடத்தவில்லையென்று மறுத்திருக்கிறார்களேயென்று நீங்கள் கூறியிருக்கலாமேயென்று நண்பரொருவர் கேட்டபோது, நமட்டுச் சிரிப்போடு நழுவினாரென்று வாஷிங்டன் தகவல்கள் கூறுகின்றன. புலிகள் மீது கண்டனம் தெரிவித்துவரும் ரொக்காவிடம் வாய் திறக்க முடியாமல் மௌனித்துப் போன சம்பந்தரிடமும், கஜேந்திரகுமாரிடமும் புலிகள் வன்செயல்களைக் கைவிடுகிறார்களென்றால் அதை செயலில் நிருபித்துக் காட்டுமாறு கூறுங்கள் என்றும் காட்டமாகக் கூறினாராம். அதுமட்டுமல்ல அமெரிக்காவிலிருந்து, கனடா புறப்பட்டுச் சென்ற சம்பந்தர் விமான நிலையத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதால் விமானத்தைத் தவறவிட்டு மறுவிமானத்தில் பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டமையும் குறிப்பிடத் தக்கது. கொள்ளுப்பிட்டியிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்குச் சற்றுத் தொலைவில் இக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுச் சில மணித்தியாலங்களுக்குள் புலிகள் மீது தமது கண்டனத்தைத் தெரிவிக்கும் அறிக்கையை இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டமை குறிப்பிடத் தக்கது. எல்லாவற்றுக்கும் மேலாக வாஷிங்டனிலுள்ள கேந்திர மற்றும் சர்வதேச ஆய்வுகளுக்கான நிலையத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள் புலி இயக்கம் பற்றி விடுத்த கேள்விக் கணைகளுக்குப் பதிலளிக்க முடியாமல் இவர்கள் திக்குமுக்காடிப் போனார்கள். இலங்கையில் முன்னர் அமெரிக்கத் தூதுவராகக் கடமையாற்றிய தெரசிதா ஷாபர் ஏற்பாடு செய்திருந்த இக் கூட்டத்தில் முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ஷோன் டொனலி, அமெரிக்காவில் முன்னர் இலங்கைத் தூதுவராகக் கடமையாற்றி வரும் பத்திரிகையாளருமான ஏர்னஸ்ற் கொரியா, புலிகளின் சர்வதேச சட்டக் குழுவைச் சேர்ந்த வி. ருத்ரகுமாரன் உட்படச் சுமார் முப்பது பேர் கலந்து கொண்டனர். "புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்பிய இயக்கமென்றால் வன்செயல் முயற்சிகளில் இறங்குவது ஏன்" என்ற கேள்விக்கு அரசின் மீதும் கருணா அணி மீதும் கண்டனங்களைத் தெரிவிக்க முனைந்த சம்பந்தனிடம் சரமாரியான கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டதால் அவர் திக்குமுக்காடிப் போனார். "புலிகளால் முன்னர் நீங்கள் மிரட்டப்படவில்லையா?" என்றும் மற்றொரு கேள்வி சம்பந்தரிடம் கேட்கப்பட்டபோது, அவரால் மௌனம் சாதிக்க மட்டுமே முடிந்தது என்றும் வாஷிங்டன் பத்திரிகையாளரொருவர் கூறினார்.

## ஆட்கொணர்வு மனுக்கள் தாமதமாகக் காரணம்

சாவகச்சேரி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட பல்வேறு ஆட்கொணர்வு மனுக்களில் பல தடவைகள் ஆஜராகாத இராணுவ அதிகாரியொருவரை அடுத்த கட்ட விசாரணையின்போது கட்டாயம் ஆஜராக வேண்டுமென்று நீதவான் பணித்தார். இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமல்போன பதினாறு பேரின் வழக்குகள் அடுத்த தவணை எடுக்கப்படும்போது ஆஜராக வேண்டுமென்று துமிந்த கெப்பற்றிபொல என்ற இராணுவ அதிகாரிக்கு உத்தரவிடப்பட்டது. இதேவேளை, அரச சட்டத்தரணிகள் 22 ஆட்கொணர்வு மனுக்களில் ஆஜராகத் தவறியதால் விசாரணைகள் தாமதமாவதாக நீதவான் தெரிவித்தார்.

## மனித நேய அமைப்பு கோரிக்கை

தமிழ் மக்களுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கும் அநாமதேயப் பிரசுரங்களைப் பகிரங்கமாக விநியோகிப்பவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா மனிதநேய அமைப்பு பொலிஸாரைக் கேட்டுள்ளது. தமிழீழத்தின் விடுதலைக்கு விரோதமாகச் செயற்படும் சமூக விரோதிகளை அழிக்க நாம் தயங்க மாட்டோமென்று வவுனியாவில் 'பண்டார வன்னியன் படை' என்ற பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரமொன்றில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்படுவதற்கு இரு தினங்கள் முன்னதாக இப் பிரசுரங்கள் பரவலாக விநியோகிக்கப்பட்டுள்ளன. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை அழிப்பதற்கும் தமிழினத்தைச் சிதைப்பதற்கும் எதிரிகள் மேற்கொள்ளும் இராணுவ, அரசியல், புலனாய்வு தந்திரோபாய அணுகுமுறைகளுக்கு உட்பட்டுச் செயற்படுவோர் மன்னிக்கப்பட மாட்டார்களென்றும் அத் துண்டுப் பிரசுரம் கூறுகிறது.

## கனடாவிலும் அநாமதேய பிரசுரங்கள்: மொன்றியல் பொலிஸார் தீவிர விசாரணை

'ஈழத்தின் பற்றாளர் படை' என்ற பெயரில் இரு வாரங்களுக்கு முன்னர் இரவு வேளையில் மொன்றியலிலுள்ள இலங்கைத் தமிழர்களின் கடைகள், நிறுவனங்களுக்கு முன்னால் போடப்பட்ட அநாமதேயத் துண்டுப் பிரசுரங்கள் பற்றி மொன்றியல் இரகசியப் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். கனடாவிலுள்ள உலகத் தமிழர் இயக்கத்துக்குள் விசமிகளும் துரோகிகளும் இணைந்து செயற்படுகின்றனரென்றும் இவர்களுக்கு விரைவில் மரண தண்டனை விதிக்கப்படுமென்றும் வழமையான பாணியில் தமிழில் விடுக்கப்பட்டிருக்கும் இத் துண்டுப் பிரசுரம், கனடியப் பொலிஸாரிடம் சிக்கியுள்ளது. சம்பந்தப்பட்டவர்களைத் தேடிப் பிடித்துச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கென விசேட பொலிஸ் கோஷ்டியொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் ஏற்கெனவே விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் கனடியத் தமிழ் அமைப்பொன்றினைச் சேர்ந்த எஸ். தெய்வேந்திரன் என்பவர் அறிவிக்கிறார். புல்லுருவிகள் களைந்தெறியப்படுவார்களெனத் தெரிவிக்கும் இப் பிரசுரத்தில், விரைவில் மரண தண்டனை காத்திருக்கிறதெனத் தெரிவித்து, எட்டு இலங்கைத் தமிழ் இளைஞர்களின் பெயர்களும் பிரசுரத்தின் அடியில் குறிப்பிடப்பட்டுள்ளன. லண்டனில் கடந்த வாரம் இருபதுக்கு மேற்பட்ட இலங்கைத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். வன்செயல் முயற்சிகள், தாக்குதல்கள் ஆகியவற்றில் ஈடுபட்டார்களென்று சந்கேத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருக்கும் இவர்களுக்கும் கனடாவிலுள்ள தமிழ் இளைஞர்களுக்குமிடையில் தொடர்புகள் ஏதும் இருக்குமாவென்பதைக் கண்டறிவதற்காக மொனறியல் பொலிஸார், லண்டன் பொலிஸாருடன் தொடர்பு கொண்டுள்ளனர். இந்தப் பிரசுரங்கள் அரசியல் நோக்குக் கொண்டவையா அல்லது வெறுமனே மிரட்டல் தன்மை கொண்டவையாவெனக் கண்டறிவதற்காக இலங்கைத் தமிழர்கள் பெருமளவில் வாழும் ஸ்காபரோ பகுதியிலும் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

## இந்தியா உறுதி

இலங்கை விவகாரம் தொடர்பாக நோர்வே அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இந்தியா உறுதியான ஆதரவு வழங்குமென்றபோதிலும், புலி இயக்கத் தலைவர் பிரபாகரனை நாடுகடத்தக் கோரும் தமது நிலைப்பாட்டைத் தாம் விட்டுக்கொடுக்கப் போவதில்லையென்று இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தையைக் குழப்புவதற்கு என்றுமே தாம் இந்த நாடு கடத்தல் கோரிக்கையைப் பயன்படுத்த மாட்டோமென்றும் அவர்கள் கூறினர். கடந்த வாரம் புதுடில்லிக்கு விஜயம் செய்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீட்டர்சனிடம் இவ்வாறு இந்திய அதிகாரிகள் உறுதியளித்தனர்.

## கொரியாவில் மன்னார் அணி

சர்வதேச அமைப்பினால் தென் கொரியாவின் தலைநகரான சியோலில் இவ்வாரம் நடத்தப்படும் சர்வமத சமாதான விளையாட்டு விழாவில் கலந்துகொள்ள மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியப் பாடசாலையின் 19 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களின் அணி புறப்பட்டுச் செல்கிறது. கடந்த வருடம் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் சாம்பியன் பட்டத்தை இந்த அணி பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது. பல்வேறு போட்டிகளில் கலந்துகொள்வதற்காக உலக நாடுகளிலிருந்து எழுபது குழுக்கள் சியோல் சென்றுள்ளன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியையடுத்து மன்னார் சவேரியார் பாடசாலைக் குழு செல்வதற்குக் கடந்த வாரம் ஐந்து இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## சமாதானப் பேச்சுக்கு பாங்கொக் சென்ற எனக்கு ஆயுதப் பட்டியல் அனுப்பியவர் பிரபா! - கருணா

இலங்கை அரசுக்கும் - புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை தாய்லாந்தில் நடைபெற்றபோது புலிகளின் ஆயுதக் கொள்வனவாளர் குமரன் பத்மநாபனை பாங்கொக்கில் சந்தித்து, பிரபாகரன் அனுப்பி வைத்த கொள்வனவு செய்ய வேண்டிய ஆயுத விபரப் பட்டியலை அவரிடம் கையளித்தாரென்று கருணா அம்மான் தெரிவித்துள்ளார். புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவில் ஓர் அங்கத்தவராக கருணா தாய்லாந்து சென்றிருந்தாரென்பது குறிப்பிடத் தக்கது. "அப்போதெல்லாம் சமாதான முயற்சியில் எனக்கு அக்கறை இருக்கவில்லை. ஆயுதங்கள் கொள்வனவு செய்வதிலேயே நான் கூடிய கவனம் செலுத்தினேன்" என்றும் அவர் சொன்னார். "பிரபாகரனுக்கு பேச்சுவார்த்தை மூலம் தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நம்பிக்கையில்லை. அவர் யுத்தமொன்றுக்கே தன்னைத் தயார்படுத்துகிறார். புலிகளுடன் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியதில் பயனில்லை. ஆயுதப் போராட்டத்தின் மூலம் தமிழ் மக்களுக்கெனத் தனி நாடு கிடைக்கப் போவதில்லை" என்று கூறிய அவர், "பிரபாகரன் தொடர்ந்தும் கிழக்கு மாகாண மக்களை சோதிக்க முனைந்தால் அவருக்கெதிராக அவர்கள் கிளர்ந்தெழுவார்கள்" என்றும் சொன்னார்.

## அவுஸ்திரேலியாவும் நீக்காது

"அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் வெளிநாட்டு பயங்கரவாத இயக்கப்' பட்டியலிலிருந்து புலிகள் இயக்கத்தின். பெயர் நீக்கப்படமாட்டாது" என்று அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் அலெக்சாண்டர் டவுனர் கடந்த 12ஆம் திகதி அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலே மேற்கண்டவாறு சொன்னார். சகல இலங்கை மக்களின் நலன்களையும் நீடித்துப் பாதுகாக்கக் கூடிய வகையில் இலங்கை அரசும் புலிகளும் உடனடியாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து, அதனை ஆக்கபூர்வமாக முன்னெடுக்க வேண்டும் என்றும் டவுனர் வலியுறுத்தினார்.

# முரசம்

## தேர்தல் தீர்ப்பு

*அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.*

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல்கள் மக்கள் தீர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளன. நடந்த ஆறு மாகாண சபைத் தேர்தல்களிலும் சுதந்திரக் கூட்டமைப்பு அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது. இதற்கு முன்னர் நிகழ்ந்த வயம்ப மாகாண சபைத் தேர்தலிலும் சுதந்திரக் கூட்டமைப்பே வெற்றியீட்டியிருந்தது குறிப்பிடத் தக்கது. தேர்தல் நடைபெறாத வடக்கு-கிழக்கு மாகாண சபையைத் தவிர ஏனைய அனைத்து மாகாண சபைகளிலும் இக் கூட்டமைப்பே வெற்றியீட்டியுள்ள நிலையில் தற்போதைய அரசியலரங்கத்தில் மக்களாதரவு சுதந்திரக் கூட்டமைப்பின் பக்கத்திலேயே உள்ளதென்பதை உணரக் கூடியதாயுள்ளது. இத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுத் தளங்களெனக் கருதப்பட்ட கொழும்பு, கண்டி ஆகிய மாவட்டங்களும் சுதந்திரக் கூட்டமைப்பால் வெற்றிகொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆறு மாகாணங்களைச் சேர்ந்த 15 மாவட்டங்களில் நுவரெலியா மாவட்டத்தைத் தவிர்ந்த 14 மாவட்டங்களிலும் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றியீட்டியுள்ளது. நுவரெலியா மாவட்டத்தைப் பொறுத்தவரை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐ.தே.க.வுடன் இணைந்து யானைச் சின்னத்தில் போட்டியிட்டதனாலேயே அங்குகூட ஐ.தே.க.வால் வெற்றிபெற முடிந்துள்ளது. இத் தேர்தலில் மக்களின் வாக்களிப்பு வீதம் குறைவடைந்து காணப்பட்டதென்பது மற்றொரு விடயம். ஆனால், அவ் வாக்களிப்பு வீதத்தில் ஏற்பட்ட குறைவு எந்தத் தனியொரு தரப்பினரையும் தனியாகப் பாதிக்கும் விடயமல்ல. சகல தரப்பினரையும் சமமாகப் பாதிக்கும் விடயமே. அதனால் இவ் வாக்களிப்புக் குறைவைக் காரணங் காட்டி சுதந்திரக் கூட்டமைப்பு ஈட்டிய தேர்தல் வெற்றியைக் குறைத்து மதிப்பிட முனைவது தவறான ஊடகப் பார்வையாகும். அப்படிப் பார்க்கையில் இப் பகுதிகளில் ஐ.தே.மு. பாராளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளை விடக் குறைவான வாக்குகளைப் பெற்றுள்ளமையையும் எடுத்து நோக்க வேண்டும். ஆக மொத்தத்தில் மக்களின் விருப்பத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அத்தோடு மக்களின் இத்தகைய உணர்வலைக்கு உரிய காரணத்தையும் இத் தேர்தலில் தோல்விகண்ட தரப்பினர் எடுத்து நோக்க வேண்டும். உயர் வர்க்க, மத்தியதர வர்க்க வகுப்பினரை மட்டும் திருப்திப்படுத்தும் அபிவிருத்தி முயற்சிகளில், பாமர மக்கள் புறந்தள்ளப்பட்டுள்ளரென்பதே கடந்தகால உண்மையாக இருந்துள்ளது. அத்துடன் யுத்த நிறுத்தம், சமாதானம் என்பவை குறித்து முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் உரிய பலனெதையும் இதுவரை தராது இழுத்தடித்துச் செல்லப்படுவதன் காரணமாக அவை குறித்த சலிப்பு நிலை மக்களிடையே தோன்றியுள்ளது. சமாதானம் நிலவியபோதும் பொருளாதார நெருக்கடி, விலைவாசி என்பன பாமர மக்களை வாட்டுவனவாக இருந்துள்ளன. அத்துடன் பல்வேறு அமைச்சுக்களின் கீழும் நிகழ்ந்துள்ள ஊழல், மோசடிகள் குறித்து மக்கள் விசனமடைந்துள்ளார்கள். எவ்வாறாயினும் இவை கடந்த ஆட்சியாளர்களின் கொள்கைகள் செயற்பாடுகள் குறித்த தீர்ப்பாகவே கருத வேண்டும். புதிய ஆட்சியாளர்கள் முன்வைத்துள்ள கொள்கைகள், வேலைத்திட்டங்களென்பன இன்னமும் மக்கள் மத்தியில் பரீட்சித்துப் பார்க்கப்படவில்லை. ஏனெனில் இது இப்போதுதான் அமைக்கப்பட்டுள்ள ஆட்சி. அதனால் தமது கொள்கைகளுக்கும் வேலைத்திட்டங்களுக்கும் மக்கள் இத் தேர்தலின் மூலம் அங்கீகாரம் தந்துவிட்டதாக அவர்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது.

தங்கள் கொள்கைகள் மக்கள் நலன்களைப் பேணுபவையெனவும் வேலைத்திட்டங்கள் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பவையெனவும் நிரூபித்துக் காட்டவேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உண்டு. அதைப் பொறுத்தே இவ் ஆட்சியாளர்களை மக்கள் தொடர்ந்தும் ஆதரிப்பர். இதேவேளை இந் நாட்டில் நிலவும் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காணுவது ஆட்சியிலமரும் எவருக்கும் உரிய இன்றைய தலையாய கடமை என்பதையும் மனதிற் கொள்வது அவசியம்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# யுத்த நிறுத்தத்திற்குள் ஒரு யுத்தம்

இலங்கையின் நிலைமைகள் புதிய வடிவம் பெறுகின்றன. அரசியல் அரங்கம் மாற்றமெடுக்கின்றது. அதேவேளை யுத்த நிறுத்தம், சமாதானம் என்பவை குறித்த நிலைவரங்களும் மாற்றமடைகின்றன. இவை குறித்த சர்வதேச நாடுகளின் கண்ணோட்டத்திலும் ஈடுபட்டிலும் மாற்றங்கள் தோன்றும் நிலைமை ஏறபட்டுள்ளது.

மாற்றங்களென்பது அளவு ரீதியான மாற்றம், பண்பு ரீதியான மாற்றம் என இரு வகைப்படும். அளவு ரீதியான மாற்றங்கள் பண்பு ரீதியான மாற்றத்திற்கு வழிகோலும். அளவு ரீதியான மாற்றங்கள் நிகழும்போது மாற்றங்கள் நிகழ்வது வெளிப் பார்வைக்குத் தெரியாதிருக்கக் கூடும். ஆனால் மாற்றமற்று இருப்பது போலிருந்தாலும் உள்ளார்ந்த ரீதியாக மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டேயிருக்கும். இந்த மாற்றங்கள் அளவு ரீதியாக அதிகரித்து ஒரு நிலையை அடையும்போது அது பண்பு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தும். பண்பு ரீதியான மாற்றம் ஏற்படும்போது எமக்கு அம் மாற்றங்கள் துலாம்பரமாகத் தென்படும். ஏதோ திடீரென நிகழ்கின்ற அதிசயம் போலவும் அது தோன்றக் கூடும். ஆனால், இப் பண்பு ரீதியான மாற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக உள்ளார்ந்த ரீதியில் பல அளவு ரீதியான மாற்றங்கள் அமைந்திருப்பதைப் பலர் இனங்காணத் தவறிவிடலாம். அவர்களுக்கே இவை ஆச்சரியமானவையாகத் தோன்றும்.

இதனை நாம் இலங்கை நிலைவரத்தில் தெட்டத்தெளிவாக உணரலாம். இதனை தண்ணீர் கொதித்து ஆவியாவதற்கு ஒப்பிடலாம். தண்ணீரைச் சூடாக்கும்போது அது படிப்படியாகச் சூடேறிக்கொண்டு செல்லும். ஆனால், வெளிப் பார்வைக்கு தண்ணீர் மாற்றமேதுமின்றித் தண்ணீராகவே தெரியும். இது அளவு ரீதியான மாற்றமாகும். எனினும் ஒரு நிலையை அடைந்தபோது தண்ணீர் கொதித்து ஆவியாக மாறும். திரவ நிலையிலிருந்து ஆவி நிலைக்கு மாறும் இப் பண்பு ரீதியான மாற்றம் எமக்குத் தெளிவாகப் புலப்படும். எனினும் இதற்கு அடிகோலியவை வெளிப்பார்வைக்குத் தெரியாதிருந்த அந்த அளவு ரீதியான மாற்றங்களே. இலங்கை நிலைவரத்திலும் தற்போது பண்பு ரீதியான மாற்றங்களுக்கான அறிகுறிகள் தெரியத் தொடங்கியுள்ளன. ஆனால், பலரும் இவற்றுக்கு அடிகோலிய அளவு ரீதியான மாற்றங்கள் குறித்து அக்கறைப்படுவதாயில்லை.

கொழும்பு நகரில் கொள்ளுப்பிட்டியில் கடந்த வாரம் புதன் கிழமை (ஜூலை 7) வெடித்த தற்கொலைக் குண்டும் இப்படியான ஒன்றே. அளவு ரீதியாக ஏற்பட்டுக்கொண்டிருந்த மாற்றங்கள் பண்பு ரீதியாக உருமாறிய ஒரு நிகழ்வே. சமாதான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் நிகழும் முதலாவது தற்கொலைக் குண்டு வெடிப்பு என்ற வகையில் இது ஓர் அதிர்ச்சியான சம்பவமாயிருக்கலாம். ஆனால், இது வெறுமனே சடுதியாக நிகழ்ந்துவிடவில்லை. இந் நிகழ்வுக்கு வழிகோலும் வகையிலான அளவு ரீதியான பல தொடர் சம்பவங்களின் உச்ச நிலையில் ஏற்பட்டுள்ள பண்பு ரீதியான மாற்றம் இது.

யுத்த நிறுத்த உடன்பாட்டில் யுத்த நிறுத்த மீறலாகக் கருதப்பட்டவை எவையென அந்த உடன்பாட்டை எடுத்து நோக்கினால், அவற்றைக் கடந்து எவ்வளவு தூரத்துக்கு நிலைமை சென்றுவிட்டது என்பது புரியும். சாதாரண மக்களுக்கு ஏற்படுத்தப்படும் இன்னல்கள் யாவும் யுத்த நிறுத்த மீறல்களாகவே அவ் உடன்படிக்கையில் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால், இப்படியான இன்னல்கள் ஆரம்பித்தபோதும் யாவரும் மௌனித்திருக்கவே நேர்ந்தது. ஏனெனில், அவற்றை யுத்த நிறுத்த மீறல்களெனக் குற்றஞ்சாட்டினாலே யுத்த நிறுத்தத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிடும் என்ற கருத்தில். இந்தப் பிடிவாதமான மௌனத்தை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு மட்டுமன்றி அரசாங்கமும் கடைப்பிடித்தது. ஊடகங்கள் குறிப்பாக அரச ஊடகங்களையும் தமிழ் ஊடகங்களையும் பற்றிச் சொல்லத் தேவையில்லை. இறுதியில் யுத்த நிறுத்தத்தைக் காப்பாற்றுவதற்காக யுத்த நிறுத்த மீறல்கள் அனுமதிக்கப்பட்டன.

இதனால் பொதுமக்கள் மீதான இன்னல்கள் படிப்படியாகத் தொடர்ந்து ஒரு நிலைபேறான விதியாக சட்டமாக, நியதியாக வழமையான ஒன்றாக ஆகி அனுமதிக்கப்பட்டவையாக விளங்குகின்றன. அந்த வகையில் அரசாங்கத்துக்குப் புறம்பான வரிகள், கப்பங்கள், சட்டங்கள், நீதிமன்றத் தீர்ப்புகள், தண்டங்கள், தண்டனைகள் எல்லாம் இயல்பானவை மட்டுமன்றி இவற்றின் மீறல்கள்தான் குற்றங்களாகக் கருதப்படும் மனோபாவம் உருவாகியுள்ளது. இந் நிலையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் பொதுமக்கள் மீதான இன்னல்கள் குறித்துக் கூறப்பட்டவை எவையும் செல்லாக் காசாக அழிந்துபோயுள்ளன.

இவையும் அளவு ரீதியாக அதிகரித்து ஏற்பட்ட பண்பு ரீதியான மாற்றங்களே. யுத்த நிறுத்த மீறல்கள் என்ற வரையறைகள், யுத்தத்துக்கான போக்கினைக் கட்டுப்படுத்தவே வரையறை செய்யப்பட்டன. ஆனால், அவை தாண்டப்பட்டுச் செல்வதை யுத்தத்தை நோக்கிய சுவடுகளாகக் கண்டுகொள்ளத் தவறி அவற்றுக்கு நியாயாதிக்கம் வழங்கியதன் பெறுபேறுகள் அடுத்த கட்டங்களுக்கு நிலைமையை உயர்த்தின.

யுத்த நிறுத்த காலத்தில் உண்மையாகவே துப்பாக்கிகள் ஓய்ந்திருந்தனவா என்று கேட்டால், இல்லை. உண்மையில் துப்பாக்கிகள் படைகளுடன் மோதலிலிருந்து மட்டும் நிறுத்தப்பட்டிருந்தனவேயன்றி அவற்றுக்கு வேலை இருந்துகொண்டுதான் இருந்தது. யுத்த நிறுத்த காலத்தில் தொடர்ச்சியாகப் பல கொலைகள் நிகழ்ந்த வண்ணமேயிருந்தன. இக் கொலைகள் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் மட்டுமன்றி அவற்றுக்கு வெளியே, கொழும்பு, மலையகம் எனவும் விஸ்தரித்திருந்தன. இவை மாற்றுக் கருத்துள்ளவர்கள், மாற்றுக் கட்சிகளைச் சார்ந்தவர்கள் வேட்பாளர்கள், அரச படைகளுடன் இயங்கியவர்கள், அரச பாதுகாப்புப் பிரிவினைச் சேர்ந்தவர்கள் என்று பல தரப்பட்டவர்களையும் குறிவைத்து நிகழ்ந்தன. ஆனால், இத்தகைய கொலைகள் எவற்றுக்கும் காத்திரமான எதிர்ப்போ, தடையோ யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் மேற்கொள்ளப்படவில்லை. அரசாங்கத்தாலும் பாரதூரமானவையாகக் கருதப்படவில்லை. இவற்றையும் அனுமதித்தாலே யுத்த நிறுத்தம் பேணப்படும் என்ற அளவுக்கு அவர்கள் பின்வாங்கிச் சென்றார்கள். இதனால் எவ்வித கொலைகள் நிகழ்ந்தாலும் யுத்த நிறுத்த மீறல்களாகக் கொள்ளப்படமாட்டாது என்ற மறைமுக சமிக்ஞை வழங்கப்பட்ட சூழல் உருவாகியிருந்தது. இவ்வாறான படுகொலைகளும் யுத்தத்தை நோக்கிய திசையில் ஏற்படுத்தப்பட்டுவரும் நகர்வுகளாக இவர்களை எச்சரிக்கையடையச் செய்யவில்லை. யுத்த நிறுத்த உடன்படிக்கையைக் கடந்து வெகுதூரம் போய்க்கொண்டிருக்கும் இப் போக்கின் அபாயகரத் தன்மையைக் கூட இவர்கள் அனுமானிக்கவில்லை. உண்மையில் இதனைத் தடுக்கக் கூடிய வழிவகைகளும் அவர்களிடம் இல்லை. அல்லது தெரியவில்லை. நெருப்பு சிறிதாக இருக்கும்போதே நீரூற்றி அணைத்தால் அதனை அணைத்துவிட முடியும். ஆனால், அதுவே பெருந் தீச் சுவாலையாகப் பற்றிக்கொண்ட நிலையில் சிறிய பாத்திரத்தைக் கொண்டு நீரூற்ற முனைந்தால் அச் சுவாலை இன்னும் மோசமாக வெடித்துப் பெருகும். இந்த நிலைமையே அரசாங்கத்துக்கும் சரி கண்காணிப்புக் குழுவுக்கும் சரி சிறந்தது. அனுமதிக்கப்பட்டு வழமையாகிவிட்டவற்றை இனிமேல் குற்றம் காண்பதென்பது முடியாத காரியமாகிவிட்டது. அப்படியானால் அது பாரியதொரு கட்டுப்பாடாக அமைய வேண்டும். அதற்கான எண்ணமோ பலமோ இவர்களிடம் இல்லை.

இந் நிலையில்தான் ஆட்சி மாற்றம் நிகழ்ந்து புதிய அரசாங்கம் பதவியேற்றது. ஆனால் இந்தளவுக்கு வளர்ந்துவிட்ட நிலைமையை அரசால் மாற்ற முடியாது திணறுகின்றது. அதனால் இருக்கும் நிலைமையைச் சகித்துக்கொள்ள வேண்டியவர்களாக அவர்களும் ஆகிப் போனார்கள்.

அதனால்தான், முன்னர் எதிர்க்கட்சியாக இருந்தபோது கண்டித்த விடயங்களை ஆட்சியாளர்களான பின்னரும் நடவடிக்கை எடுக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். அப்போது, திருகோணமலையில் குரங்குபாஞ்சான் பகுதியில் புலிகள் அமைத்துள்ள முகாம் யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறிய ஒன்றெனவும் அதனை உடனடியாக அகற்றுவிக்க வேண்டுமெனவும் குரலெழுப்பிய அதே நபர்கள், இன்று அதனைச் செயற்படுத்த வேண்டிய ஆட்சியாளர்களாகிவிட்ட நிலையிலும் அது பற்றி ஆட்சியேறிய நாள் முதல் ஒரு மூச்சுக் காட்டவில்லை. அந்த வகையில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு இப் புதிய அரசாங்கமும் மௌன அங்கீகாரம் வழங்கியதான நிலைமை விரும்பியோ விரும்பாமலோ ஏற்பட்டுவிட்டது.

அடுத்த கட்டமான மற்றொரு நிலைமை இந்த அரசாங்கத்தில் தோன்றியிருந்தது. அது கிழக்கு மாகாணத்தில் புலிகளின் இரு அணிகளுக்கிடையிலான பிணக்கைத் தொடர்ந்து ஏற்பட்டது.

> **கொலைகள் எவற்றுக்கும் காத்திரமான எதிர்ப்போ தடையோ யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் மேற்கொள்ளப்படவில்லை. அரசாங்கத்தாலும் பாரதூரமானவையாகக் கருதப்படவில்லை. இவற்றையும் அனுமதித்தாலே யுத்த நிறுத்தம் பேணப்படும் என்ற அளவுக்கு அவர்கள் பின்வாங்கிச் சென்றார்கள். இதனால் எவ்வித கொலைகள் நிகழ்ந்தாலும் யுத்த நிறுத்த மீறல்களாகக் கொள்ளப்படமாட்டாது என்ற மறைமுக சமிக்ஞை வழங்கப்பட்ட சூழல் உருவாகியிருந்தது.**

கிழக்கு மாகாணத்தில் புலிகளின் தளபதியாக இருந்த கருணா, புலிகளின் வன்னித் தலைமையுடன் முரண்பட்டுப் பிரிந்ததைத் தொடர்ந்து கிழக்கில் புதிய வகை வன்முறைகள் தலைதூக்கின. இவை புலிகளுக்கிடையேயான வன்முறைகளாக அமைந்தன. இத்தகைய வன்முறைகளுக்கு யுத்த நிறுத்த மீறல்களிலிருந்து விதிவிலக்குப் பெற்றுக்கொண்டன. ஆனால், இவையும் ஆயுதங்களினாலே செயற்படுத்தப்படுகின்றன என்பதை இந்த யுத்த நிறுத்த விதிகள் தாமாகவே மறந்தன. இந்த வித்தியாசமான மறதியால் மற்றொரு வகையில் பார்த்தால் துப்பாக்கி வெடிகுண்டுகளுடனும் படுகொலைகள் தாக்குதல்களுடனும் யுத்த நிறுத்த மீறலே நிகழ்ந்தேறி பின், தொடர்ந்து வருகிறது.

இங்கே விநோதமென்னவென்றால், கருணாவின் கட்டுப்பாட்டிலிருந்த மட்டக்களப்புப் பிரதேசம் வன்னித் தரப்பினரின் கட்டுப்பாட்டுக்கு மாற்றப்பட்ட நிகழ்ச்சியானது, இலங்கை அரசாங்கத்திடமும் அதன் தரைப் படை, கடற் படை ஆகியவற்றிடமும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் அனுமதி பெற்ற ஒன்றாகவே நிகழ்ந்தேறியது. இவ் ஆயுத அணிகளின் ஆயுத நடவடிக்கை ஒன்றுக்காக படைத் தரப்பினரின் கட்டுப்பாட்டு வலயங்களைக் கடந்து நகர்த்துவதற்கு அரசாங்கத் தரப்பே இடம் கொடுத்து நடந்துகொண்டதும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு இதனைக் கண்டுகொள்ளாது இருந்ததும் யுத்த நிறுத்தம் குறித்த புதிய ஒரு வரைவிலக்கணத்தை வகுத்தது. அதாவது, யுத்த நிறுத்தத்துக்குள் அனுமதிக்கப்பட்ட யுத்தம் என்ற ஒன்றும் சாத்தியமானது. அது அங்கீகாரம் பெற்ற மற்றொரு காரணமாகத் தகுதி பெற்றது.

ஆக இப்போது, உண்மையான யுத்தம் என்பது என்ன என்பதற்கு மிஞ்சியிருப்பவை மிகச் சொற்பமானவையே என்றாகிவிட்டது. அதாவது உண்மையான ஒரு யுத்தத்துக்கு மிக அண்மித்த எல்லைக்கு நிலைமை தள்ளப்பட்டுவிட்டது. இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையில் அமைந்திருந்த யுத்த நிறுத்த மீறல்கள் பற்றிய கருதுகோள்கள் மறைந்து போயின. இவை எந்த நோக்கத்தில் வகுக்கப் பட்டனவோ அந்த நோக்கத்தை-யுத்தத்தைத் தடுப்பதற்கு எந்தவகையிலும் லாயக்கற்ற, பலவீனமான வாசகங்களாக ஆகிவிட்டதோடல்லாமல், யுத்தத்தை நோக்கிய போக்குக்கு இலகுவாக விலக்கித் தள்ளப்பட்டுக்கொண்டு செல்லப்பட்டன. கடல் அலையை மறிப்பதற்கு இடப்பட்ட பொலித்தீன் அணை போல் இந்த யுத்த நிறுத்தக் கட்டுப்பாடுகளும் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டு கடற்கரையில் கொணர்ந்து அனாதரவாக வீசப்பட்டுக் கிடக்கின்றன.

யுத்த நிறுத் மீறல்கள் என்பன எவ்வளவோ தூரத்துக்கு அப்பால் சென்றுவிட்ட நிலையில், தற்போது புலிகளின் மறுதரப்பினரான கருணா அணியினரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை மட்டுமே புலிகள் யுத்த நிறுத்த மீறல்கள் என முறைப்படுகிறார்கள். இது குறித்தே கண்காணிப்புக் குழுவும் அக்கறைப்படுகிறது. அரசாங்கமும் பதற்றமடைகிறது. கருணா அணியினர் மீது தாம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மௌனமாயிருக்கும்படியும், ஒத்துழைக்கும்படியும் அரசாங்கத்தையும் கண்காணிப்புக் குழுவையும் எதிர்பார்த்த அதே புலிகள்தான் இப்போது முறைப்படுகிறார்கள். ஆக யுத்த நிறுத்த மீறலென்பது யுத்த நிறுத்த விதிகள் மீறப்படுவதென்பதல்ல, அதை யார் மீறுகிறார்கள் என்பதைப் பொறுத்த விடயமாக இப்போது ஆகிவிட்டது. அதாவது யுத்த நிறுத்த விதிகளை யார் மீறலாம் என்று லைசன்ஸ் வழங்கப்படுகின்ற விடயமாக இது மாறிவிட்டது.

இதற்கு அப்பாலும் நிலைமை செல்ல முடியுமா என்ற அளவுக்குச் சென்றுவிட்டுள்ள நிலையில் நிகழ்ந்த புதிய ஒரு சம்பவந்தான் கடந்த ஏழாந் திகதி கொழும்பில் வெடித்த தற்கொலைக் குண்டு.

இதில் புதிதாக மீறப்பட்டுள்ள விடயமென்பது தற்கொலைக் குண்டுதாரி ஒருவரைப் பயன்படுத்தித் தாக்குதல் மேற்கொண்ட ஒன்று மட்டும்தான். அதாவது பாவிக்கப்பட்ட ஆயுதம்தான் வேறுபட்டுள்ளது. இங்கே முதன்முதலாக யுத்த நிறுத்த காலத்தில் உயிராயுதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. புலிகளின் அதி உச்சத் தாக்குதல் ஒன்றுக்குப் பயன்படுத்தப்படும் பிரத்தியேகமான ஆயுதம் இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. இது எந்தளவுக்கு நிலைமை சென்றுள்ளதென்பதை உணர்த்தும் ஒரு சம்பவமாகும்.

அதேவேளை, கொழும்பில் ஏற்கெனவே பல யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள், படுகொலைகள் நிகழ்ந்துதான் உள்ளன. பொலிஸ் நிலையத்தினுள்ளேயே சென்று பாதுகாப்பு அதிகாரி ஒருவரைச் சுட்டுக் கொன்ற சம்பவம் கூட நிகழ்ந்துள்ளது. எனவே இங்கே சம்பவம் புதிய விடயமல்ல. ஆனால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முறைதான இங்கு புதியது.

இதில் நிகழ்த்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலை விட அதையிட்டுத் தெரிவிக்கப்பட்ட கருத்துத்தான் மிக ஆபத்தானது. தற்கொலைத்தாக்குதல் நிகழ்ந்ததையடுத்து அது குறித்துக் கருத்துக் கூறிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, இது ஒரு தனிப்பட்ட சம்பவமென்றும் (Insolated incident) டக்ளஸ் தேவானந்தா மீது புலிகள் முன்னரும் தாக்குதல் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனரென்றும் கூறினார். அவ்வாறானால் முன்னர் எத்தனித்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்வதொன்றும் யுத்த நிறுத்த மீறலல்ல என்பதாக மற்றொரு விதிவிலக்குக்கு அனுமதியளிக்கிறாரா என்ற கேள்வி எழுகிறது. ஜனாதிபதி மீது கூட முன்னர் புலிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தியிருந்தனர். ஏன், யுத்த நிறுத்தத்துக்கு முன்னர் நடந்த இறுதித் தற்கொலை தாக்குதல் கூட இதைக் கூறிய ரட்ணசிறி விக்கிரமநாயக்கா மீதே நடத்தப்பட்டது. அவ்வாறானால் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, ஜனாதிபதி உட்பட எவர் மீதும் தற்கொலைத் தாக்குதல் நிகழ்த்தினாலும் அது ஏற்கெனவே இருந்த குறி என்ற அடிப்படையில் யுத்த நிறுத்த மீறலல்ல என்றாகிவிடுமோ?


எவ்வாறாயினும் இப்போது ஒவ்வொன்றாகக் கடந்து தற்கொலைத் தாக்குதல்களுக்கும் அனுமதி வழங்கப்படுகின்ற நிலைக்கு வந்தாகிவிட்டது. இனி இதுவும் வழமையான விடயமானால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இப்போது உள்ள கேள்வி இதுதான். கட்டவிந்து செல்லும் இந்த ஆபத்தான நிலைமையை எப்படி அரசாங்கம் கட்டுப்படுத்தப் போகிறது? இது இப்படியே செல்லுமானால் யுத்தத்தைச் சந்திக்க இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது? சிந்திக்கத் தவறினால் நாம் பேராபத்து ஒன்றையே விரைவில் சந்திக்க நேரிடும்.

# அமைச்சர் டக்ளஸ் மீது தற்கொலைத் தாக்குதல் முயற்சி முறியடிப்பு

இரண்டு வருடத்துக்கும் மேலாக இலங்கையில் இருந்து வரும் யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் அப்பட்டமாக மீறப்பட்டுள்ள நாள் கடந்த ஏழாம் திகதியாகும். 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆந் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவும் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் கையொப்பமிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இப்போது கேள்விக்குள்ளாகியுள்ளது. இதற்கிடையே கடந்த இரு வருடங்களில் புலிகளின் ஆயுதக் கப்பலின் வருகை, சீன மீன்பிடிப் படகு தாக்கப்பட்டமை, நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசியல் படுகொலைகள், திருமலையில் குரங்குபாஞ்சானில் புலிகள் அமைத்துள்ள புதிய முகாம் விவகாரம், வாழைச்சேனையில் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை, இவை தவிரவும் ஆயுதங்களுடன் புலிகள் பல சந்தர்ப்பங்களில் பிடிபட்டமை, அம்பாறையில் இராணுவ முகாம் தாக்குதல் இப்படியாகப் பல புரிந்துணர்வு ஒப்பந்த மீறல் சம்பவங்கள் நடந்து முடிந்துள்ளன. இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தையும் புலிகளையும் விட சாதாரண மக்களே அஞ்சினர். இதற்குக் காரணமும் இருந்தது. யுத்தம் ஒன்று ஆரம்பமானால் பாரிய அழிவுகளுக்கு இலக்காகக் கூடியவர்கள் சாதாரண மக்களே என்பதுதான் காரணம்.

இருந்தும் புரிந்துணர்வு ஒப்பந்தம் சரியாக அமுலாக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்காக ஸ்கன்டிநேவியன் நாடுகளின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டனர். அவர்கள் (SLMM) இலங்கையில் புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்களைக் கண்காணிக்கும் பணியில்



அமைச்சர் டக்ளஸ்

ஈடுபட்டபோதும் - இவர்களால் சுதந்திரமாகக் கருத்துச் சொல்லவோ, சுதந்திரமாகப் பணியாற்றவோ முடியாமல் உள்ளது.

இப்படியாக இலங்கை தேசம் சூதாடப்பட்டுக்கொண்டிருக்கையில் இம் மாதம் ஏழாம் திகதி கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நாட்டு மக்களையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இலங்கை அரசின் ஒரு அங்கமாக இருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எந்தக் காலத்திலும் புலிகளின் கொலைப் பட்டியலில் முதல் இடத்தில் இருப்பவர். அவரை ஒவ்வொரு விநாடியும் மரணம் பின்தொடர்வதை இலங்கைத் தேசமும், சர்வதேசமும் நன்கறியும். இருந்தும் அதற்கெல்லாம் முகங்கொடுத்துவரும் டக்ளஸ் தேவானந்தா, தனது ஜனநாயக அரசியல் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறார் என்பது இன்னும் பலருக்கு ஆச்சரியம்தான். இதற்கிடையே புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து தனிக் கட்சி அமைத்து இயங்க விருப்பம் தெரிவித்திருக்கும் கேணல் கருணாவுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்யவும் துணிந்திருப்பது பலரின் புருவங்களை உயர்த்தச் செய்திருக்கும். தவிரவும் புலிகள் புரியும் மனித உரிமைமீறல்களையும், வன்முறைகளையும் சுற்றிவளைக்காமல் - முக்காடிடாமல் தெட்டத் தெளிவாகக் கண்டிக்கவும் விமர்சிக்கவும் டக்ளஸ் தேவானந்தா பின்னிற்பதில்லை. புலிகள் தரப்பிலிருந்து பார்த்தால் புலிகளுக்கு அகில உலகத்திலேயே இருக்கும் ஒரே ஒரு எதிரியும் தடைக்கல்லும் டக்ளஸ் தேவானந்தா என்றே கருதுகின்றனர். இப்போது கருணாவும் இரண்டாவது நபராக உருவாகியுள்ளார். இன்னும் பலர் வெளிக்காட்டுவதற்கு ஜாதகம் பார்த்துக்கொண்டிருக்கவும் கூடும்.

2004 ஜூலை 07 புதன்கிழமை

அரச திணைக்களங்களில் பொதுமக்களைச் சந்திக்கும் பிரதான நாளாகப் புதன்கிழமையே குறிக்கப்பட்டுள்ளது. அதற்காக எந்த் அமைச்சரும் சரியாகப் புதன்கிழமைகளில் மக்களைச் சந்திப்பதில்லை. ஆனால், டக்ளஸ் தேவானந்தா விதிவிலக்காக இருந்தார். இதுவே புலிகளுக்கு வாய்ப்பாக அமைந்தது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் புதன்கிழமைகளிலேயே பொதுமக்களைச் சந்திப்பதை வழமையாகக் கொண்டிருந்தார்.

இதனாலேயே புதன்கிழமையைத் தேர்ந்தெடுத்து புலிகள் திட்டத்தைத் தீட்டினர். இரண்டு நாட்களுக்கு முன்பு குறிப்பிட்ட குண்டுதாரிப் பெண்ணும் இன்னொரு பெண்ணும் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்தை நோட்டம்விட்டுள்ளனர். அவரது கார் விடப்படும் இடம், பிரதான வாசல், அவர் நடந்து செல்லும் வழி என்பவை அவதானிக்கப்பட்டுள்ளன.

வெளிப்புறத் தோற்றத்தை அவதானித்த குண்டுதாரி புதன்கிழமை காலை 10.11 மணிக்கு அமைச்சு அலுவலகத்துக்குள் நுழைந்தார். சாம்பல் நிறச் சட்டையும் கறுப்பு நிறப் பாவாடையும் அணிந்திருந்தார். கையில் இரண்டு பைல்கள் வைத்திருந்தார். அவற்றைத் தனது மார்புப் பகுதிக்குக் குறுக்கே பிடித்திருந்தார். ஏற்கெனவே அமைச்சரைப் பார்ப்பதற்கு சுமார் 30 பேர் காத்திருப்பதால் குண்டுதாரியும் காத்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அமைச்சரின் சந்திப்பு அறையில் 20 பேர் வரையில் சென்றுவிட்ட நிலையில் அடுத்ததாக அந்தப் பெண் செல்ல வேண்டிய முறை.

வழமையாக அமைச்சரைச் சந்திக்க வருபவர்கள் தமது விபரங்களைக் குறிப்பிட்டு எழுத வேண்டிய சுயவிபரச் சீட்டில் தனது பெயர் தியாகராஜா ஜெயராணி என்றும் வேலை விடயமாக அமைச்சரைச் சந்திக்க வந்ததாகவும் எழுதிய இப் பெண், கையொப்பம் இடும்போது. 'ஜெயராணி' என எழுதியுள்ளார். தவிரவும் மேற்குறிப்பிட்ட விபரங்களைத் தெளிவான எழுத்தில் எழுதியபோதிலும் ஒப்பத்தை மட்டும் கோணல் மாணலாக எழுதியிருந்தார்.

இந்தச் சிறிய விடயங்களை அலுவலகப் பணியாளர்கள் கவனிக்கவில்லை. ஆனால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவதானித்துள்ளார். இருந்தும் சந்தேகப்படவில்லை.

அமைச்சரைப் பார்ப்பதற்கு முன்னர் எவரும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவ வழமை. அந்த வகையில் சம்பந்தப்பட்ட ஜெயராணியும் பரிசோதனைக்காக அழைக்கப்பட்டபோது தயங்கியிருக்கிறார். எனினும் பரிசோதிக்கும் மறைப்பு அறைக்குள் சென்றார். அவரைப்



குண்டுதாரி

பரிசோதித்த பெண் பொலிஸ் அதிகாரி அடுத்த நிமிடமே வெளியே வந்தார். அவரது முகம் குழப்பம் நிறைந்து காணப்பட்டது. அந்தப் பெண் பொலிஸ் அதிகாரியிடம் இது பற்றிக் கேட்டபோது, சம்பந்தப்பட்ட பெண்ணை கைகளை உயர்த்தச் சொல்லிப் பரிசோதித்தபோது மார்புப் பகுதியிலிருந்து வயிறு வரையான பாகம் வரை குஷன் போன்று இருப்பதாகவும் எனினும் இடுப்புக்குக் கீழே பரிசோதிக்க ஒத்துழைக்கிறாரில்லை எனவும் தெரிவித்தார். தனக்குச் சுகமில்லை என்றும் ஒவ்வொரு மாதமும் பெண்களுக்கு மாதாந்த அவஸ்தையேற்படுவது போல் தனக்கும் சுகயீனம் எனத் தெரிவித்ததாகவும் அப்பெண் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

**குண்டுதாரி தொடர்பு கொள்ள விரும்பிய பெண் யார்? அவருக்கும் இவருக்கும் என்ன தொடர்பு? ஊடகங்கள் இக் குண்டு வெடிப்பை ஏன் இருட்டடிப்புச் செய்தன? அமைச்சர் டக்ளஸ் இதற்குப் பிறகும் பிரபாகரனுக்கு நேசக்கரம் நீட்டியிருக்கிறாரே ஏன்? அரசாங்கம் இவ்விடயத்தில் அடக்கி வாசித்தது ஏன்? இத்தனை கேள்விகளுக்கும் அடுத்த வாரம் விடை உண்டு**

வெளியில் அழைக்கப்பட்ட அப் பெண் பாதுகாப்புக் கடமையிலிருந்த அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டபோதும் அப் பெண்மணி இக் காரணங்களையே திரும்பத் திரும்பத் தெரிவித்தார். என்னவாக இருந்தாலும் ஒரு பெண்தானே உங்களைப் பரிசோதிக்கக் கேட்கிறார். அவருக்கு ஒத்துழைக்கலாம் அல்லவா என்று கேட்டபோதும் குண்டுதாரிப் பெண் இணங்கவில்லை. தனது தாய் குளிக்கும்போது குளியலறைப் பக்கமே போகாத குடும்பத்தில் பிறந்ததாகவும் ஆகையால் தனக்குக் கஷ்டம் என்றும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது. பரிசோதனைக்கு ஒத்துழைக்காததால் பார்க்க விரும்பாத அமைச்சர் அப் பெண்ணை இன்று போய் இன்னொரு நாளில் வரும்படி சொல்லியிருக்கிறார்.

எனினும், பெண் பொலிஸாரின் பதற்றமும் குண்டுதாரிப் பெண் அமைச்சரை ஒரு முறை பார்க்க அனுமதிக்குமாறு கெஞ்சிக் கேட்டுக்கொண்டதும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. சில அதிகாரிகளுக்கு இணக்கம் ஏற்பட்டபோதும் சோதனை செய்ய ஒத்துழைக்காதது நெருடலாகவே இருந்தது. இது குறித்து அமைச்சரின் கவனத்துக்கு மீண்டும் தெரிவிக்கப்பட்டது. இதன் பிறகுதான் அமைச்சருக்கு இவ்விடயம் குறித்துச் சந்தேகம் தோன்றியது. குறிப்பிட்ட பெண் எழுதிய விண்ணப்பத்தை எடுத்துப் பார்த்தார். கையொப்பம் இடப்பட்ட முறை, இனிசியல் பிழை, இவற்றுக்கு மேலாகச் சோதனைக்கு ஒத்துழைக்காமை, தெரிவிக்கப்பட்ட பெண்ணின் தோற்றம், பாதுகாப்பு அதிகாரியின் குழப்பம் என்பன கோர்வையாக சிந்திக்க வைத்தன.

அமைச்சர் உணர்ந்துகொண்டார். தன்னைப் பின் தொடர்ந்துகொண்டிருக்கும் கொலையாளி பெண் உருவத்தில் அண்மித்துவிட்டதை உணர்ந்தார். அமைச்சுக் கட்டடத்தில் எவ்வித அசம்பாவிதமும் நடந்துவிடக் கூடாது என்பதைத் தீர்மானித்தார்.

அமைச்சுக் கட்டடத்துக்குள் எதுவும் நடந்தால் சந்திக்க வந்திருக்கும் பொதுமக்களின் உயிர், அலுவலர்களின் உயிர், பாதுகாப்புக் கடமையில் இருப்பவர்களின் உயிர் என சுமார் அறுபது பேரின் உயிர் காவுகொடுக்கப்பட வேண்டி வரும். எனவே குறிப்பிட்ட பெண்ணை முதலில் அப்புறப்படுத்துமாறு பணித்தார். எனினும் பதற்றம் உருவாவதைத் தவிர்க்குமாறு தனக்கு நெருக்கமான மெய்ப்பாதுகாப்பாளர்களிடம் தெரிவித்திருந்தார். அவர்களும் குறிப்பிட்ட பெண்ணிடம் சூசகமாகப் பேசினர். "உங்களுக்குச் சுகயீனம் காரணமாகப் பரிசோதிப்புக்கு ஒத்துழைக்க முடியவில்லை என்பதால் இன்றைக்குப் போய் அடுத்த வாரம் வாருங்கள்" என்றனர். குண்டுதாரி கோபமடைந்திருக்கிறார். "என்மீது நம்பிக்கை இல்லையா.? அப்படிச் சந்தேகம் என்றால் அமைச்சருக்கு முன்னால் வைத்து என்னைப் பரிசோதியுங்கள். கையிலிருந்த பைல்களைத் தூக்கி எறிந்து அழுதிருக்கிறார். இருந்தும் அமைச்சரின் கடுமையான பணிப்புரையை மீற முடியாத பாதுகாவலர்கள் அப் பெண்ணை வெளியில் போகுமாறு அனுப்பியுள்ளனர். வேறு வழியில்லாமல் குண்டுதாரிப் பெண் காலி வீதியில் இறங்கிச் சென்றார்.

அப்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமிருந்து மறு அறிவித்தல் வந்தது, "குறிப்பிட்ட பெண் அமைச்சு அலுவலகத்திலிருந்து சுமார் 50 மீற்றர் கடந்து சென்றதும், அவரைப் பின்தொடர்ந்து கைதுசெய்து கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படையுங்கள்" என்று. பாதுகாவலர்களுக்கு இப்போதுதான் நிலைமை புரிந்தது. காலி வீதியில் சென்றுகொண்டிருந்த பெண்ணைத் தனியே இரு ஆண் பாதுகாவலர்கள் பிடிக்க முடியாது என்பதால் பரிசோதனையில் ஈடுபட்டிருந்த பெண் பொலிஸ் அதிகாரியையும் அழைத்துக்கொண்டு ஆட்டோவில் சென்று பெண்ணைப் பக்குவமாக அணுகினர்.

அலசுவது
- மதியூகி -

"கொள்ளுப்பிட்டி பொலிஸில் ஒரு ஒப்பம் வைத்துவிட்டு நீங்கள் போகலாம் வேறு ஒன்றுமில்லை" என்று ஆட்டோவில் ஏற்றி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். அப்போது அமைச்சரின் அலுவலகத்தில் உள்ள ஒரு பெண்மணியோடு தொடர்பு கொள்ளவேண்டுமெனக் குண்டுதாரி கேட்டுள்ளார்.

இதற்கிடையே அமைச்சு அலுவலகத்தில் வழமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை விட பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டதோடு எவரும் அலுவலகத்துக்கு உள்ளிருந்து வெளியில் போக முடியாமலும் வெளியிலிருந்து உள்ளே வர முடியாமலும் தடை விதிக்கப்பட்டது. இதே நேரம் அமைச்சு அலுவலகத்திற்கு வெளியே மேலும் இரு தற்கொலைக் குண்டுதாரிகள் காத்திருந்தனர் என்பதைப் பாதுகாவலர்கள் அறிந்திருக்கவில்லை.

**கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் என்ன நடந்தது? குண்டு வெடிப்புக்குப் பிறகு எவ்வாறு இச் சம்பவம் பார்க்கப்பட்டது? காத்திருங்கள்.... அடுத்த வாரம்**



## அதிரடி அய்யாத்துரை



***தேர்தல்*** பெறுபேற்றப் பாத்தியளோ! ஏதோ எல்லாம் தலைகீழாகப் போகுது எண்ட கணக்காப் பெருங் கும்மாள மடிச்சவையெல்லாம் மூச்சடைச்சுப் போட்டினம். தேர்தல் நடந்த எல்லாச் சபையளையும் ஒண்டும் விடாமல் தட்டிக்கொண்டு போயிட்டினம் ஆளும் கட்சிக்காறர். மக்கள் மக்களெண்டு மக்களின்ர பேரில கருத்துச் சொல்லுறவையெல்லாம் மக்கள் வழங்கியிருக்கிற தீர்ப்பப் பாத்து முழுச வேண்டிக் கிடக்கு. நாலு சுவருக்குள்ள அடைஞ்சு கிடந்துகொண்டு, தாங்கள் நினைக்கிறதையே மக்கள் சொல்லுறதாச் சொல்லி பேனையால கிறுக்கிறவை எனிமேல் தன்னும் கொஞ்சம் கிராமப் புறத்தில நடந்து திரிஞ்சு அறிஞ்சு எழுதினா நல்லது. அது சரி பாருங்கோ. இப்ப பெறுபேறுகளை எடுத்துப் பாக்கவும் மனசில்லாமல் வாக்களிப்புக் குறைஞ்சு போனதுதான் பிரச்சினையெண்டு கதை விடுகினம். வாக்களிப்புக் குறைஞ்சால் அது ரெண்டு தரப்புக்குந்தானே குறைஞ்சிருக்கும். அதை ஒரு தரப்புக்கு மட்டும் எதிர்ப்பாக் காட்ட ஏன் இவை தலையால மண் கிண்டினமோ தெரியேல்லை! வாழ்க ஜேர்னலிஸம்!

***மலையகத்துப்*** பிரபாகரனெண்டு சந்திரசேகரனுக்கும் பட்டஞ்சூட்டி புதிய சர்ச்சையொண்டைக் கிளறி வைச்சிருக்கிறார் அறளை வேந்தனார். அதோட சும்மா விடாமல் ஆறுமுகத்தாரையும் இழுத்து வைச்சுக் குத்தி முழங்கியிருக்கிறார் ஒப்பின் ரிவியில. மலையகத் தமிழருக்கு எதுவுமே செய்து குடுக்கேல்லையாம். அரசோட சேர்ந்து தங்களுக்குத் துரோகம் செய்யப் போறாராம்! உப்பிடி எது துரோகம் எண்டிறதையெல்லாம் தாங்களே நிர்ணயிச்சுக்கொண்டு போக எங்கயிருந்து பெமிசன் வாங்கி வைச்சிருக்கிறாரெண்டு கேக்க யாருமில்லை. போகட்டும். அது சரி, ஆறுமுகத்தார், தொண்டமானார் எல்லாம் செய்யாத என்னத்தை அப்பிடிச் சந்திரசேகரனார் செய்தாராமெண்டு இந்த வீர தீர மார்த்தாண்டப் பட்டமெல்லாம்? அதுக்கு அவர் சொல்லுற காரணம், சந்திரனார் மட்டுந்தானே வன்னிக்கு அடிக்கடி அழைக்கப்படுகிறார் எண்டதுதான்! ம்.... முஸ்லிம்கள் மெக்காவுக்குப் போறது போல இப்ப தமிழர் வன்னிக்குப் போய் வந்தால்தான் பெருமை போல!

***அறளை*** வேந்தர் தூள் பறத்திறார். "மலையகத் தமிழருக்குத் தமிழ்க் காங்கிரஸ் செய்த துரோகத்துக்கு யார் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தை மன்னிக்கச் சொன்னது" எண்டு கேட்டாரே ஒரு கேள்வி! விறைச்சுப் போட்டுது தலை! மன்னிச்சது யாருமில்லையுங்கோ. சாட்சாத் ரீ.என்.ஏ.யான நீங்கள்தானுங்கோ. போன வருஷம் மலையகத் தமிழற்ற குடியுரிமை வழங்கிற பாராளுமன்றத் தீர்மானத்தில மதனராஜா எம்.பி. ஜீ.ஜீ. பொன்னம்பலத்தாற்ற பேரன் கஜேந்திரனைப் பாத்து, "உம்மட பாட்டனார் மலையகத் தமிழருக்குச் செய்த துரோகத்துக்கு இந்தச் சந்தர்ப்பத்தில எண்டாலும் மன்னிப்புக் கேளும்" எண்டு கேக்க, ஆள் அப்பிடி கூட மறுத்து "ஜீ.ஜீ. துரோகஞ் செய்ததெண்டு யாராவது நிரூபிக்க ஏலுமா"வெண்டு மார்தட்டின நேரம் எங்க போனனீங்கள்? உங்கட ரீ.என்.ஏ.க்குள்ள இருந்துகொண்டு உங்கட எம்.பி.மாருக்கு முன்னால இப்பிடியொரு முழுப் பூசணிக்காயைச் சோத்துக்க மறைக்கேக்க மௌனிச்சிருந்து போட்டு, இப்ப யார் மன்னிச்சதெண்டு கேட்டா... எங்க போய் முட்டுறது? மிஸ்டர் அறளையார் வெளியாரோட விவாதிக்க முன்னர் தங்கட ஆக்களோட விவாதிச்சிட்டு வந்தா நல்லது!

***மண்ணெண்ணை*** மகேசனார் சொன்னதைப் பாக்கப் பரிதாபமாக் கிடக்கு. யாழ்ப்பாணத்தை விட்டிட்டு ஏன் கொழும்புக்கு வந்தாரோ அதப் போல இப்ப கொழும்பை விட்டிட்டு வெளிநாட்டுக்குப் போறாராம்! பாதுகாப்பு அச்சுறுத்தலாம். பாவம்! அந்த அச்சுறுத்தல்தான் என்னவெண்டு ஒப்பினாச் சொல்ல ஏலாத நிலை! யாழ்ப்பாணத்தால தூக்கியெறிஞ்சாலும் கொழும்பில வாக்குக் கேட்டு மக்கள் தீர்ப்பையே மாத்தி எழுதவைச்சவருக்கு 'மகேசன்' தீர்ப்பை மீள மாத்த ஏலாமல் போச்சு! எண்டாலும் கூட அவர் எம்.பி. பதவியத் துறக்க மாட்டாராம். இடையிடையில விசிற் பண்ணி றிநியூ பண்ணிக்கொண்டே இருப்பாராம். ஆசை ஆரைவிட்டுது போ!

***எங்கட*** சம்பந்தனார் ஏதோ அமெரிக்காவோட பேசி எல்லாத்தையும் நெளிவெடுத்துத் தாறனெண்டு கதை சொல்லிப் போட்டு வெளிக்கிட்டுப் போனார். குமாரண்ணையின்ர பொடி கஜேந்திரனுக்கு நாக்கில ஒட்டியிருக்கிற இங்கிலீஷால ஏதோ வெட்டி முழங்கி அமெரிக்கரை வழிக்குக் கொண்டு வந்திடுறதாச் சொன்னார். ஆனா, இங்க பாத்தால் தற்கொலைக் குண்டுவெடிப்புக்கு ரெண்டெழுத்தாரைக் கண்டிச்சு அறிக்கை விட்ட முதல் நாடு அமெரிக்காவாத்தான் கிடக்குது. என்ன பண்ணினமாம் உவையெல்லாம் போய்? எண்டாலும் கண்டிச்ச அமெரிக்காவைக் கண்டிக்கிற துணிவு ரெண்டெழுத்தாற்ற அரசியற் பொறுப்பாளர் தமிழிற் செல்வனுக்குத்தான் உண்டு. இது சமாதான முயற்சியைக் குழப்பிற கண்டனம் எண்டு திருப்பிச் சொல்லியிருக்கிறார். எங்கட ரீ.என்.ஏ.காறர் வாய் திறப்பினமோ. ஊஹூம்.... பிறகு விசா எடுக்க யார் வீட்டையாம் போறது? அது சரி, குண்டு வெடிச்சுக் குழம்பாத சமாதானம், அதைக் கண்டிச்சுத்தான் குழம்பப் போகுதெண்டால் ......... ம் ....... புரியேல்லையுங்கோ!

***செய்தி*** எண்டால் என்ன? நாய் மனிசனைக் கடிச்சால் அது செய்தியில்லை. மனிசன் நாயைக் கடிச்சாத்தான் அது செய்தி எண்டு ஜேர்னலிஸக்காறர் சொல்லுவினம். எங்கட கருணாவின்ர செய்தியும் அப்பிடித்தான் கிடக்கு. எங்கயிருக்கிறார், என்ன செய்யிறாரெண்டு புரியாத புதிராயிருந்தவர் திடீரெண்டு பிபிஸி தமிழோசையில பேசினதக் கேட்டியளே. அவர் பேசினதே ஒரு புதினம். அதில அவர் சொன்ன விஷயங்கள் புதினத்தையே அசர வைக்கிற புதினம். சமாதானம் பேசிக்கொண்டு ஆயுதம் வாங்கத் தலைவற்ற லிஸ்ற்ரோட தானே போனதாய் அதிர வைச்சிருக்கிறார். இதென்னாடா இது! "நான் காற்று வாங்கப் போனேன். ஒரு கவிதை வாங்கி வந்தேன்" எண்ட பாட்டை இப்பிடி மாத்திப் படிச்சா எப்பிடியிருக்கும். "நான் சமாதானம் பேசப் போனேன். நல்ல ஆயுதம் வாங்கி வந்தேன்"!

***அரச*** தொலைக்காட்சி விவாதமொண்டில எங்கட சிவாஜிலிங்கத்தார் வந்து மாட்டுப்பட்டுப் பதறியடிச்சதப் பாக்கத்தான் சிரிப்பாயிருந்ததுங்கோ. வழக்கமா விவாதக்காறர் தங்களுக்கு வசதியான விஷயத்தைத் தூக்கிக்கொண்டு வில்லங்கமானதைக் கழிச்சுப் போடுவினம். அந்த டெக்னிக் கூட இந்தாளுக்குத் தெரியேல்ல. யாழ்ப்பாணத்துத் தேர்தல் மோசடி விஷயத்தைத் தானே தூக்கிக் கொண்டுவந்து போட்டுச் சட்டியையும் உடைச்சுப்போட்டு நிண்டார். அடுத்த பக்கத்தில இருந்த தவராசா தப்பாமல் பிடிச்சிட்டார் மெட்டரை. ஓ, தேர்தல் மோசடி பற்றியா பேச வந்திட்டீர், இந்தா பாரும் எடுத்து விடுகிறதெண்டு சர்வதேசக் கண்காணிப்புக் குழுக்கள், உள்நாட்டுக் கண்காணிப்புக் குழுக்களெண்டு ஒவ்வொரு அறிக்கையா எடுத்துக் காட்டி வரி வரியாய் வாசிச்சு மொழிபெயர்த்தும் சொல்ல சிவாஜியாரின்ர முகத்தில ஈயாடேல்லை. கடைசியா நரி "சீச்சீ இந்தத் திராட்சைப் பழம் புளிக்கும்" எண்டு சொன்ன கணக்கா, உந்தச் சர்வதேசக் கண்காணிப்பாற்ற அறிக்கைகளையெல்லாம் பொய்யெண்டு மறுத்தாரே பாருங்கோ! அடேங்கப்பா! இதை விடத் தமாஷ் வேற என்ன?

# விளம்பரப் பகுதி



## சிங்கப்பூரில் திருமண சேவை

சிங்கப்பூரில் திருமணம் செய்ய வருவோருக்கும் வீடுமுறையைக் கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும் கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்து தருவோம். மேலும் எங்கள் இடம் 'குட்டி இந்தியா' என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால், வேண்டிய பொருட்களை நடந்து சென்றே வாங்கலாம். மேலும் வீபரமறிய எந்த நேரத்திலும் தொடர்புகொள்ள வசதியாக

கை தொலைபேசி எண். : 0065 97514941,
தொலை நகல். : 0065 64816144.


படத்தில் காணும் அப்புவீடம் தொடர்பு கொள்ளவும்.

சிங்கப்பூருக்குள் வர அனுமதி கிடைக்காமல் திரும்பிப் போவதைத் தடுப்பதற்கு 2 கிழமைக்கு முன்பே எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**Lingam Wedding Services,**
10.Anson Road #15 -14 International Plaza, Singapore 079903.

## நான் நிரூபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீகம்





எனக்கு இறைவன் தந்த நன்கொடை.
இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை.
முடியாத வேலைகளை முடியும் என்று பாரம் எடுப்பதில்லை.
முடியும் என்றால் முடித்துக் காட்டுவது,
அத்தோடு நிறைவேறும் திகதியையும், வாங்கும் பணத்திற்கு ரசீதையும் கொடுப்பது.

**மட்டக்களப்பு அன்பர் கூறும் கதை** — பதிவேட்டு இல : 3504

த.சபேசன், வங்கி ரோட், செங்கலடி, மட்டக்களப்பு.

ஜோதிட பேராசிரியர் அவர்களே!

இதை உங்கள் பதிவேட்டில் எழுதிவைக்க நான் ஆசைப்படுகிறேன். ஐயா! எனக்கு வயது 33, இக் காலங்களில் உங்கள் துறையில் உள்ளவர்களில், ஒவ்வொருவரிடமும் அதாவது மாந்திரீகம், ஜோதிடம் இப்படிப் பல பேரிடம் பார்த்துள்ளேன். ஒரு சில அரைகுறைத் தேர்ச்சி பெற்றவர்கள், வாயில் வந்தவைகளைக் கூறி அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்கிறார்கள். அதற்கு மாறாக, தங்கள் செயலைக் கண்டு சந்தோசம் அடைகின்றேன். என்னைப் பொறுத்தவரை ஆழம் தெரியாமல் காலை விடமாட்டேன். என்னை மன்னிக்க வேண்டும். உங்கள் அருள் ஞானத்தையும் தசாவதானியின் தன்மையையும் கண்டுகொண்டேன். தங்களிடம் ஏனோதானோ என்று பலன் கேட்க வந்த எனக்கு நடந்தது என்ன? நான் உங்கள் கதிரையில் அமர்ந்தபோது அற்புதமாக என் வாழ்க்கைச் சரித்திரத்தையும், நான் சொல்ல வந்த காரியத்தையும், செய்ய வந்த காரியத்தையும் சில நொடிகளில் கூறினீர்கள். நிச்சயமாக நான் நம்புகின்றேன், என் வேலை பூர்த்தியாகுமென்று. தங்குதடையின்றி உங்கள் பணத்தை வங்கியில் செலுத்துவேன். ஆசீர்வாதத்திற்குரிய தசாவதானி ஐயா அவர்களே! என் பிரச்சினையை மின்சார வேகமாகச் செயற்பட வைக்க உங்களைக் கேட்கின்றேன். இன்று எனக்குத் தெரிகிறது, எத்துறையில் இருந்தாலும் அத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களிடம் சென்றால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும் என்று.

**கெக்கிராவ பரீனா என்ன கூறுகிறார்.** — பதிவேட்டு இல. 3505

நான் திருமணம் செய்து 7 வருட காலத்திற்குப் பின் கணவர் 3 வருட காலமாக வேறு ஒரு பெண்ணுடன் உறவுகொண்டு திருமணம் செய்யும் அளவிற்குப் போய்விட்டது. 2002ஆம் ஆண்டு நான் கொடுத்த பணத்திற்கு தகுந்ததாக என்னைக் காப்பாற்றினீர்கள். சந்தோசம். மீண்டும் அப் பெண்ணோடு தொடர்புகொண்டு என்னை வெறுக்கின்றார். அவரை மீண்டும் அழைத்துக் கருணை புரியுங்கள்.

**சுவிஸ் - உதயகுமாரி என்ன கூறுகிறார்** — பதிவேட்டு இல. 3514

அருள் ஞான சித்தர் ஐயா அவர்களுக்கு!

திருமணம் முடித்து கடந்த 3 வருடங்களாக சுவிஸில் குடியும் கும்மாளமாகவும் இருந்து என்னையும் எனது மகனையும் தவிக்க விட்டுவிட்டு வேறு பெண்களோடு சுற்றித் திரிந்த எனது கணவனின் போக்கையும் குணத்தையும் மாற்றி, என்னை வாழ வைத்த தெய்வமே! எனது ஆயிரம் கோடி நன்றிகளை உங்கள் காலடியில் சமர்ப்பிக்கின்றேன்.

**கொழும்பு பர்சானா என்ன கூறுகின்றார்.** — பதிவேட்டு இல. 3515

எங்களைத் துன்பத்திலிருந்து காப்பாற்றிவிட்டீர்கள். உங்களிடம் வந்த பிறகு எனக்கு ஒரு புதிய தைரியமும் தெம்பும் ஏற்பட்டுவிட்டது.

**Swiss - சுரேஷ்** — பதிவேட்டு இல. 1093

ஐயா,

நான் எங்கு சென்றாலும், யாரிடம் சென்று என்ன மாந்திரீக பரிகாரம் செய்தாலும், ஐயாவிடம் வந்து பரிகாரம் செய்து ஆசீர்வாதம் பெற்றால்தான் காரியம் நிறைவேறும் என்பதை நான் நன்றாக உணர்ந்துகொண்டேன்.

நீங்கள் சொல்லி வைத்தது சொன்னபடி நடந்து வருகிறது. நன்றி.

**M.யோகேந்திரன் - Doha, Qatar.** — பதிவேட்டு இல. 30003

யோகேந்திரன் என்ன கூறுகிறார்.

அன்றும் இன்றும் என்றும் உலகம் போற்றும் மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு, நீங்கள் அனுப்பிய மோதிரம் மற்றும் சாந்திப் பொருட்கள் பாவிக்க ஆரம்பித்தவுடன் மின்னல் வேகத்தில் என் எண்ணங்கள் நிறைவேறின.

என்னால் நம்பவே முடியவில்லை. ஐயாவின் ஆசீர்வாதம் என்றும் நிலைத்து எனக்குக் கிடைக்க வேண்டுகிறேன்.

எனது நுவரெலியா கிளை நிறுவனத்தில் மந்திரம், ஜோதிட வேலைகளுக்குக் கைமேல் பலன் கிட்ட எனது மூத்த சகோதரனாகிய P.T.R. அவர்களிடம் சென்று உங்கள் வேலைகளை அப்பொழுதே நிவர்த்தி செய்துகொள்ளலாம்.
(இங்கும் தீய வேலைகளுக்கு இடமில்லை)

என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம் சம்பந்தமாகத் தொலைபேசியில் ஆலோசனை பெற, இத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களை நியமித்திருப்பதால் அவர்களிடம் கதைத்து ஆடர்களோ, Appointmentகளோ பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசியில் நான் உரையாட கால அவகாசம் இல்லை.

**பேராசிரியர் டாக்டர் பி.கே.சாமி (J.D.G.A.N.) J.P.**
இல.162, ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம், மாந்திரீக உச்சாடன பீடம்
கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு 13. Cli No : 2342463, 2470615 Fax : 2344831
நுவரெலியாவில்: 33, Daily Fair Complex, Nuwara Eliya. Tel : 052 - 2222508, 2235097.


# சிறார் ஆட்சேர்ப்பினால் வடக்கு - கிழக்கில் அழிக்கப்படும் கல்விச் சமுதாயம்

புலிகளின் இயக்கத்திற்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கியுள்ளார்கள். வடக்கு - கிழக்கு எங்கும் போர்ப் பயிற்சிக்காக ஆள் பிடிக்கும் நடவடிக்கை இப்போது தீவிரமாக இடம்பெறுகிறது. அதனைப் புலிகளும் ஒப்புக்கொள்கிறார்கள்.

பிரபாகரனின் தலைமைத்துவத்திலிருந்து அந்த இயக்கத்தின் மூத்த முக்கிய தளபதி கேர்ணல் கருணா அம்மான் விலகிச் சென்ற வேளையில் அவரது தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிய அவரது நாலாயிரம் போராளிகளை வீடுகளுக்கு அனுப்பி வைத்தார்.

அதனால் புலிகள் இயக்கத்திற்குள் பெரும் ஆட்பற்றாக்குறை நிலவுகிறது. இரு தரப்பினரும் இராணுவ சமபலத்துடனேயே பேச்சுவார்த்தைக்கு வந்ததாகக் கூறிக்கொள்ளும்போது புலிகளுக்கு எதிர்பாராத விதமாக நடந்த இந்த ஆட்பற்றாக்குறையினால் புலிகள் கூறும் இராணுவ சமபலம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் அவசர அவசரமாக ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டிய தேவை புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது. தமது ஆட்சேர்ப்பு நடவடிக்கை போர் நிறுத்த உடன்பாட்டுக்கு முரணான விடயம் அல்ல என்று புலிகள் வாதிடுகின்றார்கள். ஆனால், புலிகள் இப்போது 18 வயதிற்குக் குறைந்த, அடிப்படையில் 10வயதுக்கு மேற்பட்ட இளம் பராயத்தினரை வகைதொகையின்றித் தேடிப் பிடிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்கள்.

கேர்ணல் கருணா அணியினரால் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டுத் தமது பெற்றோருடன் வீடுகளில் தங்கியிருந்த இளம் பராயப் போராளிகளும் மற்றும் இன்னமும் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களும் புலிளால் தேடிப் பிடிக்கப்படுகிறார்கள்.

புலிகளின் பிடிக்குள் தமது பிள்ளைகளைப் பறிகொடுக்கும் பெற்றோர் மீண்டும் மௌனமாகப் புலம்ப ஆரம்பித்துள்ளார்கள்.

கருணா அணியினரால் வீடுகளுக்குச் செல்லுமாறு விடுவிக்கப்பட்ட போராளிகள் நாலாயிரம் பேரில் கிட்டத்தட்ட அரைவாசிப் பேர் 18 வயதிற்குக் குறைந்த இளம் பராயப் போராளிகளாகும்.

## ஹுசைன்

269 சிறுவர்கள் யுனிசெப் அமைப்பினூடாக அந்த அமைப்பினதும் புலிகள் இயக்கத்தினதும் உறுதிப்படுத்திய கடிதத்தோடு கடந்த ஏப்ரல் மாதம் விடுவிக்கப்பட்டிருந்தார்கள். இந்த இளம் பராயப் போராளிகள் அனைவரும் வெருகல் ஆற்றில் கருணா அணி மீது பிரபாகரன் தலைமையிலான அணியினர் திடீர்த் தாக்குதல் மேற்கொண்டபோது புலிகளால் பிடிக்கப்பட்டவர்களாகும்.

சிறுவர்களான போராளிகள் அனைவரும் கருணாவின் உத்தரவின் பேரில் பலாத்காரமாகப் பிடிக்கப்பட்டவர்கள் என்று புலிகள் தமது தவறுகளை மறைத்தனர். ஆனால், புலிகள் கூறுவது போன்று இந்த இளம் சிறார்கள் ஒன்றிரண்டு மாதங்களிலோ கருணா - பிரபாகரனோடு முரண்பட்ட பின்னரோ பிடிக்கப்பட்டவர்களல்ல.

இவர்களனைவரும் ஒன்று, இரண்டு, மூன்று வருடங்களுக்கு முன்னர் கருணா அம்மான் பிரபாகரனோடு ஒட்டுறவாக இருக்கும்போது பிடிக்கப்பட்டவர்கள்.

இது பற்றி ஒரு தாய் கூறும்போது: "கருணா அம்மானின் அணி மீது வெருகல் பகுதியில் புலிகள் தாக்குதல் நடத்தியபோது எனது மகள் சுகிர்தாவும் கருணா அம்மானின் அணியோடு இருந்தாள். நான் அங்கு கொல்லப்பட்ட சிறுவர் போராளிகளின் சவக் குவியலுக்குள்ளேயே எனது பிள்ளையின் சவத்தையும் தேடினேன். ஆனால் அதிர்ஷ்ட வசமாக எனது மகள் காட்டுக்குள் தப்பியோடியிருந்துவிட்டு



ஏறாவூர் பகுதியியைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் தன் வீட்டு மரக் கிளையில் ஒளிந்திருப்பதை காணலாம்

உயிரோடு வந்து சேர்ந்தாள். வாகனேரிப் பகுதியில் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தபோது 12 வயதில் கடத்திச் சென்று இயக்கத்தில் சேர்த்தார்கள். இப்பொழுது அவளுக்கு 14 வயது. எனது பிள்ளையின் படிப்பையும் பாழாக்கியதோடு தலைமுடியையும் கத்தரித்துவிட்டார்கள். இதனால் அவளை அரபு நாட்டுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாகக் கூட அனுப்ப முடியாத நிலை. தலை முடி வளரும் வரை முஸ்லிம் வீட்டில்தான் கொண்டு போய்விடப் போகின்றேன். இல்லாவிட்டால் மீண்டும் வந்து பிடித்துச் சென்றுவிடுவார்கள்" என்று துயரமாகக் கூறுகின்றார் அந்த ஏழை விதவைத் தாய்.

இவ்வாறு எத்தனையோ தமிழ்த் தாய்மார் தமது இளம் சிறார்களை இயக்கத்திடம் பறிகொடுத்துவிட்டு இன்று கண்ணீரும் கம்பலையுமாக அலைகிறார்கள்.

சிறுவர்கள் போர்ப் பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதைத் தடுக்குமுகமாக பல்வேறு தரப்பிலிருந்து கண்டனக் குரல்கள் எழுந்தபோதும் புலிகள் அதனைச் சட்டை செய்வதாக இல்லை.

புலிகள் இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சிறுவர்களை அந்த இயக்கத்திலிருந்து விடுவித்து மறுவாழ்வு அளிப்பதற்காகப் பாடுபடுகின்ற யுனிசெப் அமைப்பு தனது பணிகளுக்குப் புலிகள் ஆதரவு தெரிவிக்கவில்லை என்று கண்டனம் தெரிவிக்கிறது.

பலாத்காரமாகப் பிடிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான சிறுவர்கள் புலிகள் இயக்கத்தில் ஏற்கெனவே இருக்கின்றபோது, இன்னமும் தமது பெற்றோருக்கு உதவியாக எஞ்சியிருக்கின்ற சிறுவர்களையும் அந்த இயக்கம் பிடித்துச் செல்வதில் ஈடுபட்டிருக்கின்றது என்று யுனிசெப் அமைப்பு குற்றஞ்சாட்டி வருகின்றது.

சிறுவர்கள் புலிகள் இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவதைத் தடுக்குமுகமாக தாங்கள் பரிந்துரை செய்திருந்த எந்த வழிமுறைகளையும் புலிகள் இயக்கம் நடைமுறைப்படுத்தவில்லை என்று யுனிசெப் அமைப்பு குறை கண்டிருக்கின்றது.

கருணா அணியினர் மீதான தாக்குதலின்போது புலிகள் இயக்கத்தினரால் பிடிக்கப்பட்ட சிறுவர்களை அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கும்போது புலிகள் இயக்கத்தின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடையதும் யுனிசெப் அமைப்பினதும் தனித்தனிக் கடிதங்களும் சிறுவரின் பெற்றோரிடமும் உறவினரிடமும் கையளிக்கப்பட்டிருந்தன.

யுனிசெப் அமைப்பினால் வழங்கப்பட்டிருக்கும் அந்தக் கடிதத்தில் "பதினெட்டு வயதிற்குக் குறைவான சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்ய மாட்டோம் என புலிகள் இயக்கம் உத்தர வாதமளித்துள்ளது. அதன்படி இப் பிள்ளையின் அல்லது இப் பிள்ளையின் குடும்ப உறவினர் எவர் மீதும் எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படக் கூடாது எனவும், இப்பிள்ளை அவருடைய குடும்பத்தினருடன் ஒன்றிணைந்திருக்க வேண்டுமெனவும் யுனிசெப் வேண்டிக் கொள்கின்றது. இப் பிள்ளையினதும் அவரது குடும்பத்தினரதும் உரிமைகள் நிறைவேற்றப்பட வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# சுவீகரித்த காணிகளை கைவிடச் செய்க;' காணி அனுமதிப் பத்திரம் வழங்குக!

திருகோணமலை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மனையாவெளி என்னும் பகுதியில் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் சுமார் அறுபது வருடங்களாகக் குடியிருந்து வருகிறார்கள். இவர்களுக்கு இதுவரைக்கும் குடியிருப்புக் காணிகளுக்கான அனுமதிப் பத்திரம் கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளுக்குப் பல மகஜர்கள் கொடுத்தும் இதுவரைக்கும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இப் பகுதியில் வாழும் ஒரு சிலருக்கு மட்டும் பிரதேச செயலாளர் அவர்களால் குத்தகையென்ற அடிப்படையில் காணிகளுக்குக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நீண்டகாலக் குத்தகையைத் தவிர்த்து நிரந்தரமான காணி உறுதிப் பத்திரம் வழங்க நடவடிக்கையெடுக்கும்படி குறிக்கப்பட்ட அதிகாரிகளைக் கேட்கின்றனர். கடற்றொழிலாளர்களாகிய இவர்கள் தங்கள் காணிகளுக்கு நிரந்தர காணி உறுதிப் பத்திரம் இல்லாததால் இக் காணிக்குள் நிரந்தரக் கட்டடங்களோ அல்லது மலசல கூடங்களோ கட்ட முடியாத நிலையில் மிகவும் அல்லற்படுகிறார்கள்.

இவைகளை நிறைவேற்றுவதென்றால் உள்ளூராட்சி மன்ற அனுமதி பெறல் வேண்டும். காணி அனுமதிப் பத்திரமில்லாததால் மேற்குறிக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்ற முடியாமலுள்ளது. எனவே, இப் பகுதி மக்களின் நன்மை கருதி உயர் அதிகாரிகளோ அல்லது இப் பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்களோ கவனமெடுத்து, இவர்களுக்கான காணி அனுமதிப் பத்திரம் கிடைக்க நடவடிக்கையெடுக்க வேண்டும். அத்தோடு இப் பகுதியை அண்மித்துள்ள கடற்படை முகாமுக்கு அருகாமையிலுள்ள சில காணிகள் கடற்படையினரால் சுவீகரிக்கப்பட்டு எல்லை வேலிகள் போடப்படுகிறது. இவ்விடயமாக குறித்த கடற்படையினரிடம் கேட்டபோது, இது அரசாங்க உத்தரவு எனக் கூறுகிறார்கள். இவ்விடயம் உடனடியாகப் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்குத் தெரிவிக்கப்பட்டும் எந்த வித பலனும் கிடைக்கவில்லை. இப் பகுதி மக்களுக்கு விமோசனம் கிடையாதா? மக்கள் என்ன செய்வதென்று தெரியாது திண்டாடுகிறார்கள். இவர்களின் நீண்டகால முயற்சிக்கு முற்றுப்புள்ளிட்டு இவர்களின் தேவைகளைக் கவனத்தில் கொண்டு படையினரால் சுவீகரிக்கப்பட்ட காணிகளைக் கைவிடவும் தடைசெய்வதுடன் காணிகளுக்கான நிரந்தர உறுதிப் பத்திரம் கிடைக்க நடவடிக்கையெடுக்கும்படி உரிய அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

- இ. மாதவராஜா, திருகோணமலை.

## எழுத்தாளர்களின் கவனத்திற்கு

**மலையகச் செய்திகள் எமக்கு அரசியல் சாயம் பூசி அனுப்பப்படுவதால் எமது தெரிவுக்குட்படுவதில்லை. எனவே சுதந்திரமாகவும், நியாயமாகவும் எவரையும் நேரடியாகக் குறிப்பிடாமலும் உண்மைச் செய்திகளை எழுதக் கூடியவர்கள் தாராளமாக எமக்கு எழுதலாம். செய்தியாகவோ / கட்டுரையாகவோ உங்கள் மன எண்ணங்களை எம்மோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

1. மலையகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் முறைப்பாடுகளைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஏற்கெனவே கவிதை, சிறுகதை என்பவற்றுடன் முரசின் வளர்ச்சியில் ஒன்றித்திருப்பவர்களுக்கு எமது சிரம் தாழ்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பி.கு.**

துணிந்து உண்மைச் செய்திகளை நேர்மையாக எமக்கு எழுதக் கூடிய பிராந்தியச் செய்தியாளர்களின் பங்களிப்பும் வரவேற்கப்படுகிறது. வடக்குக் கிழக்குச் செய்திகளை விடவும், மலையகச் செய்திகள் தொடர்பிலும் முரசு கூடிய கவனம் செலுத்தவுள்ளதால் ஒத்தாசை புரிந்து செயலாற்றத் துடிப்பான எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

**நம்மால் முடிந்த சேவையை நம் சமூகத்திற்குச் செய்வோம். நமக்கு என்ன கிடைத்தது என்பதை விடவும் நாம் என்ன கிடைக்கச் செய்தோம் என்ற கேள்வியை நம்மை நோக்கி நாமே கேட்போம்.**

நன்றி-
ஆ - ர்

**05.07.2004 திகதிய "டெய்லி மிரர்" ஆங்கில இதழில் பிரசுரமான அரசியல் ஆய்வுக் கட்டுரையின் தமிழாக்கம்**

## இன்னொருவர் பார்வையில்

# மறக்கப்பட்டுள்ள போரின் சிறுவர்கள்; யாருடைய பொறுப்பு?

கருணா விவகாரம் கையாளப்படும் முறை தொடர்பாகவே பெரும்பாலான ஊடகங்களும் கொள்கை வகுப்பாளர்களும் அக்கறைகொண்டிருக்கின்றனர். நாட்டின் பாதுகாப்பு மற்றும் சமாதான நடைமுறைகள் என்பன தொடர்பில் இவ் விவகாரம் முக்கியமானதாகியுள்ளது.

இந்த நடைமுறையில் ஒரு மனிதாபிமானப் பிரச்சினை பெருமளவில் கண்டுகொள்ளப்படவில்லை. அதுதான் கருணாவினால் ஆட்சேர்ப்புக்கு உள்ளான சிறுவர்களின் பிரச்சினையாகும். கடந்த ஏப்ரலில் வன்னித் தலைமை கருணாவின் படையணிகளுக்கு எதிரான தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிடும் முன்பாகப் பெருமளவு சிறுவர்கள் ஆட்சேர்ப்புக்கு உள்ளாகியிருந்தனர். அண்மையில் வெளியிடப்பட்ட இரு வெவ்வேறு அறிக்கைகளில் இது சம்பந்தமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனித உரிமைகளின் காவலர்கள் (Human Right Watch) என்னும் அமைப்பு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையும், மட்டக்களப்பு இணையம் என்ற பெயரில் மனித உரிமை ஆர்வலர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையும் இதில் சுட்டிக்காட்டத் தக்கது ஆகும். இந்த இரண்டு அறிக்கைகளும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மிகவும் உளப் பாதிப்புக்கு இலக்கான இந்தச் சிறுவர்களின் நிலை குறித்து தெளிவாகவும் இதயத்தை உருக்கும் வகையிலும் தகவல்களைக் கொண்டுள்ளன. இவர்களைச் சத்யா "போரின் சிறுவர்கள்" என்று பெயர்சூட்டி அழைக்க விரும்புகின்றான். பருவம் அடையாத பலர் ஆட்சேர்ப்புகளுக்கு உள்ளான போதும் எல்லோரும் போர்முனைக்கு அனுப்பப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால், இவர்களில் பலர் போர்முனைக்கும் அனுப்பப்பட்டுள்ளனர் என்பதை மறுக்க முடியாது.

மனித உரிமைகளின் காவலர்கள் அமைப்புக்கான அறிக்கையை தென் ஆசியப் பிராந்திய ஆய்வாளரான ரெஜ் தாப்பா என்பவர் தயாரித்துள்ளார். இதில் கடந்த மூன்று வாரங்களில் கருணாவினால் முன்பு விடுவிக்கப்பட்டவர்களை மீண்டும் அமைப்பில் இணைத்துக் கொள்ள புலிகள் அக்கறை காட்டுவது தொடர்பில் விபரித்துள்ளார்.

போர் முனையில் நிறுத்தப்படுவதற்காக சிறுவர்கள் தமது சொந்தப் பெற்றோரிடமிருந்து களவாடிச் செல்லப்படுகின்றனர். தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துவதாகச் சொல்லிக்கொள்ளும் மக்களில் மிகவும் பாதிப்புக்குள்ளான ஒரு தொகுதி மக்களின் நலன்கள் குறித்து எவ்வித அக்கறையும் இல்லாமல் தாங்களே முன்னர் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்துக்கும் புறம்பாக இந்தச் சிறுவர் திருட்டு இடம்பெறுகிறது.

இந்த விவகாரத்தில் பொதுமக்களின் தேவை கருதி மட்டக்களப்பு இணையத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையிலிருந்து ஒரு நீண்ட பந்தியை மேற்கோள் காட்ட விரும்புகிறேன். இந்தப் பந்தி ஏற்படுத்திய உளப் பாதிப்புக்கள் கடந்த சுமார் ஒரு வார காலமாக என்னைப் பெரிதும் சஞ்சலப்படுத்தியுள்ளது. அப் பந்தி பின்வருமாறு விரிகிறது.

"மீண்டும் வீடுகளுக்குத் திரும்பியுள்ள சிறுவர்களில் சுமார் அறுபது வீதமானவர்கள் பெண்கள். இவர்களில் பலரது தலைமுடிகளும் மிகவும் குறுகலாக வெட்டப்பட்டுள்ளதால் இலகுவாக அடையாளம் காணப்படக் கூடியவர்களாக உள்ளனர். தலைமுடிகள் வளர்ந்து வந்தாலும் கூட இந்த இளம் பிள்ளைகளின் முகச்சாயல் அவர்களைக் காட்டிக் கொடுத்துவிடுகிறது. இதனால் இவர்கள் பாடசாலைகளுக்குத் திரும்பிச் செல்வது இலகுவானதாக இல்லை. பாடசாலைகளுக்குச் செல்லும் பருவத்தையும் கூடச் சிலர் கடந்துவிட்டுள்ளனர்.

சமூக அமைப்பும் அச்சுறுத்தல்களும் இவர்கள் மீண்டும் சமூகத்தில் ஒன்று கலப்பதை இலகுவாக அனுமதிக்கவில்லை. பாதிப்புக்குள்ளான ஒருவர் கூறுகையில், எனது பிள்ளை பாடசாலைக்குத் தனியேதான் செல்ல வேண்டியுள்ளது. அவளுடன் சேர்ந்து நடந்து செல்வதற்குக் கூட எவரும் முன்வருவதாக இல்லை. ஏனெனில், மற்றப் பிள்ளைகளின் பெற்றோர் பயந்து போயுள்ளனர். எனது பிள்ளையுடன் சேர்ந்து பழகுவதும், இணைந்து நடப்பதும் கூட தமது பிள்ளைகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்திவிடலாமென முன்னெச்சரிக்கை செய்கின்றனர். தமது பிள்ளையும் புலிகளுடன் இணைக்கப்பட்டு விடலாம் என அஞ்சுகின்றனர். பாடசாலைகளும் கூட திரும்பி வந்துள்ளவர்கள் குறித்து மிகவும் அவதானமாகவே செயற்படுகின்றன. ஏனைய பிள்ளைகளைப் புலிகளின் பிடிக்குள் சிக்கவைக்க முயற்சி எடுக்கப்படுகிறதா என்பது குறித்துக் கண்ணும் கருத்துமாக உள்ளன; அல்லது புலிகளின் அச்சுறுத்தல்களால் ஏனைய பிள்ளைகளுக்கு ஏதும் ஆபத்து நேரிடுமோ என்ற அச்சத்தில் உள்ளன. இவ்வாறாக சமூகத்தின் பல மட்டத்தினாலும் அவதானிப்புக்கு உள்ளானவர்களாக மாறிவிட்டனர். இதனால் மிகுந்த வெட்கத்துடன் பல சந்தர்ப்பங்களிலும் பின்வாங்க வேண்டியவர்களாகி உள்ளனர். குட்டையாக வெட்டப்பட்ட தலைமுடி, தெளிவான அடையாளமாகிவிட்டது. பல்வேறு சோதனைச் சாவடிகளிலும் இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். இதனால் எல்லோரது பார்வையும் அவர்கள் மீது படர்கின்றது. முன்பு இவர்கள் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் தப்பியோடிவிட்டால் அடையாளம் காண்பதற்கு இலகுவானதாக இருந்தது. இப்போது மீள இணைக்கப்படுவதற்கு அல்லது சமூகத்துடன் ஒட்டாமல் இருப்பதற்கான அடையாளமாக இது மாறிப் போயுள்ளது. இது பிள்ளைகளுக்கு உளவள ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஒரு விடயமாகும்.

இது பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, இப் போரின் சிறுவர்களோடு நேருக்குநேர் பழகுகின்ற ஒவ்வொருவருக்கும் மிகுந்த மனச் சங்கடத்தை ஏற்படுத்துகின்ற ஒரு விடயமாகும். இது விடயத்தில் எமக்கு ஏதும் உளப் பாதிப்பு ஏற்படவில்லையானால் எமது தலைகளும் கூடப் பரிசோதிக்கப்பட வேண்டியவையே.

இதனாலேயே இந்தப் பாதிப்புகளுக்குப் பொறுப்பாளிகள் யார்? இப்போது என்ன செய்யலாம்? என்ற கேள்விகள் மேலேழுகின்றன. இதற்குப் புலிகள் என்ற ஒரேயொரு தரப்பு மட்டும்தான் பொறுப்பாளிகளாக இருக்க முடியும். ஆனால், இது குறித்துப் புலிகளிடம் பேச முற்பட்டால் எல்லாப் பங்குதாரர்களையும் போலவே புலிகளும் முற்றாக மறுத்துவிடுவார்கள். புலிகளைத் தவிர்த்தால் அரசாங்கமும் யுனிசெப் அமைப்பும் இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டியிருக்கும். இத்தகைய செயற்பாடுகளை நிறுத்துவதாகவும் இச் செயற்பாடுகளைத் தூண்டும் காரணிகளைக் கண்டறிந்து அவற்றைப் பூரணமாக நிறைவேற்றுவதாகவும் இந்த தரப்பும் வாக்குறுதிகள் வழங்கியது மட்டுமன்றி, அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாகவும் இவர்கள் கூறியிருந்தனர். ஆனால், தளத்திலிருந்து கிடைக்கும் தகவல்கள் எதுவும் இவற்றை உறுதிப்படுத்துவதாக இல்லை. அரச சார்பற்ற நிறுவனங்களைப் பொறுத்தவரையில் சிறுவர்களின் நலன்களைப் பேணும் மனிதாபிமான நடவடிக்கைகள் யுனிசெவ் நிறுவனத்தின் பொறுப்பாகும். யுனிசெவ் அமைப்பானது புனர்வாழ்வு நிலையங்களை அமைக்கும் செயற்றிட்டத்துடன் தனது பணி முடிந்து விட்டதாகக் கூறுகிறது. அதுவும் புலிகள் அமைப்பினால் நேரடியாக யுனிசெவ் நிறுவனத்திடம் கையளிக்கப்படும் சிறுவர்களை இடைத்தங்கல் முகாம்களில் வைத்துப் பராமரிப்பது, இதற்கான இடைத்தங்கல் முகாம்களை அமைப்பது என்பவற்றுடன் தமது பணிகள் முடிந்து விடுவதாகவே யுனிசெவ் கருதுகின்றது.

ஆனால், இங்கே ஒரு இரண்டும் கெட்டான் நிலை தோன்றுகின்றது. அதாவது, யுனிசெவ்வின் செயற்றிட்டமானது புலிகளின் மனிதாபிமான உதவிகளுக்கான முகமாகக் காட்டப்படும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகிறது. இதனால் புலிகளால் நேரடியாக யுனிசெவ் அமைப்பிடம் கையளிக்கப்படும் சிறுவர்கள் தொடர்பாக மட்டுமே அது அக்கறை கொண்டுள்ளது. சிறுவர்களைப் புலிகள் தொடர்ந்து விடுவிக்காதது மட்டுமன்றி, மறுபுறத்தில் சிறுவர்கள் ஆட்சேர்ப்புக்கு உள்ளாகுவதையும் யுனிசெவ்வின் செயற்றிட்டத்தினால் தடைசெய்ய முடியவில்லை. அத்துடன் கருணாவினால் விடுவிக்கப்பட்ட சிறுவர்களுக்கோ, அல்லது பெற்றோருடன் மீள இணைந்த சிறுவர்களுக்கோ யுனிசெவ்வினால் எதுவும் செய்ய முடியவில்லை. முன்னரைப் போல புலிகளைத் திருப்திப்படுத்தும் நோக்குடன் அல்லாமல் சிறுவர் ஆட்சேர்ப்புக்கு எதிராக அண்மைக் காலங்களில் யுனிசெவ் குரல் கொடுத்துள்ளது குறிப்பிடக்கூடியது ஆகும். இந்தச் சிறுவர்களைப் பதிவுக்கு உட்படுத்துவது தொடர்பிலும் யுனிசெவ் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவைதான்.

பதிவு செய்வதன் மூலம் இந்த ஐ.நா. நிறுவனம் அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது என்பது இன்னமும் தெளிவானதாக இல்லை. மேலும் கருணாவினால் கைவிடப்பட்ட சிறுவர்களை யுனிசெவ்வும், ரி.ஆர்.ஓவும் இணைந்து நடத்தும் கிளிநொச்சியிலுள் இடைத்தங்கல் முகாமில் ஒப்படைக்க, பாதிக்கப்பட்ட பெற்றோர் முன் வருவார்கள் என்பதும் எதிர்பார்க்கப்பட முடியாத மற்றுமொரு விடயமாகும். அத்துடன் மீண்டும் போர் மூளுமானால் புலிகளின் பிடியிலிருக்கும் சிறுவர்களைப் பாதுகாப்பாக மீட்டுவருவது யுனிசெவ் அமைப்புக்கு சாத்தியம் என்பதற்கும் எவ்வித உத்தரவாதங்களும் இல்லை.

அதேபோல, இந்த மனிதாபிமானப் பிரச்சினை தொடர்பாக அரசாங்கம் தனது பொறுப்புக்களிலிருந்து விலகிக்கொள்ள முடியாது. அத்துடன் இந்தப் போரின் சிறுவர்கள் பிரச்சினையை புலிகள் அமைப்பின் உள் விவகாரம் எனக் கூறி ஒதுங்கிக்கொள்ளவும் முடியாது.

அரசாங்கம் தனது பிரஜைகளுக்குப் பொறுப்புக் கூறும் கடப்பாட்டிலிருந்து விடுபட்டுக் கொள்ள முடியாது. அரசாங்கமும், யுனிசெவ்வும் இணைந்து கைவிடப்பட்ட சிறுவர்கள் மற்றும் உள்ளூர் மக்கள் தொடர்பாகப் புதியதொரு செயல் திட்டத்தை வகுத்துக்கொள்ள முன்வர வேண்டும். தெளிவாக இனங்காணப்படக் கூடிய காரணங்களுக்காக இத்தகைய செயற்றிட்டம் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே மேற்கொள்ளப்பட முடியும். தேவை ஏற்பட்டால் இத்தகைய புனர்வாழ்வு நிலையங்கள் கிழக்கு மாகாணத்திற்கு வெளியேதான் அமைக்கப்படலாம். இத்தகைய புனர்வாழ்வு நிலையம் மற்றுமொரு பிந்துனுவெவ விவகாரமாகப் போய் விடாமல் இருப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

சோசலிசவாத சக்திகளும் மற்றும் அரசாங்கக் கட்டமைப்புக்குள் இருக்கும் சிலரும் வேறுபட்ட கருத்துக் கொண்டிருக்கக் கூடுமெனினும் யுனிசெப்பும் சர்வதேச தொண்டர் அமைப்புக்களும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து பாதிப்புக்குள்ளான சிறுவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது மற்றும் சமூகத்துடன் இணைப்பதற்கான முகாம்களை அமைத்து நடத்துவதற்கு முன்னுரிமை கொடுத்தல் வேண்டும்.

இந்த வகையில் இதனுடன் தொடர்புபட்ட ஏனைய விடயங்களுக்கும் கவனம் செலுத்தப்பட வேண்டும். புலிகளின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புக் காட்டுகின்ற குடும்பங்கள் பல உள்ளன. புலிகளின் ஆட்சேர்ப்புகள் சமூகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கருதும் புத்திஜீவிகள் பலர் உள்ளனர். இத்தகைய புத்திஜீவிகளும் செயற்பாட்டாளர்களும், அரசாங்கத்தினதும் சர்வதேச சமூகத்தினதும் சுயாதீனமான தலையீடு ஏற்படுமானால் புலிகளின் ஆட்சேர்ப்புக்கு பாதிப்பு ஏற்படுமெனக் கூறி வருகின்றனர். அத்துடன் இத்தகைய சுயாதீன தலையீடுகள் காரணமாகப் புலிகளுக்கு எதிரான உள்ளூர் மக்களின் உணர்வுகள் வலுப்பெறும் எனக் கூறுகின்றனர்.

பின்னைய கருதுகோள் பெரும்பாலும் சாய்வு நாற்காலியில் ஓய்வுபெறும் தீவிரவாதிகளால் முன்வைக்கப்படுகிறது. இது ஒரு அழகான கற்பனையாக இருக்கலாமே தவிர, நடைமுறைச் சாத்தியமானதல்ல. அதாவது, சுப்பிரமணிய பாரதியின் வார்த்தைகளில் கூறுவதானால் வாய்ச்சொல் வீரர்களின் கனவாகவே இந்த எதிர்ப்பு இருக்கும். கிழக்கில் புலிகளுக்குக் காட்டப்படும் எதிர்ப்பானது பெரும்பாலும் தனிப்பட்ட ரீதியிலானதும் தத்தம் பிள்ளைகளின் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டதுமாகும். இது இன்னமும் ஒழுங்குபடுத்தப்பட்ட எதிர்ப்பாக மாறிவிடவில்லை. உண்மையில் தமது ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கு எதிர்ப்புக் காட்டும் பெற்றோருக்கு எதிரான தாக்குதல்களையும் கொலைப் பயமுறுத்தல்களையும் கூட மேற்கொள்வதற்குப் புலிகள் ஆரம்பித்துள்ளனர். புலிகளின் குணாதிசயங்களைப் புரிந்துகொண்டவர்களுக்கு இத்தகைய அச்சுறுத்தல்களை நிறைவேற்றப் புலிகள் பின்னிற்கப் போவதில்லை என்பது தெரியும்.

எனவே, இந்த மனிதாபிமானப் பிரச்சினைகளை நுட்பமாகப் பரிசீலித்தும், புலிகளின் தன்மையை உணர்ந்தும் மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தமது போர்க்கால இயந்திரத்துக்குத் தேவையான பிள்ளைகளைப் பெறுவதில் புலிகள், மனித உரிமைகள் பேணுவது குறித்துக் கவலைப்படப் போவதில்லை. இதனால் இது விடயத்தில் அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்திற்கும் மிகுந்த பொறுப்புகள் உள்ளன.

யுனிசெவ் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகப் பாதிக்கப்பட்ட போரின் சிறுவர்களுக்குப் புனர்வாழ்வு வழங்குவதற்கும் பாதுகாப்பதற்கும், மீள் ஆட்சேர்ப்புக்கு இலக்காகாமல் தடுப்பதற்கும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலாவது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலமாக மனிதாபிமானத்துக்குப் புறம்பாக சிறுவர் ஆட்சேர்ப்புகளுக்கு எதிராக ஒன்று திரண்டு செயற்படும் அதிகாரம் தமக்கு இருப்பதாக உள்ளூர் மக்கள் உணரும் நிலைமை ஏற்படும்.

தனிப்பட்ட முறையில் குடும்பங்கள் காட்டும் எதிர்ப்புக்களை இந்தத் தருணத்தில் மிகைப்படுத்திப் பிரசாரம் செய்வது பிள்ளைகளுக்கும் அக் குடும்பத்தினர்களுக்கும் நன்மைகளை ஏற்படுத்துவதற்குப் பதிலாகப் பாதிப்புக்களையே ஏற்படுத்திவிடலாம்.

> **சிறுவர்களைப் புலிகள் தொடர்ந்து விடுவிக்காதது மட்டுமன்றி, மறுபுறத்தில் சிறுவர்கள் ஆட்சேர்ப்புக்கு உள்ளாகுவதையும் யுனிசெவ்வின் செயற்றிட்டத்தினால் தடைசெய்ய முடியவில்லை. அத்துடன் கருணாவினால் விடுவிக்கப்பட்ட சிறுவர்களுக்கோ, அல்லது பெற்றோருடன் மீள இணைந்த சிறுவர்களுக்கோ யுனிசெவ்வினால் எதுவும் செய்ய முடியவில்லை.**

ஆக்கம் :- சத்யா.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## -வாழ்க்கை சரிதம்-


நடராஜன் ஆகியோர் ஹைதராபாத் சென்றோம்.

அப்போது ஆந்திராவின் முதலமைச் சராக இருந்த திரு. என்.டி.ராமராவ் அவர்கள் எங்களுக்கு மதிய விருந்தளித்தார். பிரும்மாண்டமான அரசு மண்டபம் ஒன்றில் அந்த விருந்து நடந்தது.

Self Service என்கிற முறை அந்த விருந்தில் கடைப் பிடிக்கப்பட்டதால் வேண்டிய உணவை என் தட்டில் நிரப்பிக்கொண்டு நான் வராந்தாவில் காற்றாட நின்று சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், தன்னுடைய உணவுத் தட்டைக் கையில் ஏந்தியவாறு என் அருகில் வந்து நின்று ஒரு பிரமுகர் தமிழ் சினிமாவைப் பற்றிய பல விவரங்களை என்னிடம் கேட்டறியலானார். அப் போது இந்திப் பாடல்கள் பற்றியும், தமிழ்ப் பாடல்கள் பற்றியும் நாங்கள் நிறையவே பேசிக்கொண்டு விருந்துண்டோம்.

அச் சமயம் என்னுடன் உரையாடியவர் கீழ்க்கண்டவாறு ஆங்கிலத்தில் சொன்னார்.

Mr.Vaali.....I was asked belive some decdes back, Tamil film songs were highly influenced by Hindi tunes and Western tunes... Now, I chanced to hear some of your Tamil film songs. They reflect your tradition and culture....I think Mr.Illayaraja is mostly responsible for this.....



இப்படி இளையராஜாவின் மண் வாசனை மிக்க பாடல்கள் குறித்து அன்று என்னிடம் கருத்துத் தெரிவித்தவர். அன்றைய தமிழக ஆளுநர் திரு.குரானா அவர்கள். அதைக் கேட்டு, என் புருவங்கள் அரை அங்குலம் உயர்ந்து நின்றன. இளையராஜாவின் இசை எவரையெல்லாம் ஈர்த்திருக்கிறது என்பது குறித்து நான் சிந்தனையில் சில வினாடிகள் மூழ்கிப் போனேன்.

தமிழ்த் திரைப் பாடல்களில் இளையராஜாவின் பங்களிப்பு என்ன என்பது குறித்து இப்போது நான் எழுத வரவில்லை. ஏனெனில் அதை ஆய்வு செய்து பேச வேண்டிய பகுதி பிறகு தான் வர இருக்கிறது.

எதற்கும் காலம் கனிய வேண்டும் என்று முன் அத்தியாத்தில் சொல்லியிருந்தேனல்லவா? அது குறித்துத் தான் இப்போது ஒரு முக்கியத் தகவலை உங்கள் முன் வைக்க இருக்கிறேன்.

இளையராஜா இன்று யாத்தளித்துள்ள Simphony என்னும் சாதனை ஏற்கெனவே ஒருமுறை, பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பாக உருவாகும் தறுவாயில் இருந்திருக்கிறத.


சுமார் அறுபது வாத்தியங்களை வைத்துக் கொண்டு ஒரு Simphony ஐ உருவாக்கி தமிழ் நாட்டு மேடைகளில் முழங்க வேண்டுமென்று ஓர் இளைஞர் ஆசைப்பட்டிருக்கிறார். மேற்கத்திய இசையை முறையாகக் கற்றவர் அவர்.


1975 – இல் அந்த முயற்சியில் அந்த இளைஞர் ஈடுபட்டார். தியாகராயநகர் பனகல் பார்க் அருகில் உள்ள வெங்கடேஸ்வரா கல்யாண மண்டபத்தில் அறுபது வாத்தியக்காரர்களையும் வரவழைத்து, அவர் தான் தயாரித்து வைத்திருந்த Simphony களை அவர்களுக்கு எழுதித் தந்து, மூன்று மாத காலங்களில் ஆறு தடவைக்கு மேல் மணிக்கணக்காக ஒத்திகை பார்த்தார்.

அந்த இளைஞரின் இசைப் புலமையையும் இடையறாத ஆர்வத்தையும் நன்கு உணர்ந்த வாத்தியக்காரர்கள் அனைவரும் அவரவர் செலவிலேயே ஒத்திகைக்கு வந்து போயிருக்கிறார்கள். தேநீர் மட்டுமெ அவர்களுக்கு வழங்கப்பட்டது.

Simphony - வாசிக்க வந்த வாத்தியக்காரர்களெல்லாம் ஏனோ, தானோ பேர் வழிகளல்ல. நன்கு விளைந்த கலை ஞர்கள். சுருங்கச் சொன்னால், அந்நாளில் பல்வேறு புகழ் வாய்ந்த திரைப்பட இசையமைப்பாளர்களின் குழுக்களில் பங்குபற்றிப் பணியாற்றிக்கொண்டிருந்த ஏ-1 கலைஞர்கள்.

(தொடரும்...)






அந்த வெள்ளை நிற வேன் ஸிமென்ஸ் பில்டிங்கின் பின்னால் மறைந்தது குறித்து அவர்கள் ஏமாற்றமடைந்திருக்க வேண்டும். அங்கே வைத்துத்தான் நான் உள்நுழையும் போது அவர்கள் என்னைத் தவற விட்டிருக்க வேண்டும். ஏனென்றால் அந்த நுழைவாயில் மதகுருமாருக்காக ஒதுக்கப்பட்ட ஒன்று.

பீட்டர் வோக்கர் எனது பழைய நண்பர். Ely இன் முன்னாள் பிஷப். எம்மை வரவேற்பதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார். அவர் என்னை ஒரு சிறிய அறைக்கு அழைத்துச் செல்கிறார். அங்கேதான் அவர் தனது அங்கியை அணிவார். நானும் புத்தாடை புனைவேன். அதை எனது மகன் வில்லியம் Old Vicarage (பாதிரியின் வாசஸ்தலம்) இலிருந்து எடுத்து வருவான். கடந்த சில தினங்களாக நான் அணிந்து கொண்டிருக்கும் ஆடைகளிலிருந்து விடுதலை கிட்டுவது எனக்கு மிகவும் மன மகிழ்ச்சியைத் தந்தது. சிறை நெடி இருக்கிறதே, அது ஒரு வகையான நறுமணம். ஆனால் நிகோல் கிட்மனால் கூட அதைப் பிரபலப்படுத்த முடியாது.

பிஷப் என்னை இறுதி ஆராதனைக்காகக் கூட்டிச் செல்கிறார். அவர் சொல்கிறார். அது சுமார் பதினைந்து நிமிடங்கள் நீடிக்குமென்று. ஆனால் ஈமச்சடங்கின் முக்கியமான கிரியைகள், கிரான்ட்செஸ்டரில் இருக்கும் புனித அன்றூ மற்றும் புனித மேரி பரிஷ் சர்ச்சில் 12 மணிக்கு இடம்பெறுமென்பதை அவர் உறுதிப்படுத்துகிறார்.

சில நிமிடங்கள் கழித்து எனது குடும்பத்தினர் முன் நுழைவாயில் மூலமாக உள்ளே வந்தனர். க்ளிக் பண்ணும் கமராக்களுக்கும், உரத்த கேள்விகளுக்கும் முகங்கொடுக்கின்றனர். மேரி கம்பீரம் மிகுந்த கறுப்பு நிற ஆடையிலும் எளிமையான Brooch (பெண்கள் ஆடையில் அணியும் வேலைப்பாடு மிகுந்த ஊசி) இலும் காணப்படுகிறாள். அது எனது தாயார் அவர்கள் அவரது உயிலில் அவளுக்காக எழுதி வைத்தது. அவள் வாடிய வதனத்துடன் காணப்படுகிறாள். அதுதான் நான் குற்றவாளிக் கூண்டிலிருந்து இறங்குவதற்கு முன்பு அவள் பற்றிய கடைசி ஞாபகம். இந்தப் பயங்கரச் சோதனை எனது

## தமிழில் தருவது ஜெஃப்ரி ஆர்ச்சர்

குடும்பத்திற்கு மிகப் பெரிய சுமை என்பதை உணர ஆரம்பிக்கிறேன். உலகத்துக்குத் தங்களது உண்மையான உணர்ச்சிகளை

வெளிக்காட்டாது தங்களது நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு செல்வது எவ்வளவு கஷ்டமான ஒரு காரியம் என்பது எனக்குப் புரிகிறது.

மேரி என்னோடு சேர்ந்துகொள்வதற்காகப் பின்னால் வருகிறாள். நான் சிறிது நேரம் அவளைத் தாங்கியபடி இருக்கிறேன்.

(பக்கங்கள் வளரும்)

1998ஆம் வருடம் வரை 'வயாக்ரா' தொடர்பாக எமது நாட்டில், குறிப்பாக மேலைத்தேய நாடுகளில் கூட அந்தளவுக்குப் பேசப்படவில்லை. ஆனால் ஆண்மை இன்மை என்பது அப்பொழுதும் இப்பொழுதும் ஒரு பிரச்சினையாகவே இருந்து வருகிறது. 'வயாக்ரா' செய்துகொள்ள முடியும் என்பதே வைத்தியர்களது கருத்தாகும்.

எனினும், நவீன கண்டுபிடிப்புகள் மனிதனின் செயற்பாடுகளை இலகுவாக்குவதாகக் கூறி சந்தைக்கு வரும் பொருட்களின்பால் ஈர்த்துச் செல்லப்படுவதையே நாம் காண்கின்றோம்.


# ஆண்மைக் குறைவை ஏற்படுத்தும் செல்லிடத் தொலைபேசி

அறிமுகமாகும்வரை அடிமட்டத்தில் இருந்து வந்த ஆண்மை இன்மை அல்லது பற்றாக்குறை எனும் பிரச்சினை 1998இன் பின்னர் பகிரங்கமாகவே உலகில் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இன்று, உலகின் அனைத்து நாடுகளிலும் வயாக்ரா பற்றிப் பேசப்படுகின்றது. வயது முதிர்ந்த ஆண்களுக்கும் கூட ஆண்மைச் சக்தியைக் கொண்டுதரக் கூடியது எனக் கூறப்படுவதால் இதற்கான கேள்வி உலகச் சந்தையில்

இவ்வாறான பொருட்கள் எதிர்காலத்தில் மனிதனை அழித்துவிடும் என்பது சமூக ஆய்வாளர்களின் கருத்துக் கணிப்பாக இருந்து வருவதை யாரும் கண்டுகொள்வதாக இல்லை.

ஆண்களுக்கு இழந்த வீரியத்தை மீட்டுக் கொடுப்பதெனக்கூறி விற்பனைச் சந்தைக்கு வந்த வயாக்ரா இன்று பெண்களுக்கும் வீரியத்தை வழங்குவதாகக்கூறி, சந்தைக்கு வந்துள்ளது. இதன் மூலம் உடனடி இன்பங்களை நாடிய ஆண்களும், பெண்களும் இன்று தாகம் பிடித்து



அதிகரித்துவிட்டது. இதில் என்ன இருக்கிறது என வைத்தியர்கள் கூட அறியும் முன்னர் நீல நிற இந்தச் சிறு வில்லை பிரபல்யமாகி விட்டது.

எனினும், இழக்கப்பட்ட ஆண்மைச் சக்தியை முழுமையாக மீட்டுத் தருவதில் வயாக்ராவினால் முடியாது போய்விட்டது. இன்றும் கூட உலகில் 20 முதல் 30 மில்லியன் ஆண்கள் தமது இழந்துபோன ஆண்மைச் சக்தியை மீட்டெடுக்க வயாக்ரா உபயோகித்து வருகின்றனர் என்றபோதும் அவர்களால் குறித்த செயற்பாட்டில் ஈடுபட இயலாமல் உள்ளதாகவே ஆய்வுகள் கூறுகின்றன.

இதனை உபயோகித்ததன் பின்னர் மேலும் பலர் பலவிதமான பக்கவிளைவுகளையும் எதிர்கொண்டுள்ளனர். தலைவலி, இடுப்பு சார்ந்த பகுதிகளில் வேதனை பார்வைக் கோளாறு போன்ற பல்வேறு நோய்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளன. மேலும் இருதய நோய்கள் காரணமாகவும் பலர் இப் பழக்கத்தைக் கைவிட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

நைட்ரேட் அல்லது நைட்ரொக்லிஸலின் கூடிய மருந்து வகைகளை உபயோகிப்பவர்கள் வயாக்ரா பாவிப்பார்களாயின் பயங்கரமான பக்க விளைவுகளை எதிர்நோக்குவார்கள் என்றும் தெரியவருகிறது.

வயாக்ராவை விட பொஹிம்பயின், ஜின்கென்க், டி.எச்.ஈ.ஏ. என்ட், விட்டமின்கள் என்பனவும் இழந்த ஆண்மைச் சக்தியை மீட்டெடுக்கவென ஆண்களால் உபயோகப்படுத்தப்பட்டு வந்துள்ளன..

ஆனால், இன்றைய நவீன உலகில் மருத்துவர்கள் பல புதிய மருந்து வகைகளை சிபாரிசு செய்து வருகின்றனர். Vaccum pump, Alprostadils என்பன இந்த ரீதியில் பிரதானமானவையாகக் கொள்ளப்படுகின்றன.

நூற்றுக்கு 15 வீதமானவர்களது இழந்த ஆண்மைச் சக்தியை மருத்துவர்களின் ஆலோசனையின்படி சமப்படுத்திக்கொள்ள இயலும் என மருத்துவர்கள் பாரிய நம்பிக்கை கொண்டுள்ளனர்.

ஒருவருக்கு இராக் காலங்களில் மாத்திரம் இப்பிரச்சினை தோன்றினால் அல்லது ஒரு குறிப்பிட்ட பெண்ணுடன் சேர்க்கையில் ஈடுபடும்போது மாத்திரம் பிரச்சினை தோன்றினால் இது முற்றுமுழுதாகவே மனநிலை தொடர்பான பிரச்சினையாகும் என்பதே மருத்துவர்களது கருத்தாக உள்ளது. இதனை மருத்துவ ஆலோசனைகள் மற்றும் பாலியல் சிகிச்சை முறைகளின் மூலம் நிவர்த்தி

அலைந்து திரிகின்றனர்.

உண்மையிலேயே பெண்களுக்கு இது அவசியம்தானா? என்றொரு கேள்வி இப்போது அமெரிக்க விஞ்ஞானிகளிடையே எழுந்துள்ளது. இதுவரையில் பெண்களுக்கு என இப்படியானதொரு வீரிய மருந்து அறிமுகப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். தற்போது அமெரிக்க விஞ்ஞானிகள் ஒரு ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். அதாவது, ஆண்களது டெஸ்டொஸ் ரெரோன் (Testos terone) ஹோர்மோன் பெண்களது பாலியல் செயற்பாட்டில் எந்தளவுக்குப் பங்களிப்பை நல்குகிறது என்பதே அந்த ஆய்வாகும்.

இதிலிருந்து 450 பெண்களது கருக்கள் அழிந்து போயுள்ளமையும் இது மேற்படி மருந்துகளின் பாவனையால் நிகழ்ந்திருக்கலாம் என்றும் தெரியவந்துள்ளது.

இயற்கையான வகையில் சேர்க்கையில் ஈடுபட்ட பெண்களில் 81 வீதமானவர்கள் பாலியல் செயற்பாட்டில் திருப்தி கண்டுள்ளதாகவும், செயற்கை ரீதியில், மேற்படி மருந்துகளை உபயோகித்து செயற்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் அந் நிலையை எட்டவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

மேற்படி மருந்து வகைகளைஉபயோகிப்பதன் மூலம் தலைவலி, தோலின் கொழுப்புச் சக்தி குறைபடுதல், கழுத்து மற்றும் முகத்தில் கறுப்பு நிற பருக்கள் ஏற்படுதல் போன்ற பக்கவிளைவுகள் ஏற்படுவதாகவும் இதன்போது தெரியவந்துள்ளது.

இதே நேரம் அண்மைய கண்டுபிடிப்புகளின்படி, சில காலமாக செல்லிடத் தொலைபேசிகளை காற்சட்டைப் பைகளிலோ, சட்டைப் பைகளிலோ வைத்திருப்பதால் ஆண்களின் வீரிய சக்தி 30 வீதமாகக் குறைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பிரசவ மற்றும் பெண்களது நோய்கள் தொடர்பான ஹங்கேரி நிபுணரான கிம்ரே பெஜேஸ் என்பவரே இத் தகவலை வெளியிட்டுள்ளார். இதற்காக இவர் 221 ஆண்களது விந்தினை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

ஆனால் இந்த ஆய்வு ஒரு முழுமையான ஆய்வல்ல என்றே பிரித்தானிய விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

செல்லிடத் தொலைபேசிகளின் அலை வரிசைகள் இன்னமும் பாதுகாப்புத் தரத்தை மீறவில்லை என்பது இவர்களது கருத்தாக உள்ளது. ஆதலால் இது தொடர்பில் மேலும் ஆய்வுகளை நடாத்த வேண்டும் என இவர்கள் கூறுகின்றனர்.

யோசிக்க வேண்டிய விடயம்தான்!

- பாரூக் -

# மகேஸ்வரனுக்கு உயிராபத்து
# நாட்டிலிருந்து வெளியேறுகிறார்

சென்ற வாரம் அரசியல் மல்யுத்தம் பற்றி எழுதும்போது தெரிவித்த கருத்துக்களில் துணிச்சலும் உண்மையும் வெளிப்பட்டிருந்தது என எமது பணிக்கு உற்சாகமளித்த அனைவருக்கும் நன்றிகள்.

அதன் தொடராகவே இப்போது பா.உ. மகேஸ்வரன் அவர்கள் தனக்கு உயிராபத்து இருப்பதால் நாட்டிலிருந்து வெளியேறப் போவதாக அறிக்கை வெளியிட்டுள்ளார். மகேஸ்வரன் அவர்கள் கனேடிய தூதரகத்தில் விசாவுக்கு விண்ணப்பித்து அவருக்கு விசா கிடைத்துவிட்டதாக அறியக் கிடைத்தது. இதை எழுதிக்கொண்டிருக்கும்போதே அவர் நாட்டை விட்டுப் போயிருக்கலாம்.

இப்படித் தன்மானத் தமிழன் ஒருவர் நாட்டை விட்டு வெளியேறுமளவுக்கு என்ன நடந்தது? இதுதான் இன்றைய இமாலயக் கேள்வி.

2004 ஏப்ரல் 2இல் நடந்த இலங்கையின் 13ஆவது பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட மகேஸ்வரனுக்குத் தடைவிதிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலிருந்து குடும்பத்தோடு விரட்டப்பட்டார். ஆனால், யாரால் விரட்டப்பட்டார் என்றோ, ஏன் விரட்டப்பட்டார் என்றோ வெளியில் சொல்வதை மகேஸ்வரன் அப்போதும் இப்போதும் தவிர்த்து வருகிறார். அது அவரின் தந்திரோபாயமாகவும் இருக்கலாம்.

ஆனால், அவருக்கு மிக நெருக்கமானவர்களிடம் புலிகள்தான் இப்படித் தன்னை பழி வாங்கியதாகச் சொல்லி கவலைப்பட்டதை ஏற்கெனவே நாம் தெரிவித்திருந்தோம். ஏக தலைமையை வெளி உலகுக்குக் காட்டுவதற்காகப் புலிகளின் ஏஜண்டுகள் தவிர தமிழர்கள் எவரும் வட-கிழக்கு மாகாணங்களில் வேட்பாளர்களாக நிற்க முடியாத சூழல் உருவாக்கப்பட்டது. இதனாலேயே மகேஸ்வரன் விரட்டப்பட்டார். இது தெரியாமல் மட்டக்களப்பில் ஐ.தே.க. பட்டியலில் போட்டியிட்ட திரு.சின்னத்தம்பி சுந்தரமூர்த்தி சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்த விடயம்.

**கடந்தமுறை இறப்பர் குண்டு!**
**இந்த முறை தேர்தல் குண்டு!**
**தமிழ் மக்கள் முட்டாள் அல்ல!**
**கபட நாடகம் ஆடாதே மகேஸ்வரனே!**
**மேல்மாகாண மக்கள் முன்னணி**

கொழும்பு வீதியோரங்களில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டி

இதற்குப் பிறகு மகேஸ்வரன் கொழும்புக்கு வந்து ஐ.தே.க.வின் தலைமையைச் சமாளித்து கொழும்பில் போட்டியிட்டார். சரி, பிழை, கருத்து வேறுபாடுகள் இருந்தபோதும் தனது அரசியல் சாணக்கியத்தைப் பிரயோகித்து கொழும்பில் வேட்பாளரானார்.

அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொள்ளுமாறு யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டப்பட்ட தான் கொழும்பில் எம்.பி.யானால் விரட்டியவர்களின் முகத்தில் கரி பூசுவதாக இருக்கும் என மகேஸ்வரன் திட்டமிட்டார். இப்போது தான் மகேஸ்வரன் இலக்கு வைக்கப்பட்டார். ஜெம்பட்டா வீதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டபோது இவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதும், தலையில் காயம் காரணமாக இவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதும் அனுதாப வாக்குகளாக விழுந்தன.

தேர்தலில் வெற்றி பெற்றால் அது தமக்குச் சவாலாக இருக்குமென்று தெரிந்தே சுடப்பட்டார் எனினும் குறி தவறி உயிர் தப்பினார். இப்போது அடுத்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

புலிகளை வெளிப்படையாக ஆதரித்து தேசியத் தலைவர் பிரபாகரன்தான் என்றும் ஐ.தே.க.வில் இருந்துகொண்டே கூறிவந்தார் மகேஸ்வரன். பின்னர் ஏன் இவர் இலக்கு வைக்கப்பட்டார்?

மகேஸ்வரன் தமிழ் மக்களை ஏமாற்றவும் தான் சவாலாக வாழ்ந்து வருவதிலிருந்து உருமறைப்புச் செய்யவும் உகந்த வழிப் புலிகளுக்குப் புகழாரம் சூட்டுவதுதான் என்று இதையே மகேஸ்வரன் செய்து வந்தார்.

முன்னொரு தடவை பெரும் ஆரவாரமாக வன்னி சென்று வரி வழங்குவதில் முரண்பட்ட மகேஸ்வரனுக்கு கஞ்சியும் கருவாடும் வழங்கப்பட்டதாக முன்பு செய்திகள் வெளியாகின. அதற்குப் பிறகு வன்னிப் பக்கம் தலை வைப்பதையே தவிர்த்தார். இருந்தும் தனக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது என்பதற்காகப் புலிகளைப் புகழ்ந்தார். புலிகளிடமே இரட்டை வேடம் போடுவதை புலிகள் வெறுத்தனர். எந்தத் தவறை மகேஸ்வரன் செய்திருந்தாலும் அவரைக் கொல்வதற்கு முடிவெடுப்பது நியாயமாகாது.

மகேஸ்வரனை வேவு பார்ப்பதற்காக இருவர் வந்ததாகவும் அவர்களை மனோ கணேசனே அனுப்பினார் எனவும் பொலிஸாரிடம் அவ்விரு இளைஞர்களையும் பிடித்துக் கொடுத்தார். விசாரணையில் அவ்விரு இளைஞர்களும் புலிகள் எனத் தெரியவந்தது. பின்னர் அவர்களை விடுவிப்பதற்கு மகேஸ்வரன். முயற்சி எடுத்தார். அது கைகூடவில்லை. இவ்விடயத்தில் புலிகளின் மூக்கைச் சுண்டிவிட்டார் மகேஸ்வரன். அவர்களின் பார்வை தீப்பொறியாக இருக்குமெனப் பயந்து நாட்டை விட்டு வெளியேறுகிறார்.

இந்தக் கடைசிக் கட்டத்திலும் தான் யாரிடமிருந்து உயிராபத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கவில்லை. ஒரு வேளை விசா பெறச் சென்ற இடத்தில் மட்டும் இரகசியமாகத் தெரிவித்திருக்கக் கூடும். என்னதான் வெளிநாடு சென்றாலும் அச்சுறுத்தல் தொடரும் என்பதால் இப்போதும் புலிகளின் தலைவருக்கும் விடுதலைப் போராட்டத்துக்கும் தனக்கும் இருக்கும் உறவை எவராலும் பிரிக்க முடியாது என்றும் ஆணித்தரமாகக் கூறியுள்ளார். இவரின் இந்தத் தந்திரோபாயத்தை என்னவென்று சொல்வது. தனது எம்.பி. பதவியை இராஜினாமாச் செய்தால் அது பெரும்பான்மையினத்தவருக்குப் போய் விடும் என்பதால் பதவி விலகப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். மூன்று அல்லது ஆறு மாதத்துக்குப் பிறகு வந்து பாராளுமன்றத்தில் ஒப்பமிட்டுக்




கொள்வாராம். ஆகா இவரல்லவோ மக்கள் பிரதிநிதி. 'தலைநகர் வாழ் தமிழ் மக்களின் பாதுகாவலன்' எனத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கொட்டை எழுத்தில் போட்ட மகேஸ்வரன் தனக்கே பாதுகாப்பில்லாமல் வெளியேறுகிறார். புலிகளின் செயற்பாடுகளில் சரி, பிழை பேசாமல் மௌனமாக இருக்கும் புத்திசாலிகள் பற்றி மக்கள் புரிந்துகொள்ள இது நல்ல உதாரணம். போராளிகளாக இருந்தவன் துரோகியாக்கப்பட்டு சுடப்படுவதையும் மாற்றுக் கருத்துக் கொண்டவன் தேசத் துரோகியாக்கப்பட்டு கொல்லப்படுவதையும் மௌனமாக ஏற்றுக்கொண்ட மகேஸ்வரனுக்கும் சரி, ஏனையோருக்கும் சரி இதே கதிதான் என்பதை நினைவில் கொள்வது நல்லது.

**வித்தியா**

---


(சிறார் ஆட்சேர்ப்பினால் ........)
6ஆம் பக்கத் தொடர்ச்சி.....


புலிகள் சார்பில் அந்த இயக்கத்தின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கையொப்பமிட்டுக் கையளித்துள்ள கடிதத்தில் "18 வயதிற்குக் குறைந்தவர்கள் இயக்கத்தில் இணைய முற்பட்டால் அவர்களுக்குத் தகுந்த புத்திமதி கூறி, அவர்களது பெற்றோர், உறவினரிடம் ஒப்படைத்தல் வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், பல்வேறு நெருக்குதல்கள் காரணமாகப் புலிகளால் விடுவிக்கப்பட்ட பிள்ளைகளுடைய பெற்றோர் யுனிசெப் அமைப்பினாலும் புலிகளாலும் வழங்கப்பட்ட உத்தரவாதக் கடிதங்களையும் கையில் வைத்துக்கொண்டு நிம்மதியாக இருக்க முடியாத சூழ்நிலை இப்போது வடக்கு - கிழக்கில் ஏற்பட்டுள்ளது.

ஏனென்றால், இந்த உத்தரவாதக் கடிதங்கள் கையளிக்கப்பட்டு புலிகளால் விடுவிக்கப்பட்ட 56 சிறார்கள் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் மீண்டும் சமீப சில நாட்களாகப் பிடிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று யுனிசெப் அமைப்பு குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

புலிகள் இப்பொழுது தீவிரமாக ஆட்சேர்ப்பில் ஈடுபட்டுள்ளதால் யுனிசெப் கூறும் இந்த எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்திருக்கலாம் என நம்பப்படுகிறது. புலிகளின் கருணா அணியினரால் இளம் சிறுவர், சிறுமியர் அந்த இயக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட வேளையில் அவர்கள் பெரும் நிம்மதியோடு தமது உறவினர்களுடன் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் நடமாடித் திரிந்தார்கள்.

கடந்த ஏப்ரல், மே மாதங்களில் தலைமுடி கட்டையாக வெட்டப்பட்ட சிறுமிகள் அனேகம் பேர் சுதந்திரமாக நடமாடியதைக் காணக் கூடியதாக இருந்தது. ஆனால், புலிகள் மீண்டும் இளம் சிறார்களைப் பிடிக்கத் துவங்கியவுடன் சிறுவர், சிறுமியரின் நடமாட்டமும் நின்றுவிட்டது. இவர்களில் பெரும்பாலானோர் மீண்டும் புலிகளால் பிடிக்கப்பட்டிருக்கலாம் எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு சில பெற்றோர் தமக்குத் தெரிந்த முஸ்லிம் குடும்பங்களிடமும், மலையத்திலும், தென்பகுதியிலும் தமது பிள்ளைகளைப் பாதுகாப்பாகக் கொண்டுபோய் மறைத்து வைத்திருக்கின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆனால், இந்த எண்ணிக்கை மிக மிகக் குறைவாகும்.

பள்ளிச் சிறுவர்கள் பாடசாலையில் வைத்தும் புலிகளால் அதிக எண்ணிக்கையில் பிடித்துச் செல்லப்பட்டபோதுதான் சென்ற ஆண்டு வாழைச்சேனையில் புலிகளுக்கெதிராக வெளிப்படையாகப் பொதுமக்கள் வீதிகளில் இறங்கித் தமது எதிர்ப்பைக் காட்டினார்கள். இதுதான் விடுதலைப் புலிகளுக்கெதிராகத் தமிழ் மக்கள் எதிர்ப்பைக் காண்பித்த முதலாவது சம்பவமாகும். விடுதலைப் புலிகளின் அதிகாரத்திற்கு விடப்பட்ட மிகப் பெரிய சவாலாகவும் இது அமைந்தது.

என்ன நடந்துகொண்டிருக்கின்றது என்பது பற்றிப் பேசவே தமிழ் ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் அஞ்சிக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த வருடம் ஒக்டோபர் ஐந்தாம் திகதி வாழைச்சேனை இந்துக் கல்லூரியிலிருந்து 23 இளம் பராய மாணவர்கள் புலிகளால் கடத்தப்பட்டார்கள். இதனைக் கண்டித்து தமிழ்ப் பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கொதித்தெழுந்து வீதி மறியல் செய்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சுமார் 300 மாணவர்கள் வாழைச்சேனை பிரதான வீதியில் அமர்ந்து காலை முழுவதும் போக்குவரத்தைத் தடைசெய்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதன் பின்னர் மாணவர்களையும் பெற்றோரையும் தமது இயக்கத்திற்கெதிரான ஆர்ப்பாட்டத்திற்குத் தூண்டினார்கள் என்பதனால் அந்தப் பாடசாலையின் அதிபரும் ஆசிரியர்களும் புலிகளால் தாக்கப்பட்டிருந்தார்கள்.

ஏற்கெனவே தாம் சிறார்களைப் பிடித்து இயக்கத்தில் சேர்த்து வந்ததையும் இப்போது அவர்கள் சிறார்களைப் பிடித்து வருவதையும் புலிகள் தமது வழமையான பாணியில் "மறுத்து" வருகின்றனர்.

அதேவேளை சம்பிரதாயத்துக்காகவும் சிறார்களைப் பிடிப்பது சம்பந்தமாக எழுந்துள்ள பழியை மூடி மறைப்பதற்காகவும் பெரும் விளம்பரங்களோடு எடுப்பான முறையில் "தமது இயக்கத்தில் இணைய வந்த சிறுவர்களை தாம் "புத்திமதி" கூறி விடுவித்ததாக விழா நடத்துகின்றனர். உண்மையில் இவர்களால் பிடித்துச் செல்லப்பட்ட சிறுவர்களில் போருக்கு லாயக்கற்ற ஒன்றிரண்டு சிறுவர்களையே இவர்கள் பெரும் விளம்பரங்களோடு விடுவிப்பதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர்.

ஆனால், எதிர்கால இளம் சமுதாயம் மற்றும் சிறார் கல்வி பற்றி யுனிசெப் நிறுவனமும் வேறு அக்கறையுள்ள பலரும் காட்டும் சிரத்தைக்கு எதிர்மாறாகத் தமிழ் ஊடகங்களும் தமிழ் ஊடகவியலாளர்களும் நடந்துகொள்கின்றார்கள். கடந்த சில வருடங்களுக்கு முன்னர் பலாத்காரமாகப் பிடிக்கப்பட்ட தமது பிள்ளைகளை விடுவிக்குமாறு கோரி, பெற்றோர் புலிகளின் முகாம்களின் முன்னால் தவம் கிடந்தார்கள். சில பெற்றோர் தமது பிள்ளைகளை விடுவிக்கப் புலிகள் மறுத்ததால் அங்கேயே தற்கொலை செய்துகொண்டார்கள். ஆனால், இவற்றையெல்லாம் கண்டுகொள்ளாதவர்களாகத் தமிழ் ஊடகவியலாளர்கள் சிலர் "தமிழ்த் தாய்மார் தமது சிறுவர்களுக்கு வீரத் திலகமிட்டு போருக்காக அனுப்பி வைத்துப் புறநானூறு படைக்கிறார்கள்" என்று எழுதித் தள்ளினார்கள்.

இவர்களது உணர்ச்சியூட்டும் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு பள்ளிப் படிப்புப் பாதியிலேயே பாழடிக்கப்பட்ட நிலையில் இன்று பலநூறு சிறுவர்கள் பெறுமதி மிக்க தமது வாழ்க்கையை இழந்து நடுத்தெருவிலே நிற்கிறார்கள். அறிவார்ந்த ரீதியில் வளர வேண்டிய ஒரு சமுதாயம் அழிக்கப்பட்டிருக்கிறது.

சிறுவர்களை இயக்கத்தில் சேர்த்துக்கொள்வதற்கு எதிராக எவ்வளவுதான் முயற்சி செய்தபோதிலும் புலிகளின் ஒத்துழைப்புக் கிடைக்காததால் தம்மால் சிறுவர் புனர்வாழ்வு சம்பந்தமாக எதுவும் செய்ய முடியவில்லை என யுனிசெப் அமைப்புக் கூறுகிறது. இடை விலக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் சேர்த்துப் படிப்பிப்பதற்கு யுனிசெப் அமைப்புப் படாத பாடு படுகிறது. ஆனால், புலிகளின் நடவடிக்கைகள் யுனிசெப் எடுக்கும் முயற்சிகளுக்குப் பங்கம் விளைவிப்பதாய் அமைந்திருக்கின்றது. இவற்றையெல்லாம் தமிழ் ஊடகங்களோ தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களோ சில தமிழ்ப் புத்திஜீவிகளோ பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. தமது சொந்தச் சமூகத்தின் ஒரு பிரிவினரால் எதிர்காலக் கல்விச் சமுதாயமொன்று அழிக்கப்பட்டு மொண்ணைச் சமுதாயமாக மாற்றப்படுவதை இவர்கள் மௌனமாக அங்கீகரிக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளின் செயற்பாட்டினால் எதிர்கால கல்விச் சமூகம் சீரழிக்கப்படுவதை இப்போது யுனிசெப் விமர்சிப்பது போன்றதை விட ஏற்கெனவே மிகக் கடுமையாக விமர்சித்துக் கண்டனக் குரலெழுப்பிய வேறு பல அமைப்புக்களும் ஆட்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

அந்த வகையில் ஈ.பி.டி.பி. கட்சி புலிகள் பலாத்காரமாக சிறுவர்களையும் மாணவர்களையும் ஆட்சேர்ப்புச் செய்தபோதெல்லாம் அதனைக் கண்டித்தும் பெற்றோருக்கு அறிவுறுத்தியும் வந்துள்ளது.

இரண்டாயிரமாம் ஆண்டில் புலிகள் கிழக்கில் வீட்டுக்கொரு போராளி என்று பாரிய ஆட்திரட்டலில் ஈடுபட்டபோது "புலிகளின் இந்த வித நடவடிக்கையால் தமிழ் சமூகத்தின் எதிர்காலமே இருள் சூழ்ந்ததாக ஆக்கப்பட்டிருக்கின்றது. மாணவர்கள் உயிராயுதமாக அல்ல, அறிவாயுதமாக மாற வேண்டும். நமது எதிர்காலத் தலைமுறையினரான மாணவர்கள் ஒரு கணம் சிந்திக்க வேண்டும். எமது சமூகத்தின் எஞ்சியுள்ள அழிக்க முடியாத தனிப் பெரும் மூலதனமும், சொத்தும் கல்வியேதான். ஆனால், தமது குறிக்கோள்களை அடைவதற்காக ஒரு சாராரின் தூண்டுதலினால் அர்த்தமற்ற கண்டனப் பேரணிகள், ஹர்த்தால்கள், ஆர்ப்பாட்டங்கள், வீதி மறியல்கள் என்பனவற்றுக்காகப் பாடசாலை மாணவர்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

போர் முரசம் கொட்டியவர்கள் போரிட்ட தரப்புடன் புன்முறுவல் பூத்துப் பேச்சுவார்த்தை மேசையில் கைகுலுக்கிக்கொள்கின்றனர். மாணவச் செல்வங்களாகிய நீங்கள் மட்டும் பகையுணர்வு ஊட்டப்பட்டுப் பலிக்களத்திற்கு இழுக்கப்படுகின்றீர்கள்" இவ்வாறு ஈ.பி.டி.பி அவ்வப்போது பல துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளது.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் மற்றும் புலிகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் பிரமுகர்களினதும் மற்றும் கண்ணை மூடிக்கொண்டு புலிகள் செய்வது எல்லாம் சரியென எழுதும் தமிழ் ஊடகவியலாளர்களினதும் பிள்ளைகள் கொழும்பிலும் வெளிநாடுகளிலும் மற்றும் சிறந்த பாடசாலைகளில் கல்வி கற்கிறார்கள்.

ஆனால், அன்றாடம் காய்ச்சிகளான பரம ஏழைகளின் பிள்ளைகள் வெறும் உயிராயுதமாகப் பாவிக்கப்படுவதற்குத் தேடித் தேடிப் பிடிக்கப்படுகிறார்கள்.

இப்பொழுது மட்டக்களப்பு மாவட்டத்தைக் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாகப் பிரகடனப்படுத்துமாறு போராட்டம் நடத்தப்படுகிறது. ஏற்கெனவே புலிகளின் இளம் பராயப் போராளிகள் ஆள் பிடிப்பினால் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்த வேண்டியதாகிவிட்டது. அதனால் பல பின்தங்கிய பாடசாலைகளையும் இழுத்து மூட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

ஒரு புறம் ஏழை எளிய மாணவச் சிறார்களின் கல்வி கற்கும் வாய்ப்பைத் தடுத்து நிறுத்தி அவர்களை யுத்தப் பயிற்சிக்குப் பிடித்துப் போதல். மறுபுறம் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாகப் பிரகடனப்படுத்தி அந்த மாவட்டத்தின் கல்வியை மேம்படுத்துமாறு கூக்குரல். இது வேடிக்கையாகத்தான் இருக்கின்றது.

"தாம் இளம் பராயத்தினரைக் கைதுசெய்யவில்லை. அவ்வாறான பிள்ளைகளின் விவரங்களைத் தருமாறு" புலிகளின் வழமையான பாணியில் கௌசல்யன் கூறிய போது, ஐ.நா. சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான தலைமைப் பொறுப்பாளர் டட்சைபான் சொன்னார். "அந்த விவரங்கள் புலிகளிடம் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டது. புலிகள் இனி சிறுவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்பதே எஞ்சியிருக்கின்றது" எனக் கூறினார்.

இப்பொழுது பா.உ. ஆக இருக்கும் ஜெயானந்த மூர்த்தி கூட ஒரு ஆசிரியராகவும் முன்னணிப் பத்திரிகைகள் இரண்டினதும் செய்தியாளராகவும் இருந்தவர். அவர் கற்பித்த பாடசாலையிலிருந்துதான் ஏராளமான மாணவர்கள் பலவந்தமாகப் பிடித்துச் செல்லப்பட்டிருந்தார்கள். ஆனால், இது பற்றி ஒரு வரிச் செய்தி கூட அவரால் எழுத முடியவில்லை. ஆனால், அவரே இப்பொழுது மட்டு. மாவட்டத்தை கல்வியில் பின்தங்கிய மாவட்டமாகப் பிரகடனப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கிறார்.

கடந்த 20 ஆண்டு காலமாக நடைபெற்ற போரின் விளைவாக 17 ஆயிரத்து அறுநூறுக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் இவர்கள் அனைவரும் மாணவப் பருவத்திலே இயக்கத்தில் சேர்ந்ததாகவும் புலிகள் கூறுகின்றனர்.

"புலிகள் இயக்கத்திலே இப்போதிருக்கின்ற தலைவர்களும் பொறுப்பாளர்களும் 18 வயதிற்கு முன்னராகவே இயக்கத்தில் சேர்ந்துகொண்டவர்களாதலால் சிறுவர்களையும் மாணவர்களையும் துரத்திப் பிடிப்பது பற்றி அவர்கள் பெரிதாக அலட்டிக்கொள்ளப் போவதில்லை" எனத் தமது சிறார்களைப் புலிகளிடம் பறிகொடுத்த பெற்றோர் தெரிவிக்கிறார்கள்.

**- ஹுஸைன் பின் ஹமீத்**

ஒட்டுமொத்தமாக நோக்கினால் கல்வியறிவற்ற ஓர் இளம் சமுதாயம் வடக்கு, கிழக்கில் இப்போது உருவாக்கப்பட்டிருக்கிறது. அறிவும் சிந்தனைத் திறனும் இளம் சிறார்களிடத்தில் ஊட்டி வளர்க்கப்படாததால் தமிழ்ச் சமூகத்தின் வளமும் மூலதனமுமான கல்வி ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்டிருக்கின்றது.

போரின் விளைவாக நவீன அறிவியலுக்கு முகங்கொடுக்க முடியாதவாறு ஒரு அறியாமைச் சமூகமும், பல ஆயிரணக்கணக்கான விதவைகள், பல்லாயிரக் கணக்கான அநாதைகள், பல்லாயிரக்கணக் கான அங்கவீனர்கள், இன்னும் மனவடுவுக்குள்ளாகி நம்பிக்கையிழந்து மீள முடியாமல் துயருறும் பல்லாயிரம் பேர் என இக் கோர யுத்தம் உருவாக்கி விட்டிருக்கிறது. போரின் பிரதமகர்களும் அதற்கு உரமூட்டுவோரும் சிந்திப்பார்களாக!

# பாப்பா முரசு



> சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
> தன்னையொரு சக்தியென்று தேரும் - அகம்
> சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
> தர்மதமும் ஆணவமும் தீரும்.
>
> -சுப்பிரமணிய பாரதியார்

## நம்பிக்கை வைத்த துறவி

அமைதியான ஓர் இடத்தில் ஆசிரமம் அமைத்து, அதில் ஒரு துறவி வசித்து வந்தார். அவரைக் காண வரும் மக்கள் அவருக்குப் பொன், பொருள், துணி முதலியவற்றைக் காணிக்கையாக அளித்து வந்தனர். அவற்றையெல்லாம் விற்று அந்தத் துறவி பெரிய பணக்காரர் ஆனார். அவரிடம் செல்வம் சேர்ந்தவுடன் அவர் யாரையும் நம்புவது இல்லை. அவர் தன்னிடமுள்ள பணத்தையெல்லாம் ஒரு மூட்டையாகக் கட்டி அதை எப்போதும் தன் பார்வையிலேயே வைத்திருந்தார்.

இவ்வாறு இருக்கையில், ஒரு மோசடிக்காரன் துறவியின் நடவடிக்கைகளை பல நாட்களாகக் கூர்ந்து கவனித்து வந்தான். அவன்

**பாப்பா முரசு சிறுகதை**

துறவியிடமுள்ள பணத்தை அபகரிக்க வேண்டுமென்று எண்ணினான். அதனால் அவன் ஓர் இளம் துறவியைப் போல் வேடமணிந்து துறவியிடம் சென்றான். அவன் துறவியைப் பார்த்து,

"பகவானே! எனக்கு ஞானோபதேசம் புரிந்தருள்வீராக. அப்போதுதான் எனக்கு முத்தி கிடைக்கும். உலகியல் இன்பங்களின் மீது ஆசை வைக்கும் இந்த வாழ்க்கை, என்ன வாழ்க்கை!'' என்று கூறினான். மேலும் அவன் தன் மனதிற்குள், 'சரியான சந்தர்ப்பம்



வரட்டும். அதுவரை காத்திருந்து துறவியின் செல்வத்தைத் திருடிவிட வேண்டும்' என்று எண்ணினான்.

துறவியோ அவன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியுற்று அவனுக்கு அனைத்துச் சாத்திரங்களையும் கற்றுக்கொடுத்தார்.

புதிய சீடனும் தனது குருவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்து, அவரது நம்பிக்கையைப் பெற்றான்.

ஒருநாள், அருகிலுள்ள கிராமத்திலிருந்து வந்த ஒருவன் துறவியைத் தனது வீட்டில் சடங்கு ஒன்றினைச் செய்து வைக்கும்படி வேண்டினான். அதனால் துறவி தனது சீடனை அழைத்துக்கொண்டு புறப்பட்டார். அது கோடை காலம் என்பதால், அவர்கள் காட்டின் வழியே நடந்து சென்றபொழுது மிகுந்த களைப்புற்றனர். சிறிது நேரத்தில் அவர்கள் ஒரு ஆற்றுப் படுகைக்கு வந்தனர். அங்கு ஓடிக் கொண்டிருந்த ஆற்று நீர் மிக்க குளிர்ச்சியாகவும், 'வா, வா'வென்று அழைப்பது போன்றும் இருந்தது. அதனால் துறவி அதில் நீராடிப் புத்துணர்ச்சி பெற விரும்பினார்.

அவர் ஒரு புதர் மறைவில் தனது ஆடைகளைக் களைந்து, அதனுள் தனது பணப் பையை வைத்து ஒரு மூடையாகக் கட்டி தனது சீடனிடம் "இதோ பார்! நான் குளிக்கும் வரை இந்த மூடையை பத்திரமாகப் பார்த்துக்கொள்!'' என்று கூறி அவனிடம் மூடையைக் கொடுத்தார்.

பிறகு ஆற்றில் இறங்கி ஆனந்தமாகக் குளித்தார். இதற்கிடையே அந்தப் போலிச் சீடன் புன்னகை பூத்தபடி எண்ணினான், 'இந்தச் சந்தப்பத்திற்காகத்தானே நான் இத்தனை நாள் காத்திருந்தேன்!' என்று. அவன் சுற்றுமுற்றும் பார்த்தான், மூட்டையை எடுத்துக்கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றான். குளித்து முடித்த துறவி கரைக்கு வந்து "சீடனே! உன்னிடம் கொடுத்த மூட்டையைக் கொடு!'' என்று குரல் கொடுத்தார்.

எந்தவொரு பதிலும் வராததைக் கண்டு திகைத்த அவர், அங்குமிங்கும் பார்த்தார். ஆனால் சீடனைக் காணவில்லை.

"அந்தோ! அதீதமான நம்பிக்கை வைத்த காரணத்தினாலன்றோ, சூழ்ச்சியினால் நான் எனது செல்வத்தை இழந்தேன். இந்தக் கயவன் கூறிய எல்லாவற்றையும் உண்மையென்று நான் நம்பிவிட்டேனே! இவன் எனது செல்வத்தைத் திருட வேண்டுமென்று திட்டமிட்டே என்னிடம் சேர்ந்துள்ளான்!'' என்று புலம்பினார்.

ஆம் பிள்ளைகளே! சுயநலமான செயற்பாடு சிலவேளைகளில் எம்மை ஆபத்தில் சிக்க வைத்துவிடும். அதனால் யாவருக்கும் பயன் மிக்க செயலைச் செய்யவே நாம் முன்வர வேண்டும். மற்றவர்களின் பொருளையோ, பொன்னையோ அபகரித்து வாழ்வை அசிங்கமாக்கிக்கொள்ளக் கூடாது. எமது சொந்த முயற்சியால் நாம் வாழ்வில் வெற்றியடையும்பொழுது யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. நாம் என்றும் புத்திசாலிகளாகவே செயற்படக் கற்றுக்கொள்வோம்.

புரியுதா குட்டீஸ்.

## சிறுவர் பத்திரிகை



சிறுவருக் கான பத்திரி
கைகள்
நிறைய வேண்டும்.
சித்திரம் எல்லாப் பக்கங்
களிலும்
திகழ வேண்டும்.
அருமை யான கதையும்
பாட்டும்
இருக்க வேண்டும்.
அறிவைப் புகட்டும்
கட்டுரை பலவும்
அமைய வேண்டும்.

தெய்வ பக்தி, தேச
பக்தி
ஊட்ட வேண்டும்.
சிரிக்க வைக்கும்
செய்தி கூட
இருக்க வேண்டும்.

ஐயம் தீர்க்கக் கேள்வியும்
பதிலும்
அவசியம் வேண்டும்.
அறிஞர் வாழ்வை அழகாய்
எடுத்துக்
கூற வேண்டும்.

புத்தம் புதிய கலைகள் எல்லாம்
விளக்க வேண்டும்.
புதிர்கள் போட்டு நமது அறிவை
வளர்க்க வேண்டும்.
நித்தம் நமது பண்பை மேலும்
உயர்த்த வேண்டும்.
நிலைத்த புகழைப் பெறவே
வழிகள்
காட்ட வேண்டும்.

உற்ற நண்பர் போலே அவையும்
உதவ வேண்டும்.
உதவி, உதவி நமது வாழ்வை
உயர்த்த வேண்டும்.
பெற்றோர் அவற்றைக் காசு
கொடுத்து
வாங்க வேண்டும்.
பிள்ளைகளுக்குப் பிரியத்
துடனே
வழங்க வேண்டும்.


## அதிசய உலகம்

### வான்கோழி




முதலில் காட்டுப் பறவையாக இருந்த வான்கோழியின் பூர்வீகம் அமெரிக்கக் கண்டமே. ஆண் வான்கோழி 122 செ.மீ. உயரமும் 9 கிலோ வரை எடையும் இருக்கும். பெட்டையின் எடை இதில் பாதியே இருக்கும். பெட்டை வான்கோழி 10 முட்டைகள் வரை இட்டு குஞ்சுகள் ஆனதும் அதுவே அவற்றைப் பராமரிக்கும். வான்கோழிகளை வீட்டுப் பறவையாக மாற்றியது மெக்ஸிகோ நாடுதான். அதிக உயரத்தில் வானில் பறக்க முடியாத இக் கோழி, வான்கோழி என்று எப்படி பெயர் பெற்றது என்பது தெரியவில்லை!

### ஜகுவார்



அமெரிக்கக் காடுகளில் வாழும் ஒரு புலி. இந்தப் புலியை விஞ்ஞானிகள் சமீபத்தில்தான் கண்டுபிடித்தனர். இது புலி போன்று தோற்றமளித்தாலும் புலி இல்லை, பூனை. இதன் எடை 150 கிலோ. பூனைக்கு இருக்கும் அத்தனை குணங்களும் இந்தப் புலிக்கு இருக்கிறது. எனவே உருவத்தில் பெரிதாக இருந்தாலும், இந்த ஜகுவாரைப் பார்த்து நடுங்குவார் யாருமில்லை!

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 24.07.2004

வர்ணம் தீட்டும் போட்டி இல: 553
தினமுரசு வாரமலர்
த. பெ. இல. 1772.
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 552

**பரிசுக்குரியவர்:**
**ஷாலினி ராஜன்**
**515/76, பூம்புகார் வீதி, மட்டக்களப்பு.**

### பாராட்டுக்குரியவர்கள்

| | |
|---|---|
| அ.அருட்சங்கர் 7ஆம் குறுக்கு, இருதயபுரம், மட்டக்களப்பு. | மு.அ.றோஸா மஸானா, 71/9, ஆதம் போடிஹாஜியார் லேன், காத்தான்குடி - 05. |
| ஜெ.மயூரன், 24/11, குணவர்த்தன மாவத்த, பதுளை. | எம்.எச்.அமானி, 2ஆம் வகுப்பு, கஹட்டபிடியா முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை. |
| ச.மேகலா, மதீனா வித்தியாலயம், பூந்தோட்டம், வவுனியா. | தர்ஷான் இராஜேந்திரா, தரம் 02, பது/பசறை தமிழ் தேசியப் பாடசாலை, பசறை. |
| அருட்செல்வம் செந்தூரன், கலைவாணி பாலர் பாடசாலை, 246, அன்புவழிபுரம், திருகோணமலை. | க.பா.கீர்த்தனா, அமிர்தாம்பிகை வித்தியாலயம், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. |
| பி.பூவிழி, 232, மூர் வீதி, மன்னார். | ந.தனுஜா, தரம் - 7, சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, மன்னார். |

## உங்கள் பொது அறிவு எப்படி?

1. சாய்ந்த கோபுரம் எங்குள்ளது?
–இத்தாலியில் பைசாவில் உள்ளது. 180 அடி உயரமுடையது. 8 மாடிகளைக் கொண்டது.

2. போதலம் எங்குள்ளது?
–தீபெத்தில் தலாய்லாமாவின் இருப்பிடம்.

3. மாமல்லவபுரம் எங்குள்ளது?
–காஞ்சிப்பல்லவரால் அமைக்கப்பட்ட சிற்பக் குகைகள். தென்னிந்தியாவில் உள்ளது.

4. அஜந்தா குகை எங்குள்ளது?
–பம்பாயில் ஔரங்கப்பாத்துங்குக்கு அருகில். உள்ளே குகை கோவில்கள்.

5. எல்லோரா எங்குள்ளது?
–பம்பாயில் கைலாயநாதர் கோவில் உட்பட 34 சிற்பக் கோவில்கள் அடங்கியது.

6. கிலே முதலிய பிரமிட்டுக்கள் எங்குள்ளது?
–எகிப்தில் நைல் நதிக்கருகில். இறந்த அரசர்களின் உடல்கள் பாதுகாக்கப்பட்டுள்ள இடம்.

7. டின்னி நகரம் எங்குள்ளது?
வட அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சலுக்கு அருகில் உள்ள அனாஹூம் என்னும் இடத்தில்.

8. இராமரணை எங்குள்ளது?
–தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையில் உள்ள பாறைத்திட்டு.

9. எலிபென்மாக் குகைகள் எங்குள்ளன?
–பம்பாயில் 15 மைல் தொலைவில்.

10. ஸ்பிரிங்ஸ் எங்கேயுள்ளது?
–வட எகிப்தில் கிஸே என்னும் இடத்தில், படுத்து இருக்கும் பாவனையில். 189 அடி நீளமுள்ளது.






8 வாரக் கரு கை, கால்களை அசைக்க முயல்கிறது. கரங்களை அசைக்க முடிகின்றது.



24 வாரங்களின் பின்னர் கரு முழுமை பெறுகின்றது. பிறப்பின் பின்னர் கண் சிமிட்டுவதற்கு குழந்தை இதன் போதே பழகுகின்றது.

கருக்கலைப்பு பற்றிய உங்களது கருத்து என்ன? வேண்டாம் அது இப்போதைக்கு அவசியமல்ல. உங்களது கருத்து அவசியமில்லை. 12 வாரங்களைக் கொண்ட கருவொன்றை அழிக்கும்போது – கலைக்கும் போது அதில் உயிர் இருக்காது எனக் கூறுவோரும் உண்டு. இதன்படி கருக்கலைப்பை நியாயப்படுத்துபவர்கள் உண்டு. ஆனால், உண்மை நிலையை நீங்கள் அறிந்து கொண்டால் கருக்கலைப்புக்குத் துணை போக மாட்டீர்கள். உங்கள் காதலிக்கோ அல்லது மனைவிக்கோ இப்படியொரு யோசனையை முன்வைக்க மாட்டீர்கள். (இங்கே தரப்பட்டுள்ள புகைப்படங்களை அவதானியுங்கள்) பிரித்தானியாவில் லண்டன் நகரில் உள்ள கிரியேட் ஹெல்த் கிளினிக் நிறுவனத்தின் பேராசிரியர் ஸ்டுவர்ட் கெம்பல் உட்பட்ட குழுவினர் ஓர் ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். இதன்படி 12 வாரங்கள் கொண்ட கரு சாதாரண செயற்பாடுகளைக் கொண்டதாக உள்ளதாகத் தெரிய வந்துள்ளது. நவீன மயமாக்கப்பட்ட அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனரின் உதவியுடன் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

ஸ்டுவர்ட் கெம்பல் முன்வைத்துள்ள 'வொச் மீ க்ரோவ்' எனும் நூலில் கர்ப்பத்தில் ஒரு குழந்தை எவ்வாறு வளருகின்றது என்பதைக் காட்டும் தெளிவான புகைப்படங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. கர்ப்பப் பையில் உள்ள கரு தொடர்பில் இதுவரை பிடிக்கப்பட்டுள்ள புகைப்படங்களிலேயே இப் புகைப்படங்கள் சிறந்த ரகத்தைக் கொண்டவையாகும்.

# கருக்கலைப்பு செய்வோர் கவனத்திற்கு.....



10 வாரங்களில் கை, கால்களை அசைக்க முடிகின்றது.



எதையேனும் பற்றிக்கொள்ளக் கூடிய திறன் குழந்தைக்குக் கிட்டுகிறது. கை, கால்கள், விரல்கள் போன்றே தாயையும் குழந்தையையும் தொடர்புபடுத்துகின்ற தொப்புள் கொடியையும் கூட பற்றிக்கொள்ள குழந்தை பழகுகின்றது.

ஒரு குழந்தை தாயின் வயிற்றினுள் இருக்கும் போது எவ்வாறு சிரிக்கும்? எவ்வாறு அழும்? கை, கால்களை அசைப்பது எவ்வாறு? போன்ற செயற்பாடுகள் அனைத்துமே இந்தப் புகைப்படங்களில் காணக் கூடியதாகவுள்ளன.

இதுவரையில், கர்ப்பப் பையினுள் ஒரு குழந்தை எவ்வாறு வளருகின்றது என மருத்துவர்கள் குழந்தைகளின் செயற்பாடுகளைக் கொண்டு முக்கியமான பல தகவல்களை அறிந்து வைத்திருப்பினும், புகைப்படங்களுடன் இவ்விடயம் தொடர்பாகச் சுட்டிக்காட்டுகின்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவேயாகும்.

பேராசிரியர் கெம்பல் இப் புகைப்படங்களைப் படிப்படியாகவே எடுத்துள்ளார். இதனால் குழந்தைகளின் செயற்பாடுகள் குறித்து அறிந்துகொள்வது இலகுவாகின்றது.

''குழந்தைகளின் செயற்பாடுகள் குறித்து அறிந்துகொள்ளக் கூடிய சிறந்த முறை இதுவாகும். இது ஒரு புதிய விஞ்ஞானமுமாகும்'' எனப் பேராசிரியர் கெம்பல் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

இங்கு காணப்படுகின்ற ஒரு விசேட அம்சம் எதுவென்றால், ஒரு குழந்தை பிறந்து 6 வாரங்கள் செல்லும் வரை அக் குழந்தை சிரிக்காது என்று ஒரு நம்பிக்கை இருந்து வந்துள்ளது. ஆனால், குழந்தைகள் தாயின் வயிற்றில் இருக்கும்போதே சிரிக்கின்றன என்ற விடயம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகும். இங்கு காணப்படும்போதிலும் மேற்படி புகைப்படங்கள் ஊடகங்களில் வெளிவந்ததன் பின்னர் இங்கிலாந்து முழுவதிலும் ஒருவித பதற்ற நிலை தோன்றியுள்ளது.

அதாவது பிரித்தானியாவில் நடைமுறையில் உள்ள சட்டத்தின் பிரகாரம் ஒரு பெண் கர்ப்பம் தரித்து 24 வாரங்கள் செல்லும் வரை அவள் கருக்கலைப்புக்கு உட்படுத்தப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் கர்ப்பத்தினுள் இருக்கின்ற குழந்தையானது இந்தளவுக்குச் செயற்பாடுகளைக் கொண்டது என்பதை மேற்படி சட்டத்தைத் தயாரித்தவர்கள் கூட இப் புகைப்படங்களைக் கொண்டுதான் அறிந்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.



22 வாரங்களில் கை, கால் விரல்களை அசைக்க முடிகின்றது. தனது மூக்கைப் பிடிக்கவும் முடிகின்றது.



புதிதாகப் பிறக்கும் குழந்தையொன்று 4–6 வாரங்கள் செல்லும் வரை சிரிக்காவிடினும் கர்ப்பத்தினுள் அது சிரிக்கின்றது. கர்ப்பப் பை [illegible] வசதியான இடமாவதினாலும் பாரிய வெளிச்சங்கள் மற்றும் பாரிய சத்தங்கள் உள் நுழையாததினாலும் இவ்வாறு சிரிப்பதாக நம்பப்படுகின்றது.

''பிறப்பின் பின்னர் ஒரு குழந்தையானது பல்வேறு செயற்பாடுகளை வெளிக்காட்டும் என்பதை நாம் கண்டறிந்துள்ளோம். எனினும் இவ்வாறான செயற்பாடுகளை அக் குழந்தை தாயின் வயிற்றுக்குள்ளேயே மேற்கொள்ளும் என்பதை எவருமே நம்பவில்லை. இப்போது அதனை அறிந்துகொள்ள முடியும்'' என்கிறார் பேராசிரியர் கெம்பல்.

12 வாரங்களுள் குழந்தை நன்றாகக் கால்களைச் செயற்படுத்தும் விதமும், 14 முதல் 15 வாரங்களுள் தனது விரல்களை உறிஞ்சும் விதமும் 18 வாரங்களில் கண்களைத் திறக்கும் விதமும் 22ஆவது வாரத்தில் சிரிக்கும் விதமும் இப் புகைப்படங்களின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

''உண்மை என்று கூறுவது உண்மைக்கே ஆகும். எனினும் இவ்வாறான உண்மைகளை அறிந்தும் பிரித்தானியப் பெண்கள் தங்களது மனதுகளை மாற்றிக் கொள்வார்கள் என எங்களால் கூற இயலாது. கருக்கலைப்பு போன்ற தீர்மானங்களை இப் பெண்கள் மிகவும் சிந்தித்துப் பார்த்தே மேற்கொள்கின்றனர்'' எனப் பிரித்தானிய சமூக சேவை அமைப்பொன்றின் பேச்சாளர் ஒருவர் கூறுகின்றார்.

''கருக்கலைப்பினை மேற்கொள்ளக் கூடிய காலம் இதுதான் எனக் கூற எவராலும் இயலாது. எனினும் 22 வாரங்களில் வயிற்றிலுள்ள குழந்தை சிரிக்கின்றது என்றால் அதனைக் கொலை செய்யும்படி கூற எவரால் இயலும்?'' என பேராசிரியர் கெம்பல் வினவுகின்றார்.

இதற்கான பதில் பலரிடத்திலிருந்து அவசியப்படுகின்றது. என்றாலும் அதனை யாரால் வழங்க இயலும்? நீங்கள் ஏதேனுமொரு காரணத்துக்காகக் கருக்கலைப்புச் செய்துகொண்டதுண்டா? உங்களது காதலியை, மனைவியை அந்தரங்க மனைவியை, கருக்கலைப்பு செய்யத் தூண்டியதுண்டா? நீங்கள் அழ வேண்டும் என நான் கூறவில்லை. இருப்பினும் உங்களுக்கு அழுகை வருகிறது என்றால், ஓரளவுக்கேனும் மனிதத் தன்மை உங்கள் இதயத்தில் உண்டென்பதை நீங்களே உணர்வீர்கள்.



பிறப்பின் பின்னால் குழந்தை மேற்கொள்ளும் பல செயற்பாடுகளை அது தாயின் வயிற்றுக்குள்ளேயே மேற்கொள்கின்றது.



11 வாரங்களில் குழந்தை தனது பெருவிரலை வாயில் வைத்துக் கொள்ளவும் அதேநேரம் தனது பாதத்தை உறிஞ்சவும் முற்படுகின்றது.

கர்ப்பப் பையில் ஒரு குழந்தை வளரும்போது இடம்பெறும் செயற்பாடுகள் எது? யாது? என்பது தொடர்பிலான புகைப்படங்கள் அதே வகையில் வெளியாகும் சமயம் ஓர் உயிர் பிறப்பதானது ஆணின் விந்தும் பெண்ணின் முட்டையும் ஒன்றிணைவதற்கு முன்பாகவே இடம்பெற்றுவிடக் கூடும் என்னொரு ஆய்வு தொடர்பான தகவல்களை டிஸ்கவர் சஞ்சிகை வெளியிட்டிருந்தது.

கொலராடோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் [illegible] என்பவர் பெண்களது கரு முட்டைகள் தொடர்பாக மேற்கொண்ட பல ஆய்வுகளின் பிரதிபலனாக மேற்படி விடயங்களை வெளியாக்கியுள்ளார்.

இதன்போது என்ன நடக்கிறது என்றால் விந்தைக் காண்பதற்கு முன்பாக உயிர் ஒன்று உற்பத்தியாகின்றது என்பதல்ல. விந்தினால் வழங்கப்படுவதைக் காட்டிலும் கூடிய உயிர் பெண் முட்டையால் வழங்கப்படுவதாகும்.

இதனால் அநேகமான பெண்களுக்குக் குழந்தைகள் இல்லை எனக் கூறப்பட்ட போதிலும் அவர்களது முட்டைகளில் சில குறைகள் [illegible] கொண்டிருக்கின்றன எனவும் தெரியவந்துள்ளது. இதனால் குழந்தையொன்றைச் செயற்கையான முறையில் பெற்றுக்கொள்ளும் போது மிகவும் கவனமாகவும் அல்லது சிறந்த ஆய்வினை மேற்கொள்வதன் மூலமும் விசேட பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இப்போது நம்பப்படுகின்றது.

குழந்தைகள் இல்லாத பெண்களுக்கு முக்கியமானதும் அவர்களுக்கான மகிழ்ச்சியை வளர்ப்பதுமான விதத்தில் மேலும் ஒரு ஆய்வு அறிக்கை கடந்த வாரம் வெளியாகியுள்ளது. அதாவது, பெண்களது முட்டைகளை இணைப்பதன் மூலம் கர்ப்பம் தரிக்க வைக்க முடியும் என்று வெற்றிகரமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் பர்சலில் உள்ள கெத்தலிக் டீ லோவியன் எனும் பல்கலைக்கழகத்தின் மருத்துவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின்போது இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் இயற்கையான முறையில் கருத்தரித்துள்ள ஒரு பெண்மணி முட்டைகளை இணைப்புச் செய்ததன் மூலம் கருத்தரித்த முதலாவது பெண் என மருத்துவத்துறையில் பெயர் பதித்துள்ளார்.

இக் கண்டுபிடிப்பின் காரணமாகக் கர்ப்பப் பையில் புற்றுநோய்களைக் கொண்டுள்ள பெண்கள்தான் மிகவும் மகிழ்ச்சி கொண்டுள்ளனர். முட்டைகளின் இணைப்பின் மூலம் கருத்தரிப்புச் செய்யப்பட்ட பெண் நல்ல சரீர ஆரோக்கியத்துடன் இருந்து வருவதாகவும் தெரியவருகிறது.

இது உண்மையிலேயே மருத்துவத்துறையில் ஒரு மைல் கல்லாகும் என்றே கருதப்படுகின்றது. அதே நேரம் இவ்வித ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்கள் சாதாரண பாவனையாளர்களுக்கு உபயோகப்படுத்தக் கூடாது என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

புற்றுநோய்க்கு உட்பட்டிருக்கும் அநேகமான பெண்களுக்கு இதன் மூலம் பாரிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள இயலும் எனவும் மருத்துவர்கள் கூறிவருகின்றனர்.

ஓரிடத்தில் கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன. இன்னொரு இடத்தில் குழந்தைகள் இல்லாமல் பலர் வேதனையோடு வாழ்கின்றனர். இதுதான் உலக நியதி. ஒரு பக்கத்தில் ஒன்று நடக்க மறு பக்கத்தில் அதற்கு நேர் மாற்றமான ஒரு செயல் இடம்பெறுகிறது. இதுதான் உலகம். இதனைப் புரிந்துகொள்வது யார்?

இப்னு அஸ்மத்



குழந்தை கை விரல்களை ஒன்றிணைப்பதைரே இங்கே காண்கின்றீர்கள். இக் கட்டமானது நன்றாக மூளை வளர்ச்சி இடம் பெறும் காலகட்டமாகும்.



கர்ப்பப் பையில் 12 வாரங்கள் கழியும் போது கொட்டாவி விடுகிறது. இப் பழக்கத்தின் காரணமாகத்தான் வெளி உலகுக்கு வந்ததன் பின்னர் குழந்தை மூச்சு எடுப்பதாகக் கூறப்படுகின்றது.

# சினேகாவுக்கு கமலின் இச் இச்!

"வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்." படத்தில் கமல்ஹாசனின் டிரேட் மார்க் முத்தக் காட்சிகள் நிறையவே உள்ளதாம். கமல் படம் என்றால் இதழோடு இதழ் சேரும் இதமான முத்தக் காட்சிகளுக்குப் பஞ்சமே இருக்காது. ஆனால், 'வசூல்ராஜா' படத்தில் தனக்கு கமலோடு முத்தக் காட்சிகள் எதுவும் இல்லை என்று சினேகா கூறிவந்தார்.

ஆனால், உண்மையில் படத்தில் பல முத்தக் காட்சிகள் உள்ளனவாம். அதுவும் சினேகாவுக்கு கமல் சுடச் சுடப் பல முத்தங்கள் கொடுத்துள்ளாராம். இப்போதே வெளியிட்டால் பரபரப்பாகிவிடும் என்பதால் கடைசி நேரத்தில் முத்தக் காட்சிகள் உள்ள ஸ்டில்களை ரிலீஸ் செய்ய உள்ளார்களாம்.

அதுதானே! முத்தத்தை வசூலிக்காமல் விட்டுவிடுவாரா இந்த முத்த ராஜா?



காதல் திருடா
குணால் - ஷெரின்

# ஐயோ பாவம் ஜோதிகா!

துடுக்கு நடிப்பழகி ஜோதிகா படுத்த படுக்கையாய் கிடக்கிறார். காரணம் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் ஜோவுக்குப் போட்ட கிடுக்குப்பிடி.

சிம்ரனுக்கு சரிநிகர் போட்டியாக இருந்த ஜோதிகா, சிம்ரனின் திருமணத்துக்குப் பிறகு அவரது சீற்றைப் பிடிப்பார் என்று எதிர்பார்த்தது கோலிவுட். ஆனால், கடைசியில் ஜோதிகாவின் சீற்றை இப்போது பிடிப்பது யார் என்று நிலைவரம் கலவரமாகிவிட்டது.

ஜோதிகா இப்போது நடிக்கிற ஒரே ஒரு படம் 'மன்மதன்' மட்டுமே. கைவசம் அம்மணிக்கு வேறு படங்கள் எதுவுமில்லை. ஜோதிகா தொடர்ந்து செய்து வந்த கால்ஷீட் குளறுபடிகளால், அவர் புதிய படங்களில் நடிப்பதற்கு தயாரிப்பாளர் சங்கம் தடை விதித்துவிட்டது. விளைவு - தேடி வந்த வாய்ப்புகளும் விலகி ஓடிவிட்டன.

உடைந்துபோன ஜோதிகா மும்பை வீட்டிலேயே அடைந்து கிடக்க...வந்தது டைபாய்: காய்ச்சல். ஆனாலும் ஜோ தனக்கு விதிக்கப்பட்ட தடையைத் தாண்டுவதற்கு, தனுஷை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார். காரணம் 'சுள்ளானி'டம் இருக்கிறது ஒரு சூட்சுமம்.

ஜோதிகாவைப் போலவே தனுஷ"ம் தொடர்ச்சியாகக் கால்ஷீட் குளறுபடிப் புகாருக்கு ஆளானவர். ஆனால் தனுஷின் கால்ஷீட்டை வாங்கி வைத்துள்ள கே.முரளிதரன் தயாரிப்பாளர் சங்கத் தலைவர். ஆகவே தனுஷ் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்று துருதுருவெனக் கவனித்துவருகிறார் ஜோ. மன்னிப்பு என்றால் இருவருக்கும் நலம்; தண்டனை என்றால் இருவருக்கும் சமம். இப்படிப் கணக்கு போட்டுக் காத்திருக்கிறார் ஜோதிகா.

ஒரு கண்ணுக்கு ஐஸ்கிறீமும், மறு கண்ணுக்குத் தயிரும் அப்புவார்களா என்ன? பார்ப்போம்!

# பாலா திருமணம்

இயக்குநர் பாலாவுக்கும் அவரது அக்காள் மகள் மலருக்கும் மதுரையில் திருமணம் நடந்தது.

மதுரை தல்லாகுளம் பி.டி.ஆர். கல்யாண மண்டபத்தில் இந்தத் திருமணம் நடந்தது.

இதில் காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன், முன்னாள் சபாநாயகர் பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன், மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் சேதுராமன், நடிகர்கள் விக்ரம், சூர்யா, பார்த்திபன், பிரகாஷ்ராஜ், சிபிராஜ், கருணாஸ், ராமராஜன், விஜயகுமார், அலெக்ஸ், நடிகைகள் சங்கீதா, சுஹாசினி, இயக்குநர்கள் மணிரத்னம், ஷங்கர், பாரதிராஜா, சேரன், ஆர்.கே.செல்வமணி, கங்கை அமரன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் ஏராளமான பாலா இரசிகர்களும் திருமணத்திற்கு வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

# விஜய் படப்பிடிப்பில் பொலிஸ் தடியடி

நடிகர் விஜய்யின் 'மதுர' படப்பிடிப்பில் இரசிகர்கள் அதிகளவில் கூடியதால் அவர்களை பொலிஸார் தடியடி நடத்திக் கலைத்தனர்.

வெற்றிப் படம் 'கில்லி'யை அடுத்து விஜய் நடிக்கும் படம் 'மதுர'. இதை இயக்குநர் மாதேஷ் இயக்கி வருகிறார். 'மதுர' படத்தின் படப்பிடிப்பு மதுரையில் நடந்து வருகிறது.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் மேலைக் கோபுர வாயிலில் படப்பிடிப்பு நடந்தது. விஜய் படப்பிடிப்பைப் பார்க்க விஜய் இரசிகர்களும் பொதுமக்களும் அதிக அளவில் திரண்டிருந்தனர். ஒரு கட்டத்தில் படப்பிடிப்பை நடத்த முடியாத அளவுக்குக் கூட்டம் அதிகரித்தது.

பாதுகாப்புக்கு குறைவான அளவிலேயே பொலிஸார் வந்திருந்ததால் அவர்களால் கூட்டத்தை ஒழுங்குபடுத்த முடியவில்லை. இதனால் தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்தனர். இதனையடுத்து அப் பகுதியில் சற்று நேரம் பரபரப்பு ஏற்பட்டது. படப்பிடிப்பும் அதோடு கைவிடப்பட்டது.

முன்னதாக காலையில் அப் பகுதியில் உள்ள கடைகளை மூடச் சொல்லி படப்பிடிப்புக் குழுவினர் கூற அதற்கு வியாபாரிகள் மறுத்துவிட்டனர். இதனால் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகப் படப்பிடிப்பு சற்றுத் தாமதமாகத் தொடங்கியதாம்.



சதுரங்கம்
ஸ்ரீகாந்த் - அகர்வால்

# சதாவின் சதைப் படம்

அலட்டல் நாயகி என்ற பெயரைப் பெற்றுள்ள சதா, தமிழில் கவர்ச்சி என்றாலே காச் மூச் என்று கத்தி வருவது தெரிந்ததுதான். இதே சதா கவர்ச்சியில் கதகளி ஆடியிருக்கும் ஒரு படம் கன்னடத்தில் வெளியாகி படு ஓட்டம் ஓடிக்கொண்டிருக்கிறது.

'ஜெயம்' படத்தில் பாவாடை தாவணியில் அறிமுகமாகி தனது அழகால் இரசிக இதயங்களைக் காவுகொண்டு போனவர் சதா. துளி கூடக் கவர்ச்சி காட்ட மாட்டேன் என்று அடம் பிடித்தார். அட, இந்தக் காலத்திலும் இப்படி ஒரு நடிகையா என கோடம்பாக்கம் வியந்தது.

'அந்நியன்' படத்திலும் சதா ஒத்துழைக்க மறுக்கவே கடுப்பாகிப் போன ஷங்கர், வேற ஆளைப் போடலாமா என்று யோசித்தார். இதனால் இறங்கி வந்தார் வந்தார் சதா.

ஆனால், இதே சதா கன்னடப் படமொன்றில் பயங்கர கவர்ச்சி காட்டிக் கலங்கடித்துள்ளார். தெலுங்கு, கன்னடத்தில் வாய்ப்புத் தேடிக்கொண்டிருந்த காலத்தில் இவர் நடித்த படம் 'மோனலிசா! அதில் "ச்தாவா இது" என்று ஆச்சரியப்படும் அளவுக்கு எக்ஸ்போஸ் செய்திருக்கிறாராம்.

இப்படித்தான் 'சேது' படம் வெளியானவுடன் அபிதா நடித்த பலான மலையாளப் படங்களை டப் செய்து வெளியிட்டு அவரது மார்க்கெட்டை அவுட் ஆக்கினார்கள். இப்போது சதாவுக்கும் அதே ட்ரீட்மெண்ட் தரக் கிளம்பியுள்ளார்கள்.



# பண மழையில் சாயா

அதிகம் படங்களில் நடிக்காமலேயே பெரும் தொகையை 'தேத்தி' வைத்துள்ளார் சாயாசிங். அதனை தனது சொந்த ஊரான பெங்களூரில் சொத்துக்களாக மாற்றி வருகிறார்.

முதல் படத்தில் நடிக்கும்போது எந்த நடிகைக்கும் பெரிய சம்பளம் கிடைக்காது. அதுபோலத்தான் சாயாசிங்குக்கும் 'திருடா திருடி' படம் ஹிட் ஆகியும் அதில் நடித்த சாயாசிங்குக்கு சம்பளம் என ஒரு பெரிய தொகை எதுவும் வழங்கப்படவில்லை.

பின்பு 'கவிதை' படத்தில் நடித்தபோது ரூ.10 இலட்சம் கேட்டார் சாயா. "மன்மதராசா பாடலுக்கு நான் போட்ட ஆட்டம்தான் 'திருடா திருடி' படத்தின் வெற்றிக்கே காரணம்" என்று சொல்லி, அவ்வளவு பெரும் தொகையைக் கேட்டார். ஆனால், சாயா கேட்டதில் பாதியைக் கொடுத்து கால்ஷீட்டை வாங்கிவிட்டார் தயாரிப்பாளர்.

இதற்கிடையே சிம்ரன் பாணியில் 'அருள்' படத்தில் ஒரு பாடலுக்குக் குத்தாட்டம் போட்டார். படம் முக்காடு போட்டு மூடிக்கொண்டதில் இவரது ஆட்டம் அவ்வளவாக பேசப்படவில்லை.

இப்போது இவரிடம் 'ஜெயசூர்யா' மற்றும் 'அப்பா அம்மா செல்லம்' என்ற இரு படங்கள் மட்டுமே கைவசம் உள்ளன. 'ஜெயசூர்யா'வில் அர்ஜுனுக்கு இரு கதாநாயகிகளில் ஒருவராக லைலாவுடன் நடிக்கிறார். 'அப்பா அம்மா செல்லம்' பட வாய்ப்பை சாயாசிங்கே வலியப் போய்க் கேட்டு வாங்கினார்.

வாய்ப்புகள் இல்லாவிட்டாலும் மன்மத ராணியிடம் பணப் புழக்கத்துக்குக் குறைவேயில்லை. கையில் கோடிகள் புரள்கின்றன. இந்தப் பெரும் பணம் சாயா நடிக்காமல் சம்பாதித்தது என்கிறார்கள்.

நடிக்காமல் என்றதும் தப்பாக எதுவும் கற்பனை செய்துகொள்ள வேண்டாம். பிறகு எப்படிக் காசு வந்தது என்று கேட்கிறீர்களா? எல்லாம் மன்மத ராசா பாடலுக்கு ஆட்டம் போட்டுத்தான்.

இந்தப் பாடலால் ஓடிய 'திருடா திருடி' படத்தின் மூலம் தயாரிப்பாளர் கிருஷ்ணகாந்த்துக்குக் கிடைத்த இலாபம் சுமார் ரூ.7 கோடி. அதேபோல சாயாசிங்குக்கும் இந்தப் பாடல் பணத்தைக் கொட்டிக்கொண்டிருக்கிறது.

இதுவரை அந்தப் பாடலுக்கு ஏறக்குறைய 400க்கும் அதிகமான உள்நாட்டு, வெளிநாட்டு கலை நிகழ்ச்சிகளில் ஆடியிருக்கிறாராம் சாயா.

# தரணியுடன் ஒரு நிமிடம்

**இந்த வெற்றி, நிறைய பாரத்தை உங்கள் மீது ஏற்றி வைத்திருக்குமே?**

எக்கச்சக்கமான பாரம்! அடுத்த படம் முடிவு பண்ணக் கூட பயமா இருக்கு. காரணம் போன படம் சுமாரான வெற்றின்னா பரவாயில்லை. ஒரு குதிரையை அடிக்க அடிக்க வேகமா ஓடிக்கிட்டே இருக்கும். 'தில்' படம் ஓரளவுக்கு ஓடிச்சு. 'தூள்' இன்னும் ஓடிச்சு. 'கில்லி'யில் இன்னும் வேகம் எடுத்திருக்கு. இந்த ஓட்டம்தான் பயத்தையும் கொடுக்குது. ஸோ, சின்னதா நிதானிச்சிட்டு, அப்புறம் ஓட ஆரம்பிச்சா வெற்றி தர முடியும்னு நினைக்கிறேன்.

**தெலுங்கு 'ஒக்கடு'வில் உள்ள வேகம் 'கில்லி'யில் இல்லைன்னு சிலர் சொல்றாங்களே?**

தெலுங்கு 'ஒக்கடு' படத்தை இயக்கியவர் குணசேகர். 'கில்லி'யை ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடி அவரைச் சந்திச்சேன். அவரிடம் இந்த படத்தை நீங்களே தமிழ்ல பண்ணலாமேன்னு கேட்டேன். சார் எனது அடுத்தப் படத்துக்கு லொக்கேஷன் பார்க்க மதுரைப் பக்கம் போயிருந்தப்போ உங்க 'தூள்' படம் பார்த்தேன். அதனோட வேகம், தியேட்டர்ல பறந்த விசில் எல்லாத்தையும் வச்சு உங்களை மாதிரி ஒருத்தர் என் படத்தை தமிழ்ல பண்ணா நல்லா இருக்குமேன்னு நினைச்சேன். அதுவே இப்போ உண்மையாகி இருக்கு. ரொம்ப சந்தோஷம். நீங்களே செய்யுங்கன்னார். அப்புறம் 'கில்லி'யைப் பார்த்துவிட்டு, போன் பண்ணி 'ஒக்கடு'வின் வேகத்தில் இம்மியளவு கூட குறையாமல், தமிழ் நாட்டுக்கு என்ன தேவையோ அதைக் கலந்து அற்புதமா கொடுத்திருக்கீங்கன்னார். அப்புறம் படம் பார்த்துட்டு தியேட்டரை விட்டு வெளியே வந்த ஜனங்க படம் ஆரம்பிக்கிறதும் தெரியலை. முடியறதும் தெரியலை. அவ்வளவு வேகம்னு சொன்னாங்க. தமிழ்நாட்டின் அத்தனை பத்திரிகைகளும் தொலைகாட்சிகளும் படத்தின் வேகத்தைத்தான் குறிப்பிட்டுப் பாராட்டி இருந்தன. அப்படி 'ஒக்கடு'வின் வேகம் 'கில்லி'யில் இல்லைன்னு சொல்றவங்க, எங்கிட்ட கேட்க வேணாம். அதை ஜனங்ககிட்ட கேட்கட்டும். அவங்க பதில் சொல்வாங்க.




## மாங்காய் சாப்பிடும் சிம்ரன்

சிம்ரன் கல்யாணம் செய்துகொண்டதையே இன்னும் ஜீரணிக்க முடியாமல் இருக்கும் அவரது இரசிகர்களுக்கு மேலும் ஒரு அதிர்ச்சியான செய்தி.

சிம்ரனுக்கு இப்போதெல்லாம் புளிப்பாகச் சாப்பிட்டால்தான் வாய்க்கு நன்றாக இருக்கிறதாம். என்ன ஊகித்துவிட்டீர்களா? அதே மேட்டர்தானுங்கோ.

தீபக் பாஹாவைத் திருமணம் செய்து விளையாட்டுப் போல சில மாதங்களை தள்ளிவிட்ட சிம்ரன் இப்போது முழுகாமல் இருக்கிறாராம். இரசிகர்களின் கனவுக் கன்னியாக இருந்து வந்த தான் இப்போது தாயாகிவிட்டது சிம்ரனுக்கு ரொம்பவே சந்தோஷமாகவும் ஆச்சரியமாகவும் இருக்கிறதாம்.

இதனால் புதிதாக ஒத்துக் கொண்ட ஓரிரு படங்களிலிருந்தும் விலகியுள்ளார். புதிதாக வரும் வாய்ப்புகளையும் தவிர்த்து வருகிறார். அழகான குழந்தையைப் பெற்று, குடும்ப வாழ்க்கையில் மும்முரமாக இறங்க முடிவு செய்துள்ளாராம் சிம்ரன்.

மேலும், சினிமாவுக்கு நிரந்தரமாக முழுக்குப் போடவும் முடிவு செய்துவிட்டாராம் சிம்ரன். இந்தத் திடீர் முடிவுக்குத் தாயாகப் போவது மட்டும் காரணமில்லை என்று கோடம்பாக்கத்தில் கிசுகிசுக்கிறார்கள்.

## சினி விசிட்




**அதிரடி தான் செய்வீர்களா? அதுவும் மாஸ் ஹீரோக்களுடன்தானா?**

எல்லோருக்கும் ஒரு அடையாளம் இருக்கு. எனக்குன்னு தனிப்பட்ட ஒரு அடையாளம் வேணும். என்னைப் பொறுத்தவரைக்கும் ஒரு படம் வேகமா இருக்கணும். அதுக்கு அதிரடிப் படங்கள் ரொம்ப உதவியா இருக்கு. நேரம் வரும்போது மற்ற டைப் படங்களும் செய்யலாம். ஹீரோக்களைப் பொறுத்தவரையில் எனக்கு அமையறதைப் பொறுத்து செய்யறேன். 'எதிரும் புதிரும்' முடிச்சிட்டு ஒரு விபத்தில் சிக்கி வீட்டிலிருக்க வேண்டிய கட்டாயம். ஆனா என்னால இருக்க முடியலை. பிரகாஷ்ராஜ் சார் அப்போ நிறைய டப்பிங் படம் பண்ணிட்டிருப்பார். அவர் கிட்ட போய் ஏதாவது வேலை செய்திட்டிருப்பேன். அப்போதான் லஷ்மி புரொடக்ஸனிலிருந்து கதை சொல்ல வரச் சொன்னாங்க. கதை கேட்ட பிறகு அந்த படத்துக்கு நான்தான் டைரக்டர்னு ஆச்சரியம் தந்ததோடு, 'தூள்' படத்திற்கு விக்ரம் கால்ஷீட் வாங்கி வச்சிருந்தது சூர்யா மூவிஸ்தான். அடுத்து 'கில்லி'க்காக விஜய் கால்ஷீட்டும் வாங்கி வந்திருந்தார். இப்படி எல்லாமே நடிகரோடு வந்து அமைஞ்சதுதான். நல்ல சூழ்நிலை அமைந்தால் மாஸ் ஹீரோக்கள் இல்லாம செய்யவும் முயற்சிப்பேன். ஆனா இன்னிக்கு இருக்கிற சூழ்நிலையில் டைரக்டர் ஹீரோ காம்பினேஷன் ஒரு தயாரிப்பாளருக்கு மினிமம் கியாரண்டியை தருது. அதனால அந்த சுலபமான வழியில் போய்ட்டிருக்கேன். புதுமுகங்களை வைத்து ஒரு ..ப்ளாப் பொடுத்தா தயாரிப்பாளரால தாங்க முடியாது. அதனால இப்போ இருக்கிற சூழ்நிலையில செய்ய வேணாம்னு முடிவு.




**நிறைய செலவு வைக்கிறது உண்மையா?**

இப்போ ஒரு பொண்ணை கல்யாணம் பண்ணிக் கொடுக்கும்போது, எவ்வளவு நகைகள் போடுறீங்க. சீர்வரிசை செய்றீங்கன்றது முக்கியம் இல்லை. கட்டிக்கொடுத்த அந்த பொண்ணு குடியிருக்கப் போன வீட்டில் நல்லா வாழுதா? இல்லை, பெட்ரோல் ஊத்தி கொளுத்திக்கிட்டு சாவுதாங்கிறதுதான் முக்கியம். நான் மூன்று பெண்களைக் கட்டிக் கொடுத்திருக்கேன். 'தில்' ஒரு பெண், 'தூள்' இன்னொரு பெண், இப்போ 'கில்லி'ன்னு ஒரு பெண், மூணுமே சுகமா வாழ்ந்திட்டிருக்கு. நான் மூன்று பெண்களையும் பெரிய இடத்தில கல்யாணம் செய்து கொடுத்திருக்கேன். அதை வச்சுத்தான் செய்ற சீர்வரிசையும் இருந்தது. இப்போ முன்னமாதிரி ஒரு மினிஸ்டரை காட்ட முடியறதில்லை. அப்போ வீட்டில் டி.வி. கிடையாது. இன்னிக்கு ஒரு மினிஸ்டர் வந்தா அந்த இடம் எப்படி இருக்கும்னு எல்லோருக்கும் தெரியுது. முன்னேமாதிரி டேபுள் வெயிட்டை உருட்டற மாதிரி காட்டி ஏமாத்த முடியாது. 'வீடு' படத்தை 8 கோடியில் எடுக்க முடியாது. அதேமாதிரி 'கேப்டன் பிரபாகரன்' படத்தை 80 இலட்சத்திலும் எடுக்கவும் முடியாது. கதைக்கான களம் தேவைப்படுது.

**சீன் பை சீன் வரைஞ்சிதான் படமாக்குறீங்களாமே?**

வரையத் தெரியும். அதனால நினைக்கிறதை முதல்ல படமா வரைஞ்சிருவேன். அது படமாக்க பெரிய உதவியா இருக்கு. என்னோட கனவை கேமராமேனுக்கோ, நடிகர் நடிகைகளுக்கோ, ஆர்ட் டைரக்டர்களுக்கோ வெளிப்படுத்த உதவியா இருக்கு. ரிசல்டும் நினைச்ச மாதிரி அமையுது.

**'தரணி' 'ரமணி' யைத் திரும்பிப்பார்க்கிறதுண்டா?**

தினம் தினம் திரும்பி பார்த்துக்கிட்டிருக்கேன். வெற்றி என்னை எதுவும் செய்யலை. இன்னாருடன்தான் பேசணும். ஸ்டார் ஹோட்டல்லதான் சாப்பிடணுங்கிற எண்ணம் வரலை. ரமணியா இருந்தப்போ எங்கெல்லாம் சுத்திட்டிருந்தேனோ அதே இடங்கள்ல கால் பதிக்கிறேன். அதே நண்பர்களோட பொழுதைக் கழிக்கிறேன். என் நண்பர்கள் 'இன்னும் பழைய மாதிரியே இருக்கான்டா, மாறலைன்னு' இன்னும் அதிகமா அன்பு காட்டுறாங்க. இது நான் சாகற வரைக்கும் மாறாது. ஏன்னா என் தாயும், தந்தையும் என்னை ஒரு வீதி முறையோட வளர்த்தாங்க. அந்த வளர்ப்பு மாறாது. பதவி வந்தாலும் பணிவும் வேணும் தோழா' என்ற வாசகம்தான் எனக்கும் தாரக மந்திரம். நான் என்னை மாத்திக்கலை. பெயரைத்தான் மாத்தி இருக்கேன். அதனால நான் இன்னும் ரமணியோடத்தான் வாழ்ந்துக்கிட்டிருக்கேன். இன்னும் சொல்லப்போனா ரமணி பட்ட கஷ்டங்களை இன்னிக்கு தரணி அனுபவிச்சிட்டிருக்கேன்.




## காதல் சித்திரவதை



பத்தரை மாற்றுத்
தங்கம் நீ - என்
நித்திரை பறித்த
மங்கையடி - உன்
சித்திரை மாத
நிலா முகத்தில்
முத்திரை பதிக்க
துடிக்குதடி நெஞ்சம்.

கத்திரி வெயிலில்
சுற்றித் திரிந்து
காத்திரமாய் - உனை
கைது செய்து
பத்திரமாய் சிறை
வைத்தேன் - பரிதாபம்
சிறை செய்தவனே
இன்று சித்திரவதை
அநுபவிக்கிறேன்....

*ஆர்.பிரேம், தாண்டியடி.*

## வலிகள்..!

அழிந்துவிடுமா
என்ற அச்சம்
கரை முழுக்க - அவள்
காலடித் தடங்கள்!

சில சமயம்
தலையே வெடிக்க
இருக்கும்
தலை வலியைக் கூட
தாங்கிக்கொள்கிறேன்
இருந்தும்
உன் வழி தந்த
வலிகள் தாங்க முடியாமலே!



நீ தூங்கும்
வேளையில்
உன்னைப் பற்றி
அதிகமாய் எழுதுகிறேன்
எதிரில் தோன்றியதும்
எழுத்துக்களையெல்லாம்
கொழுத்திவிட்டுப் போகிறாய்!

கிரணம் தவறினால்
மட்டுமல்ல
காதல் தவறினாலும்
மரணமே....

*நஸீம் ரூமி, புத்தளம்.*

## தொடு வானத் தேடல்கள்



தட்டிக் கொடுப்பதும்
தள்ளி விடுவதுமாய்.....
என்தொடு வானத்....
தேடல்கள்
அனிச்சையாய்....
அல்லறபடுகிறது.
அர்த்தமில்லா ஆரவாரங்கள்
அவசரமாய் புது
பதற்றங்களை என்னுள்
பரிணமித்துப் போகிறது
ஒப்பனை ஓலங்களையெல்லாம்
ஓரங்கட்டி
அநுபவ முத்திரைகளை
அரவணைத்துக் கொள்ள
பிரியப்படும் - மனம்
முழுதும் நீ விட்டுச் சென்ற
நினைவுகள் மட்டுமே
நிழல்களாய் என்னைத் தொடர்ந்து
நிரந்தரமாய் நிம்மதியை
நிர்மூலப்படுத்துகிறது.
கடந்துபோன
கால் சுவடுகளை
கண் பொழுதேனும்
கருணையிருந்தால்...
நினைத்துப் பார்!
அப்போதே என்
தேடல்களின் தேம்பல்
புரியும் உனக்கு.

*[illegible]*

## [illegible]

[illegible]

*கந்தையா காந்தரூபன், கட்டுபுலா.*

## நீ வரும் சாலைகளில்.....!

[illegible]

*[illegible] கட்டாரிலிருந்து.*

## சறுக்காமலே நின்று விடு...!

சறுக்காமலே நின்று விடு.....
நிரந்தரமாய் நிலைத்து விடு.
இதுதான் இன்றைய
தேவையாயும் இருக்கிறது
எங்களின் ஏகோபித்த
வேண்டுதலாயும் இருக்கிறது.

ஓ சமாதானமே.....
உன்னைத்தான் கூறுகிறோம்
உனது இருப்பினைப்
பலப்படுத்திக் கொள்.

நீ நிலைப்பாய்
நிம்மதியைத் தருவாய்
என்னும் நம்பிக்கையில்தான்
இன்னும் நாங்கள்
உயிரைத் தக்கவைத்துக்கொண்டு
உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நீ இல்லையென்றால் - இனி
நாங்களும் இல்லை
எங்களின் உயிர் மூச்சே
நீதான்.

இரு தசாப்பதங்களாய்
இடம்பெற்ற பேய்ப் போரின்
இடையே நீ.....
இடைக்கிடையே வந்து
எட்டிப் பார்த்திருக்கிறாய்.....

ஆனாலும் என்ன
காலங்காலமாய் நீ
சறுக்கித்தானே போயிருக்கிறாய்
சரித்திரமே இதற்குச்
சாட்சி சொல்லும்.

உன்னைத் தொலைப்பாங்கள்
நீயும்.....
தொலைந்துதான் போவாய்
தேடி அலைவதோ, அழுவதோ
நாங்கள்தான்
இதுவரை காலமும்
இதுதானே இங்கே
நடந்து வந்திருக்கிறது.

புரிந்துணர்வென்பது
உன் நிலையான
இருப்புக்காகத்தான்
தாங்கு தளமாக
போடப் பட்டிருக்கிறது

ஆம்....
அந்தத் தாங்கு தளத்தினிலே
உனது இருப்பினைப்
பலப்படுத்திக் கொள்.

எங்களது எதிர்பார்ப்புகளினை
இனியும் ஏமாற்றி விடாதே
இலவு காத்த கிளிகளாய்
இனியும் எங்களை ஆக்கி விடாதே.

இம் முறையும் நீ
சறுக்கிவிட்டால் இந்நாட்டில்
சாம்பல் மாத்திரம்தான்
வந்து மிஞ்சும்...
சறுக்காமலே நின்றுவிடு...!

இன வெறியாட்டங்கள்
இரத்தக் களரிகள்
எதனையும் நாங்களினி
காண விரும்பவில்லை
உனது நிலையான
இருப்பினைத்தான்
இப்போதெல்லாம்
விரும்புகின்றோம்....!

நாலினமும்
ஒரு தாய் பிள்ளைகளாய்....
சோதரராய்....வாழும்
சாந்தி சமாதானமே
சக வாழ்வே இங்கேயினி
நிலைக்கட்டும்....
சறுக்காமலே நின்றுவிடு....

ஓ சமாதானமே
எந்தக் காரணம் கொண்டும் நீ
இம்முறையும் சறுக்கி விடாதே
சறுக்காமலே நின்றுவிடு
நிரந்தரமாய் நிலைத்துவிடு.

*கன்னிமுத்து வெல்லபதியான், ஏறவில்.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

"ஒரு சமூகத்தின் பொருளாதாரம் விரல் விட்டு எண்ணக் கூடிய சிலரிடம் கையடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கேற்ப கலாசாரம், வாழ்முறை மாற்றப்படுகிறது. வாழ்முறை காரணமாய் மனித உறவுகள் புதிய பரிணாமங்களையும் புதிய பரிமாணங்களையும் சுவீகரிக்கிறதுஞூ நிராகரிக்கிறதுஞூ தடுமாறுகிறது... இந்தப் புழுதிக் காற்றில் சிக்கிய சாதாரண மனிதர்களின் துக்கங்கள், சந்தோசங்கள், நம்பிக்கைகள், நம்பிக்கை முறிவுகள்... இவையே என் கவிதைகள்" என்று கூறும் கவிஞர் லாவண்யா, எளிமையான வரிகளில் உள்ளடங்கிய கிண்டல் தொனியுடன் எழுதுபவர். எள்ளல் தன்மையைச் சிந்திக்கும்படி செலுத்துவது இவர் கவிதையின் இயல்பாகிறது. 'லாவண்யா' என்ற புனைபெயரில் எழுதும் சத்தியநாதன் அறுபது வயதைத் தொடுபவர். எழுபதுகளில் வெளிவந்த 'பிரக்ஞை' சிற்றிதழுடன் தொடர்பு கொண்டவர். லாவண்யாவின் ஐந்து கவிதைகள்.


### உற்சாகம் தரும்படி

விலைவாசி குறையவில்லை
ஊதியம் போதவில்லை
கடன் அடையவில்லை
பதவி உயர்வு கிடைக்கவில்லை
பிள்ளை ஊர்சுற்றி
இவை வலிகள் தீராத வலிகள்
பேசித் தீராதவை
பேசுவானேன்?
நெடுநாள் கழித்த சந்திப்பில்
நம் யௌவன நேரங்களைப் பேசுவோம்
நீலப் புகையை சுருளாய்
மூக்கில் விடக்கற்ற முதல்நாள்
தெரிந்ததே வாழ்க்கை
அதுபற்றிப் பேசுவோம்
மழைக் கோட்டுள் மாலதியும் நீயும்
கண்டறியாத குதூகலம் கண்டதைப் பேசுவோம்.
படிக்கிற புத்தகத்தில்
பார்க்கிற புத்தகங்கள் தந்ததற்குப் பரிசாய்
சந்திராவிடம் நான் பெற்ற முத்தங்களின்
மௌன வேகத்தைப் பேசுவோம்
சிநேகப் பிரபாவின் பின்புறங்களில்
சித்தப்பிரமை பிடித்த கண்ணனின்
ஓவியக் கற்பனைகளை
நடத்தத் திட்டமிடாத நாடகத்துக்கு நாம்
துணை நடிகையுடன் நடத்திய ஒத்திகைகளை
கெட்டிக்கார முட்டாள்களாய்
நாமிருந்த பழைய நாட்களைப் பேசுவோம்
தற்சமயம் உற்சாகம் தரும்படி
நம் வாழ்க்கையில் என்ன இருக்கிறது
நினைவு மூட்டைகளைத் தவிர.

* * *

### செய்தித்தாள்

[illegible]



### தேவைப்படும்

வீடு வீடாக இல்லை
சொல்லி முடியாத அடைப்பு
பரண் நிறைய அட்டைப் பெட்டிகள்
நிறைய புத்தகங்கள்
யாருமெடுத்துப் படிப்பதில்லை
படிக்கிற பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம்
நூலகத்துக்குத் தரலாம்
பழைய பேப்பர்காரனுக்குப் போடலாம்
போகி கொளுத்தலாம்
ஏதாவது செய்யலாமெனத் தம்பியைக் கேட்டேன்
விலை மதிகமானவை பல
அபூர்வமானவை சில
வாங்கப் போனால் கிடைக்காது
எப்பவாவது தேவைப்படும்
எப்ப வேண்டுமானாலும் தேவைப்படும்
அப்படியே இருக்கட்டுமென்றான் தம்பி
[illegible]
[illegible]
அவை உங்களை என்ன செய்கின்றன
[illegible]
[illegible]
அங்கேயே இருக்கட்டுமென்றாள்
[illegible]
[illegible]
[illegible]

ஒன்றும் [illegible]

### [illegible]

[illegible]

### [illegible]

[illegible]

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி



பெயர் : த. தயானந்தன் (தயாளன்)
வயது : 23
முகவரி : Po.No. 91250, Doha Qatar.
பொழுதுபோக்கு: [illegible]



பெயர் : வைர. வசீகரன்
வயது : 17
முகவரி : 'புழுவளவு', கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
பொழுதுபோக்கு : கவிதை எழுதுதல், கதைப்புத்தகம் வாசித்தல்.



பெயர் : ஸ்ரீபன் கென்றிஸ்
வயது : 20
முகவரி : முருகு வாசா பள்ளம் தோட்டம், மேற்கு துன்னாலை.
பொழுதுபோக்கு : பத்திரிகை, பேனாநட்பு



பெயர் : M.Paramalingam
வயது : 24
முகவரி : M.B.M. Division, Po.Box 3532, Abu Dubai, U.A.E.
பொழுதுபோக்கு : பத்திரிகை வாசித்தல்.

# அழகு தரும் ஆயுர்வேதம்

பெண்கள் அனைவரும் அழகுடன் இருக்கத்தான் ஆசைப்படுவார்கள். ஆனால், எல்லோராலும் அழகுடன் ஜொலிக்க முடிவதில்லை. ஏனெனில், சில பெண்கள் வீட்டில் இருந்தபடியே வெளியே எங்கும் செல்லாமல் ஏதோ வீட்டின் அருகில் கிடைக்கும் பவுடரைப் பயன்படுத்துகிறார்கள்.

அவர்களுக்கு வீட்டு வேலைகளிலேயே பாதி நேரம் கழிந்துவிடுவதால் அழகிலே அக்கறை காட்ட முடியவில்லை.

சில பெண்கள் தன்னைப் பற்றிக் கவலைப்படாமல் தன் சுற்றங்களைக் கவனிப்பதிலேயே காலம் கடத்திவிட்டு, சரும பொலிவெல்லாம் அகன்ற பிறகு வேதனை அடைகின்றனர். அவ்வாறு இல்லாமல் வேலைக்குப் போகும் பெண்களாக இருந்தாலும், சரி, படிக்கும் பெண்களாக இருந்தாலும் சரி, வீட்டு வேலைகளில் அக்கறை காட்டும் பெண்களாக இருந்தாலும் சரி, தன் சருமத்தில் சிறிது அக்கறை காட்ட வேண்டும்.

ஏனெனில், எந்த ஒரு சருமக் கோளாறாக இருந்தாலும் முதலில் நம்முடைய முகத்தில்தான் வெளிப்படும். எனவே, முடிந்த அளவு முகத்தைப் பொலிவுடன் வைத்திருப்பது அவசியம்.

அதுவும் இந்தக் கொளுத்தும் வெயிலில் முகத்தைச் சரிவரப் பராமரிக்காவிட்டால் முக அழகு சிதைந்து சின்னாபின்னமாகிவிடும்.

முறையாக முகத்தை அழகுபடுத்துவது பற்றிப் பார்ப்போம்!

நாம் அன்றாடம் வீட்டு வேலை செய்த பிறகும், வெளியே சென்று வீடு திரும்பிய பிறகும் குளிர்ந்த நீரினால் முகத்தை அலம்ப வேண்டும்.

ஏனெனில், நம் சருமம் வெப்பத்தினால் பாதிக்கப்படக் கூடும். இதனால் முகத்தில்



முகப்பரு போன்ற பல கோளாறுகள் வர வாய்ப்பு உண்டு. எனவே, சுத்தமாக வைத்திருப்பது நன்று.

நேரம் கிடைக்கும்போது வாரத்தில் 2,3 தடவை ரோஜா இதழ்களை நன்கு அரைத்து முகத்தில் தடவிவந்தால் முகத்தில் பளபளப்பு வரும்.

முட்டைக்கோஸ், கரட், உருளைக் கிழங்கு இம் மூன்றையும் அரைத்து முகத்தில் தடவி 10 நிமிடம் கழித்துக் கழுவினால் முகம் பொலிவுடன் விளங்கும்.

ஆரஞ்சு சாறு, முள்ளங்கிச் சாறு, உளுத்த மாவு மூன்றையும் சேர்த்து முகத்தில் தடவிவந்தால் கருமை நிறம் நீங்கி முகம் பளபளப்பாகும்.

வெற்றிலைச் சாறு எடுத்து உதட்டில் தடவினால் உதட்டில் ஏற்படும் வெடிப்பு நீங்கும். இப்படி நாம் வீட்டில் இருந்தபடியே சருமத்தைப் பராமரிக்கலாம்.

மேலும், இவை மட்டும் போதாது. சருமத்திற்கு உள்ளேயும் மசாஜ் அவசியம். மசாஜ் செய்வதால் புதுப் பொலிவு, இரத்த ஓட்டம் கிடைத்து சதை, சருமம் நன்கு செயற்படுகின்றன. சிலர் விலை குறைவாகக் கிடைக்கும் பொருட்களைப் (கிறீம்) பயன்படுத்துகின்றனர்.

இதனால் சருமம் பாதிக்கப்படுவதோடு பல பக்க விளைவுகள் ஏற்படவும் வாய்ப்பு உண்டு. எனவே, முறையாகத் தெரிந்து கொண்டு நல்ல ஆயுர்வேத பொருட்களைப் பயன்படுத்தினால் எவ்வித சருமக் கோளாறும் வராது.

ஆயுர்வேதம் என்பது சுத்தமான மூலிகைகளைக் கொண்டு செய்யப்படும் மருந்து. இவற்றால் எவ்வித கெடுதலும் நேராது. எனவே, ஆயுர்வேத கலைகளை நன்கு தெரிந்துகொண்டு செயற்படும் அழகு நிலையங்களில் சென்று மாதத்திற்கு இரு முறையாவது அல்லது ஒரு முறையாவது மசாஜ் செய்தால் முகம் பொலிவுடன் விளங்குவது மட்டுமல்லாமல், சருமம் எந்த வித சுருக்கமும் இல்லாமலும் இறுக்கமாகும்.

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' என்பார்கள். எனவே, அகமும் புறமும் நன்கு பொலிவுடன் விளங்க நல்ல திராட்சைச் சாறு, ஆரஞ்சு ஜூஸ், அப்பிள் ஜூஸ், மாதுளை ஜூஸ் போன்ற பானங்களைப் பருகினால் அகமும் புறமும் பொலிவுடன் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

நீங்கள் உங்களை அழகுபடுத்திக் கொள்வதோடு நின்றுவிடாது மற்றப் பெண்களையும் அழகுபடுத்த அழகு தரும் ஆயுர்வேத முறையைக் கையாளச் சொல்லுங்கள்.

# லேடிஸ் ஸ்பெஷல்

## யாருக்கு எது அழகு?

சாந்துப் பொட்டு, குங்குமப் பொட்டு, ஸ்டிக்கர் பொட்டு... என பெண்களின் நெற்றியில் விதம் விதமான பொட்டுகள்.?

ஆனால், எல்லாப் பொட்டுகளும் எல்லாப் பெண்களுக்குமே அழகைத் தருமா? தராது.

கறுப்பு நிறப் பெண்களுக்கு சிகப்பு நிறச் சாந்து அல்லது குங்குமம்தான் அழகைத் தருமே தவிர, ஸ்டிக்கர் பொட்டு அழகைத் தராது.

சிவந்த மேனி கொண்ட பெண்களுக்கு நிறமும், பொட்டும் எதுவானாலும் அழகுதான்.

குறுகிய நெற்றி கொண்ட பெண்கள் வட்டமாகப் பொட்டு வைத்துக்கொள்வதைப் விட மேல் நோக்கி இழுத்துப் பொட்டு வைப்பதே அழகு.

சற்று நீண்ட முக அமைப்புக் கொண்ட பெண்கள் வட்ட வடிவில் பொட்டோ ஸ்டிக்கரோ வைத்துக் கொள்ளலாம்.

வட்ட வடிவ முகமும் பரந்த முகமும் கொண்டவர்கள் மத்தியில் பொட்டு வைத்து சுற்றிலும் சில புள்ளிகளை இடுவது, மேல் நோக்கிப் பொட்டிழுத்து கீழே பிறை வைப்பது போன்ற அலங்காரப் பொட்டுகள் நன்றாக இருக்கும்.

பொதுவாக நெற்றியின் மத்தியில்




குங்குமம் வைத்திருப்பது இலட்சுமி கடாட்சம் என்பது பழைய காலத்துக் கணிப்பு. அவர்களின் முக அழகு மற்றவர்களை வசீகரிப்பதுடன் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும்!

# நலமாக வாழ்வோம்

### *அர்த்த சக்கராசனம*

சக்கரம் போன்று பாதி நிலையில் பின்னால் வளைந்து செய்வதால் இந்தப் பெயர்.

**பலன்கள் :**



1. வயதானாலும் முதுகெலும்பை இளமையுடன் வைத்துக்கொள்ளலாம்.
2. கண் பார்வை தெளிவடைவதோடு குரல் வளமும் குன்றாது காப்பாற்றலாம்.
3. தொடர்ந்து செய்து வந்தால் ஆஸ்துமா, நீரிழிவு, T.B.இருதய பலவீனம், கிட்னிக் கோளாறுகள் ஆகியவை கட்டுப்படும்.
4. முதுகுத்தண்டில் ஏற்படும் சிறு குறைகளைச் சரி செய்கிறது.

**செய்முறை :**

1. விரிப்பின் மீது கால் பாதங்களை ஒன்று சேர்த்து வைத்து நிற்கவும்.
2. கைகளால் இடுப்பைப் பிடித்து கை கட்டை விரல்களால் முதுகை அழுத்தி பின்னோக்கி முடிந்தளவு வளைய வேண்டும்.
3. கால் முட்டிகளை வளைக்கக் கூடாது. அப்படியே 20 எண்ணிக்கை இருக்கவும். சாதாரண மூச்சு, கண்கள் திறந்திருக்க வேண்டும்.
4. மெதுவாக நிமிர்ந்து நிற்கவும். கைகளை இடுப்பிலிருந்து பிரித்து தளரவிட்டு சிறிது ஓய்வு எடுக்கவும்.
5. மூன்று முறை இவ்வாசனத்தைச் செய்து முடிக்கவும்.

### *பவன முக்தாசனம்*
*(தொடர்)*

**செய்முறை எண் - 3**

1. இரண்டு கால்களையும் ஒன்று சேர்த்து 90°க்கு இடுப்பை உயர்த்தாமல் முடிந்தளவு நேராக வைக்கவும்.
2. 1 முதல் 10 அல்லது 15 எண்ணிக்கைகள் இருக்கவும். 2 அல்லது 3 முறை செய்துவிட்டு சவாசனத்தில் ஓய்வு எடுக்கவும்.



# கணவன் பின்னால் போகும் பெண்ணே!

மொபட்டிலோ... ஸ்கூட்டரிலோ.... மோட்டார் சைக்கிளிலோ... கணவன் பின்னே அமர்ந்து செல்லும் பெண்களே! (காதலன் பின்னால் அமர்ந்து செல்லும் காதலியாகவும் இருக்கலாம்) இதைக்



கொஞ்சம் கவனியுங்க.

உங்கள் சீட்டில் கணவனின் முதுகுப் புறத்தை ஒட்டியே இருங்கள். இடைவெளி விட்டு பின்னால் தள்ளி இருக்காதீர்கள். இருந்தால் வண்டி ஓட்டச் சங்கடமாக இருக்கும்.

போக்குவரத்து சிக்னல்களை கணவரிடம் கேட்டுத் தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள். வண்டியில் நீங்கள் போகும்போது வண்டி ஓட்டும் கணவனுக்கு உதவியாக, நீங்களே இடது புறம் திரும்பினால் இடது புறமும் வலது புறம் திரும்பினால் வலது புறமும் கையைக் காட்டி சிக்னல் தெரிவியுங்கள்.

பின்னால் அமர்ந்து இருக்கும் நீங்கள் இடை முழுமையும் வெளியே தெரியாமல் முந்தானையால் மூடிக்கொள்வது நல்லது.

வாகனத்தில் செல்லும் நீங்கள் கணவரின் வயிற்றுப் பகுதியை பிடித்திருப்பதே அதிக பாதுகாப்பானது. அவரின் தொடையைப் பிடித்திருப்பது வெறும் ஸ்டைலே!

அவர் வேகமாய் போய்க்கொண்டிருக்கும்போது வசதியாக இருந்து கொள்வதற்காக பின்புறத்தையும் உடலையும் ஆட்டாதீர்கள். தொடக்கத்திலேயே வசதியாக அமர்ந்து கொள்ளுங்கள். இவை தவிரவும் சும்மா இருக்கும் நேரத்தில் வண்டியை எப்படி ஓட்டுவது என்பதைக் கணவரிடம் கேட்டுக் கற்றுக்கொள்ளுங்கள்!

# குறிப்புணர்த்தும் குடும்ப டிப்ஸ்

* பிறரைப் பார்த்து வாழ்வதில், பெண்களே திறமையானவர்கள். இவ்வெண்ணம், ஆடம்பரம், பெருமை போன்வற்றில் நுழையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்!

* எக் காரணத்தைக் கொண்டும் குடும்பப் பெண்கள், ''போலிப் பெருமை''களுக்கு அடிமையாக வேண்டாம். தேவையற்ற பொருட்களை வாங்கி, பெருமையாக சேர்த்து வைப்பதே ''போலிப் பெருமை''யாகும்!

* குடும்பப் பொறுப்பை மட்டுமல்ல, பெண்களிடம் கொடுக்கப்படும் அனைத்து பொறுப்புக்களையும் ஆண்கள் அக்கறையாய் ஊன்றிக் கவனிக்க வேண்டும். இதையே, பெண்கள் ஆண்களிடம் எதிர்பார்க் கின்றனர்!

* குடும்பத்திலுள்ள அனைத்து கஷ்ட, நஷ்டங்களையும் குறிப்பிட்ட வயதுவரை, குழந்தைகள் தெரிந்து கொள்ளாமல் பார்த்துக்கொள்வது, ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகும். இதனால், குழந்தைகளுக்கு தாழ்வு மனப்பான்மை உண்டாகிறது!

* பெண் என்றால், எத்தனை பொறுப்புக்கள் ஏற்றாலும், குடும்பத்தின் மீது அதிக கவனம் இருக்கட்டும். ஆண் என்றால், எத்தனை பொறுப்புக்களை ஏற்றாலும் உழைப்பின் மீது அதிக கவனம் இருக்கட்டும்!

* தன் உடம்பு தெரிய ஆடை அணியும் பழக்கம், கவர்ச்சிக்காக, சினிமாவில் ஏற்படுத்தப்பட்டது. அதை நிஜ வாழ்க்கையில் செயற்படுத்தும் போது ஒவ்வொரு பெண்ணுக்கும் தீமையே மிஞ்சுகிறது!

* ஒரு பெண்ணுக்குள்ள இயற்கை அழகே, அப் பெண்ணுக்குப் போதுமானது. அழகுள்ள எந்தப் பெண்ணும் தன்னை முழுவதும் செயற்கையாய் அலங்காரம் செய்துகொள்வதில்லை அப்படி செயற்படும் போது ''விகாரமே'' மிஞ்சுகிறது!

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது : ஷோபா*

## *மசாலாப் பணியாரம்*

***தேவையான பொருட்கள்:***

| | |
|---|---|
| பச்சரிசி | - 800 கிறாம் |
| உளுத்தம் பருப்பு | - 600 கிறாம் |
| தேங்காய் | - 1 |
| பெரிய வெங்காயம் | - 250 கிறாம் |
| கறிவேப்பிலை | - சிறிதளவு |
| வெள்ளை உளுத்தம் பருப்பு | - 1 தேக்கரண்டி |
| கடுகு | - 1/2 தேக்கரண்டி |
| எண்ணெய் | - 250 கிறாம் |
| உப்பு | - தேவையான அளவு |

**செய்முறை :**

பச்சரிசியையும் உளுத்தம் பருப்பையும் ஒன்றாக ஊற வைத்து, தேவையான அளவு உப்புச் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். தேங்காயை உடைத்துத் துருவி அரைத்த மாவில் கலந்துகொள்ளவும். வெங்காயத்தைப் பொடியாக நறுக்கவும்.

வெங்காயம், கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை ஆகிய வற்றைப் போட்டு தாளித்து மாவில் கொட்டி நன்றாகக் கலக்கவும். அடுப்பில் வாணலியை வைத்து, எண்ணெய் ஊற்றி, காய்ந்ததும் மாவை எடுத்து பெரிய அளவில் கிள்ளி எண்ணெயில் போட்டுப் பொரித்து எடுக்கவும். இதுவே சுவையான மசாலாப் பணியாரம்.



# துரோகம் துரத்துகிறது!

அங்கம் 11

அந்தக் காலை வேளையில் கோழியும் எழுந்திருந்தது. கோவிலும் எழுந்திருந்தது.

பூஜாரி வேப்பிலைக் கொத்துகளைத் தொங்க விட்டு ஒரு வெள்ளிக் கிழமை வேண்டல்களுக்குத் தயாராகிக் கொண்டிருந்தார்.

ஏற்கெனவே இந்த ஊரைப்பற்றி அரசல்புரசலாகக் கேள்விப்பட்டிருக்கிறான். வெள்ளிக்கிழமை அம்மன் விசேஷம்!

விசேஷத்தைக் காரணமாக்கி, அன்னியன் என்பதைத் தாராளமாகக் காட்டிக்கொண்டு கிராமத்திற்குள் போகலாம்.

இரட்டைத் தெரு கிராமம். பணக்காரத் தெரு. ஏழைத் தெரு.

பணக்காரத் தெருவில் பழைய காரை வீடுகளில் சில, காலத்தை ஓடவிடாமல் நிறுத்தி வைத்திருந்தன.

ஏழரை மணிக்கு மணி அடித்தபோது கோவிலுக்குள் போகும் முதல் பக்தனாக இருந்தான்.

தட்டில் போட்ட எட்டணா அந்தக் கோவிலுக்கு ரிக்கார்ட்! பூஜாரியின் கவனிப்பில் தெரிந்தது.

ஒரு கோவிலைப் பிரதட்சிணம் சுற்றுவது வெகு ஆண்டுகளுக்குப் பிறகு!

சிரத்தையோடு சுற்றினான். ஆனால் அதே நேரத்தில் அவன் செய்யும் செய்கையை அவனே பாதி நம்பாதது போல். அரை எக்களிப்பும் இருந்தது. கூட்டத்தின் ஆரம்பப் பிரார்த்தனையில் எல்லோருக்காகவும் எழுந்திருப்பது போல.

திருநீற்றை அள்ளிப் பூசி குங்குமத்தையும் பெரிதாக வைத்து, ஒரு பக்தி மேக் - அப்பில் முகத்தை மாற்றிக்கொண்டு தெருவில் எட்டரை மணிக்கு வந்தபோது, தெரு அப்படியேதானிருந்தது. உசும்பவே இல்லை.

இங்கே எல்லாமே ஸ்லோ - மோஷன் படம்!

தெருவில் நடந்தான். பஞ்சாயத்து நடத்தும் அண்ணா படிப்பகம் ஒரு பழைய வீட்டின் திண்ணையில் ஏறியிருந்தது.

அண்ணாவுக்குக் கிராமத்து பெயிண்டர் இரண்டு சுழிகளைப் போட்டிருக்க -

அந்தத் திண்ணை மேல் இரண்டு நாளிதழ்களும், ஒரு வாராந்தர இதழும் யாராவது படிக்க வருவார்களா என்று காத்துக்கொண்டிருந்தன.



அசட்டுச் சிரிப்பைக் காட்டி அனுமதியைப் பெறுவதற்கு அக்கம் பக்கத்தில் யாரும் இல்லாததால், அவனே திண்ணையிலேறி பேப்பரைப் புரட்டினான்.

முதல் பக்கத்தில் இருபது திட்டங்கள் நாடு முழுவதையும் சுபிட்சமாக்கிக் கொண்டிருக்க, உள்ளே இரண்டாவது பக்கத்தில் ஓர் அதிர்வெடி காத்திருந்தது.

அங்கே அவனது வீட்டைப் படம் பிடித்துப் போட்டிருந்தார்கள்.

இதுதான் சூரியகுமார் வீடு என்று அதன் கீழே எழுத்துக் கொட்டைகள்! (பாலபாடம் ஞாபகத்திற்கு வந்தது. அணில், ஆடு, இலை, ஈ...)

இந்த வீட்டைச் சுற்றிப் பாரா போட்டிருந்தது. தெரிந்ததே என்று ஞாபகப்படுத்தி,

முந்திய நாள் இரவில் சூரியகுமார் அந்த வீட்டுள் நுழைய முயற்சித்ததையும்,

அப்போது போலீசார் அவனைப் பிடிக்க முனைந்ததையும்,

டிமிக்கி கொடுத்துவிட்டு அவன் மாயமாய் மறைந்து போனதையும்,

குட்டி வினைச் சொல் தலைப்புகள், ஆச்சரியக் குறிகளுக்கிடையே விவரமாக விரவி,

சூரியகுமாரைப் பற்றித் துப்புக் கொடுக்கிறவர்களுக்கு வெகுமதி காத்திருக்கிறது என்று டி.ஐ.ஜி-யின் அறிக்கையையும் வெளியிட்டிருந்தது.

படிக்கும்போது ஒரு சுருக்கு இறுக்குகிறது என்ற எண்ணம் வந்தது. வெளிச்சம் போட்டால் எல்லாம் 'டப்டப்' என்று அறுந்துவிடும் என்ற நம்பிக்கையும் ஓடியது. பாதி பயம், பாதி உவகை!

இருந்தாலும் சம்பவங்களின் தொடர்புகள் அவனை எங்கேயோ இழுத்துக்கொண்டு போவதாக நினைவு வர, மனம் கொஞ்சம் கலவரப்பட ஆரம்பித்தது.

பரபரப்போடு பேப்பரை மூடி, கீழே குதித்து எதிரே ஸ்லோ - மோஷனில் வந்த கிராமத்துக்காரரைப் பார்த்து ஒரு பேக்குப் புன்னகை புரிந்து, கோவிலுக்குப் பின்னால் சில்லறை தெய்வங்கள் சிதறிக் கிடக்கும் விஸ்தாரங்களில் போய் உட்கார்ந்து கொண்டான்.

வெய்யில் அவனை அப்பளம் சுட்டது.

வெள்ளிக்கிழமை படையல்கள் வேகிக் கொண்டிருக்க, கோவிலைச் சுற்றி ஆட்கள் சிலும்பிக்கொண்டிருந்தார்கள்.

வெளிப் பிரதட்சிணம் செய்த ஓர் ஆசாமி அவனைச் சிறிது பார்த்துவிட்டு, இரண்டாவது சுற்றின்போது அவன் பக்கத்தில் வந்து சிநேகமாகப் புன்னகை செய்தான்.

"பூவலிங்கங்க! பாண்டித் தெருவிலே இருந்தேன்."

அவனது மானச உடல் இரண்டடி மேலே போய்க் கீழே விழுந்தது.

"அப்படியா? அப்படியா? யாருன்னு தெரியலியே!" குரு குட்டையைக் குழப்பிச் சொன்னான். பூவலிங்கம் நம்பிக்கையில்லாப் புன்னகை புரிந்தான்.

"திண்ணீறு பூசியிருக்கேனே! அடையாளம் தெரியாது. நீங்க கூட மாறிட்டீங்களே! பக்திமான் ஆயிட்டீங்க! நானும் மாறிட்டேன்! அந்த விஷயத்திலே ஐயாவுக்குத்தான் புண்ணியம் உண்டு. ஐயா மட்டும் போலீசிலே காட்டிக்கொடுக்காட்டி, நான் கடத்தல்லியே இருந்திருப்பேன். பணத்தைக் குடீலேயும், கூத்திலேயும் செலவழிச்சிருப்பேன். கடவுள்தான் ஐயா ரூவத்திலே வந்து காப்பாற்றினாருங்க! இப்போ கல்யாணம் கட்டி இந்த ஊர்க் கழனிலே வேலை பார்க்கிறேன். சம்சாரம் உண்டாயிருக்காங்க! ஊருக்குப் போயிருக்காங்க."

குரு குழம்பினான். வேஷம் பலிக்கவில்லை. எவ்வளவு எளிதாகக் கண்டுபிடித்து விட்டான்.

"இப்போ ஞாபகம் வருதுங்க! ஏதோ நடந்திடுத்து. மறந்துடுங்க! போலீசிலே உங்களை விட்டிருக்கமாட்டாங்களே!"

"மாட்டாங்கதான்! செலவழிச்சேன்! பத்து பச்சை நோட்டைத் திணிச்சப்புறத்தான் இன்ஸ்பெக்டர் - இந்த ஊர்லே தலை காட்டாதே, போன்னு வெளீல துரத்திட்டாரு. கேஸ் இல்லாமப் போச்சு!"

"இன்ஸ்பெக்டர்...." என்று சொல்லி குரு நிறுத்தினான். அவனுக்குத் தெரியாமல் அவரும் பல விதங்களில் சம்பாதித்திருப்பது ஒரு நியாயமில்லாத கோபத்தை உண்டு பண்ணியது.

"நல்லா சம்பாதிச்சாரு ஸார், அந்த இன்ஸ்பெக்டரு! ஆனா பத்தீங்களா? இவ்ளோ சம்பாரிச்சாரே, அநுபவிக்க முடிஞ்சுதா?"

"என்னாச்சு? அதானே!"

"தெரியாதுங்களா?"

"அசாமுக்கு மாத்திட்டானுங்க!"

"ஆமாங்க! மாத்தல் பண்ணினாங்க! அப்புறம் நடந்த விஷயம் தெரியாதா?"

"என்னாச்சு?"

"கல்கத்தாவிலே கார் விபத்துங்க! அவரும் சம்சாரமும் ஒரே நொடியிலே செத்துட்டாங்க."

குருவின் பார்வை உறைந்தது.

"நீ சொல்றது நிஜமா?"

"ஆமாங்க! இரண்டு வாரத்துக்கு முன்னாடி பேப்பர்லே வந்துச்சாமே? எனக்கு ஒரு ஏட்டையா சொன்னாரு! ரிடேர் ஆயிட்டாரு! நம்ப பக்கத்து ஊருதான் வல்லாங்குப்பம்! இப்போ வெவசாயம் செய்யறாரு."

"என்ன சொன்னாரு?"

"இந்தாடா பூலிங்கம். சீத்தாப்பதி இவ்ளோ சம்பாரிச்சாரே, அவரு போனப்புறம் அநுபவிக்க குழந்தை இல்லேடா! அவரு சித்தப்பாரு மவன் ஐ.ஜி-க்கு மனு கொடுத்திருக்காரு! சீத்தாப்பதிக்குச் சேர வேண்டிய தொகையெல்லாம் என்னண்டை கொடுத்திருங்கோன்னு! மனுசன் ஆடினாண்டா ஆட்டம்! கடைசீல கடவுள் ஒரு வாரிசு கூடக் கொடுக்காமல் போய்ட்டாருடான்னாரு! அவரு சொல்லித்தான் எனக்கு விஷயம் தெரியும், போங்களேன்!"

இன்னொரு படி குருவை யாரோ கீழே இறக்கினார்கள்.

அவனது சாட்சிகள் அழிந்து கொண்டிருந்தார்கள்.

இந்தச் சாட்சி எவ்வளவு பெரிய சாட்சி! எவ்வளவு முக்கியமானது! இந்தச் சாட்சி ஒரு வார்த்தை சொன்னால் போதும், எடுத்த கேஸ் தவிடு பொடியாகிவிடும்!

எழுதுவது
**புஷ்பா தங்கதுரை**

மார்பு அடைத்தது. கண்ணை மூடி உள்ளே ஆழத்தில் வேதனையை அநுபவித்தான்.

"சாமி கும்பிட வந்தீங்களா?"

"ஆமாம்பா!"

"இன்னிக்கு என் தம்பி சம்சாரம் பொங்கல் வக்குதுங்க! பிரசாதம் வாங்கிக்கிட்டுப் போங்க."

"சரி."

பொங்கலைச் சாப்பிட்டதில் சிநேகிதம் வலுத்தது. வீட்டுக்கு அழைத்துப் போனான். குருவுக்கு ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு பாமரத்தனம் உள்ளவனா அப்போது கள்ளத்தனத்தில் ஈடுபட்டிருந்தான்?


(துரோகம் துரத்தும்......)

# உலக எய்ட்ஸ் தினம்



கிளாரினட் வாத்தியக் கருவியில் கருத்தடை சாதனத்தை இணைத்து தமது கருவியை ஒருவர் இசைப்பதைப் படத்தில் காணலாம். கொலம்பியாவில் உள்ள பொகோடா நகரில் இடம்பெற்ற எய்ட்ஸ் தின பவனியின்போது இச்சம்பவம் நிகழ்ந்தது.

உலக எய்ட்ஸ் தினம் மாஸ்கோவில் டவுன்ஸ்டவுன் நகரில் அனுஷ்டிக்கப்பட்டபோது தபாலட்டைகளில் "சிறுவர்கள் எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்" என்று எழுதப்பட்டு தொகுக்கப்பட்ட பதாகையை ஏந்தியவண்ணம் எய்ட்ஸினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களும், சுகாதார ஊழியர்களும் ஊர்வலம் செல்வதைக் காணலாம்.





தாய்லாந்து பேங்கொக் நகரில் உள்ள 'பியதாய் குழந்தைகள் இல்லத்தில்' எய்ட்ஸ் நோயால் பீடிக்கப் பட்டு அநாதரவாக விடப்பட்டுள்ள தாய்லாந்து குழந்தைகள்தான் இவர்கள்.

## எய்ட்ஸ் பற்றி பாப்பரசர்....

" எய்ட்ஸ், துரதிருஷ்டவசமாக துரித கதியில் பரவும் ஒரு நோய் ஆகும். வறிய நாடுகளையே விசேடமாக இந்நோய் பீடிக்கிறது."

"இந்நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்காக நான் பிரார்த்தனை செய்கிறேன். அத்துடன் இந்நோய் தொடர்பான உதவிகளையும், தடுப்பதற்கான வழிவகைகளையும், தூய உள்ளத்தோடு இப்பணிக்காக உதவுபவர்களையும் வரவேற்பதோடு இப்பணியில் ஈடுபட்டுள்ள தேவாலயங்கள், சமூகப் பணியாளர்கள் அனைவருக்கும் எனது ஆசீர்வாதங்கள்."



பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் சென்.பீட்டர்ஸ் சதுக்கத்தில் உள்ள தமது வத்திக்கான் மாளிகை ஜன்னல் வழியாக மக்களுக்கு கையசைப்பதைக் காணலாம். எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ள சகல நோயாளர்களுக்கும் நடத்தப்பட்ட பிரார்த்தனைக் கூட்டத்தின்போதுதான் பாப்பரசர் தோன்றி ஆசீர்வதித்தார். பிரார்த்தனையே எய்ட்ஸ் தடுப்புக்கு உகந்த வழி என்பது வத்திக்கானின் கருத்தாகும்.

எய்ட்ஸ் நோயாளர்களின் நலனுக்கு நிதி சேகரிக்கும் முகமாக அடுத்த மாதம் நைஜீரியாவில் நடைபெறவுள்ள "நம்பிக்கையின் யுத்தம்" எனும் தலைப்பிலான மல்யுத்தப் போட்டி தொடர்பான பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடகர் ஜெர்மைன் ஜெக்ஸன் கலந்துகொண்டார். இவருடன் மல்யுத்த வீரர் முகமது அலியின் மகளான லைலாவும் இணைந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.








சீனாவில் ஷியான் நகரில் இலவச கருத்தடை சாதனங்களைப்பெற ஆண்கள் கூட்டம் முண்டியடிப்பதைக் காணலாம்.

## அழகிய வணக்கம்




தாய்லாந்து வழக்கப்படி இரு கை கூப்பி வணக்கம் கூறுகிறார் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பிரபஞ்ச அழகி ஜெனிஃபர் ஹாக்கின்ஸ். பேங்கொக்கில் சர்வதேச எய்ட்ஸ் மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கியதை முன்னிட்டு தாய்லாந்து வந்துள்ளார் ஹாக்கின்ஸ்.

18



# ஒரு பெண்ணின் வாழும் வரலாறு

## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்

**நா**ம் பல்கலைக்கழகத்தில் கற்கின்ற காலப்பகுதியில் கண்ணியமான பாதிரியாரான டொனல்ட் ஜோன்ஸ் என்பவர் எங்களுக்கு நான்கு வருடங்களாக – ஒரு கிறிஸ்தவ மகன், தன் சமூகத்தில் உள்ள பொறுப்புக்கள் மற்றும் சமூகத்தினை முன்னேற்றுவதில் தனது ஆளுமையை எவ்வாறு பயன்படுத்துவது என்பது



பற்றியும்; கிறிஸ்தவ மதத்தின் சிறப்பான போதனைகளையும் விளக்கினார். அவர் இதே காலப்பிரிவில் அமெரிக்க கடற்படை முகாமிலும் மத போதனையில் ஈடுபட்டிருந்தார். அத்தோடு சமூகத்தில் உள்ள நீதியான செயற்பாடுகள் மற்றும் மானிடத்தின் இயற்கையோடு ஒன்றிப்போகும் சீர்திருத்தங்கள் போன்றவை பற்றியும்; மானிட அபிவிருத்தியைக் கொண்டு செல்வது பற்றியும் பல்வேறு உதாரணங்களுடன் எமக்கு விளக்கமளிப்பார். ஒரு கிறிஸ்தவனுடைய உண்மையான வாழ்க்கை பற்றி அவர் கூறும்பொழுது, "இறைவனின் உறுதியான நம்பிக்கையும் அந்த நம்பிக்கையோடு கூடிய நற்செயற்பாடுகளும்தான்" என்று உபதேசிப்பார். நானும், பல்கலைக்கழக மெதடிஸ் தேவாலய கட்டளைகளைப் பின்பற்றுகின்ற எனது தோழிகளும் இதனால் மிகவும் பிரயோசனம் அடைந்தோம்.

எனது பல்கலைக்கழக வாழ்க்கை என்பது வெறுமனே அறிவியலையும், கலையையும் கற்கின்ற இடமாக மாத்திரமன்றி; மதரீதியாக ஆன்மீக வலுவையும் ஆத்மீகக் கல்வியின் பயன்பாட்டையும் முழுமையாக அடைந்து கொள்ளும் களமாகவும் இருந்தது. எனது தோழிகளுடன் குழுவாகச் சென்று சிக்காகோவில் உள்ள பல்வேறு தேவாலயங்களையும் தரிசித்து எமது மதக் கல்வியை மெருகூட்டிக் கொண்டோம். இது விடயத்தில் எனது தாய் தந்தையரும் கூட – மார்க்கக் கல்வியைக் கற்று வாழ்வின் ஆழத்தை, உண்மையை அறிந்து, உதவி செய்யும் தாராள மனப்பான்மையுடன் வாழ வேண்டுமென தொடர்ந்தும் வலியுறுத்தி வந்ததை இப்போது நினைவுபடுத்தாமல் இருக்கமுடியாது.

சிக்காக்கோவுக்கு நாங்கள் சென்றிருந்த வேளையில் அங்கிருந்த கிறிஸ்தவ தேவாலயத்தின் மத போதகர்கள், அவர்களுடைய நடவடிக்கைகள் அனைத்தையும் அவதானித்த பொழுது, எங்களுக்கு அவை புதிய அனுபவமாகவும், படிப்பினையாகவும் இருந்தன. அந்த தேவாலயத்தில் இருந்த பெருந்தகைகளும், சிஷ்யர்களும் எங்களைப் போன்று நல்லார்வமுடையவர்களாக இருந்தார்கள். அவர்களும் தென் அமெரிக்காவுக்கான 'சமூக உரிமைகள் அமைப்பு' என்று ஒரு பேரியக்கத்தை துவக்கியிருந்தார்கள். இது 'ரோசா பார்க்' எனுமிடத்தில் இருந்தது. இதன் முன்னோடியாக டொக்டர் மார்ட்டின் லூதர் கிங் இருந்தார்.



இவருடைய கருத்துக்களால் கவரப்பட்டவர்களுள் நானும் ஒருத்தி. நாங்கள் அங்கிருந்த வேளையில், ஒருவாரம் நாங்கள் அங்கு தங்கியிருக்க உள்ளதாக டொனல்ட் ஜோன்ஸ் அறிவித்தார். அத்துடன் டொக்டர் மார்ட்டின் லூதர் கிங்கினுடைய 'விசேட சொற்பொழிவு' ஒன்றுக்கு கூட்டிச் செல்வதாகவும் தெரிவித்தார். கிங்கினுடைய உரை ஒசெஸ்டா மண்டபத்தில் நடைபெறும் எனவும் எமக்கு அறிவிக்கப்பட்டது. அந்த விஷேட சொற்பொழிவில் கலந்து கொள்ள நான் மிக மிக ஆவலாய் இருந்தேன். எனது பெற்றோர்களும் அதற்கு அனுமதி தந்து விட்டார்கள்; ஆனால் எனது தோழிகள் சிலருக்கு அவர்களுடைய பெற்றோர்கள் அனுமதி வழங்கவில்லை.

*(இன்னும் வரும்...)*

---


***இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.***

***ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்தவைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களினூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.***

***ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங் களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகியுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.***

***19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத்துகிறது.***

## ஹிரோஸிமாவின் அழிவு



1945 ஒகஸ்ட் 06ம் திகதி ஜப்பானின் நேரப்படி காலை 8.00 மணிக்கு ஜப்பானில் உள்ள ஹிரோஸிமா நகரம் மீது 'எனோலாகே' என்ற பெயருடைய அமெரிக்கப் போர் விமானம் உலகின் முதலாவது அணுகுண்டை வீசியது.

ஹிரோஸிமா நகரில் 60 சதவீதப் பகுதிகள் கண்மூடித் திறப்பதற்குள் தரைமட்டமாகின. 80,000 மக்கள் நொடிப் பொழுதில் கொல்லப்பட்டனர். இன்னும் பல்லாயிரக்கணக்கானோர் படுகாமடைந்தனர்; அங்கவீனமுற்றனர்.

இப்போதும் அப்பிரதேசத்தில் பிறக்கின்ற குழந்தைகளில், இந்த அணுகுண்டுத் தாக்குதலின் மோசமான பிரதிபலிப்புகள் காணப்படுகின்றன.

## பேர்ல் துறைமுகம் மீது ஜப்பான் குண்டு வீச்சு

முதலாம் உலகப்போரின் பின்னரான காலப்பகுதியில்– ஜேர்மனியின் நட்பு நாடான ஜப்பான், அமெரிக்காவுக்குச் சொந்தமான ஹவாய் தீவில் உள்ள பேர்ல் துறைமுகத்தை 1941 டிசம்பர் 07ம் திகதி தாக்கியது.

இந்தத்துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 8 அமெரிக்கப் போர்க்கப்பல்களும், 200 விமானங்களும் ஜப்பானின் விமானத்தாக்குதலால் அழிந்தன. 3000 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர்.



இதன் காரணமாக, இதுவரை போரில் கலந்து கொள்ளாமல் மௌனமாக விலகியிருந்த அமெரிக்கா, போரில் குதித்தது. ஜப்பான் மீதும் ஜேர்மன் மீதும் போர்ப் பிரகடனம் செய்தார் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி றூஸ் வெல்ட் இருந்தும் தொடர்ந்து நடந்த போரில் ஜேர்மனிப் படைகளுக்கு தேல்விகளே தொடர்ந்தன.

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

## ஜே.ஆரின் தந்திரமும் கூட்டணியின் பலவீனமும்

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க முன்வர வேண்டுமென இத்தகைய சூழலில்தான் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தூது அனுப்பினார். தந்தை செல்வாவின் மருமகனும் அரசியலமைப்பு மற்றும் சட்ட விவகாரத்துறைப் பேராசிரியருமான ஏ.ஜே.வில்சன்தான் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்காகத் தூது சென்றவராவார். அதாவது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றியதுடன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான மு.சிவசிதம்பரத்தின் வங்கிக் கணக்குகள் தொடர்பாகக் கேள்விகளை எழுப்பி, ஒருபுறத்தில் சங்கடங்களை உருவாக்கிவிட்டு மறுபுறத்தில் ஏ.ஜே.வில்சன் மூலமாகத் தூது அனுப்பி அரவணைக்கும் முயற்சியில் ஜே.ஆர். ஜயவர்த்தனா ஈடுபட்டார். ஒரு கையால் அடித்துக்கொண்டே மறு கையால் அரவணைக்கும் தந்திரத்தை ஜே.ஆர். கடைப்பிடித்தார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் இக் குள்ளநரித்தனமான இராஜதந்திரத்துக்கு மக்கள் சக்தியைத் திரட்டிப் பதிலடி கொடுக்க முடியாத இக் கட்டான நிலையில் கூட்டணித் தலைவர்கள் இருந்தனர். நம்பிக்கை இல்லை என்று தீர்மானம் நிறைவேற்றிய பின்னர் பாராளுமன்றம் செல்லப் போவதில்லை என்று பிரகடனம் செய்வதற்கோ அல்லது ஜனநாயக பூர்வமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கோ திராணியற்றவர்களாகவே கூட்டணியினர் இருந்தனர்.

அத்துடன், அரசின் அராஜகமான போக்குகளுக்கு எதிராக மக்கள் சக்தியைத் திரட்டி வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தும் துணிவும் நம்பிக்கையும் கூடக் கூட்டணியினருக்கு இருக்கவில்லை. ஏனெனில், ஏற்கெனவே 1977இன் பொதுத் தேர்தலில் பெற்றுக்கொண்ட மக்கள் ஆணையான தமிழீழ தேசத்திற்கான அரசியலமைப்பு நகல் வரைபை உருவாக்கக் கூட்டணியினர் தயக்கம் கொண்டிருந்தனர். இந்தத் தயக்கத்தின் விளைவாகத் தமிழ் இளைஞர் பேரவைக்குள் கருத்து வேறுபாடுகள் வளர்ந்திருந்தன. அத்துடன் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு மனப்பூர்வமாக ஒப்புதல் வழங்கியதன் மூலமாக கூட்டணிக்குள்ளும் பிளவுகள் தலைதூக்கி இருந்தன. இவற்றைச் சமாளித்து கூட்டணியை ஒரே அமைப்பாகக் கட்டிக் காப்பதில் தலைவர்கள் சங்கடப்பட்டனர். அதேவேளை கூட்டணியினர் கிராம, பிரதேச, தொகுதி மற்றும் மாவட்ட மட்டங்களில் கிளை அமைப்புக்களைப் பலம் பொருந்திய நிலையில் பேணவில்லை. அவ்வப்போது தேர்தலுக்காக மட்டும் சென்று சமூக, பொருளாதார, செல்வாக்குகளையும், உணர்ச்சி ஊட்டும் மேடைப் பேச்சுவன்மையையும் பயன்படுத்தி தேர்தல்களில் வெற்றி பெறுவதே கூட்டணியினரின் நிலைப்பாடாக இருந்தது. இதனால் தலைமை அரசியல் நெருக்கடிகளைச் சந்தித்தபோது அதனைப் பாதுகாக்கும் நோக்குடன் களம் இறங்கக் கூடிய தொண்டர் பலம் கூட்டணிக்கு இருக்கவில்லை. கூட்டணித் தலைவர்களின் இப் பலவீனத்தை நன்கு புரிந்துகொண்டிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, தலைவர்களின் சொந்தத் தேவைகளையும் சுயநல எண்ணங்களையும் பூர்த்தி செய்து திருப்திப படுத்துவதில் வெற்றி கண்டு வந்தார்.

**இணைந்து எழுதுவது**
**த.சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

ஜே.ஆரின் தூதுவராகத் தேடிச் சென்ற ஏ.ஜே.வில்சனிடம் அமிர்தலிங்கம் பின்வருமாறு முறைப்பட்டார். நீங்கள் இலங்கையில் தங்கியிருக்கும்போது மட்டும்தான் ஜே.ஆர்.இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து அக்கறைப்படுகின்றார். நீங்கள் இங்கிருந்து போனதும் அவர் அதை மறந்துபோய்ச் செயற்படுகின்றார். இது அமிர்தலிங்கத்தின் முறைப்பாடாக இருந்தது. இதனை ஜே.ஆர். ஜெயவர்த்தனாவிடம் வில்சன் எடுத்துரைத்தார். அத்துடன் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா உட்பட சிரேஷ்ட அமைச்சர்களைக் கொண்ட குழுவொன்றை அமைக்கும்படி ஆலோசனை கூறினார். இந்தக் குழு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்களைக் கொண்ட குழுவுடன் அடிக்கடி கலந்துரையாட வேண்டுமெனவும், இதன் மூலமாக பரஸ்பரம் புரிந்துணர்வை வளர்த்து பிரச்சினைக்குத் தீர்வு காணலாமெனவும் ஏ.ஜே.வில்சன் கருதியிருந்தார். சர்ச்சைக்குரிய விடயங்களைப் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிப்பதை விட இக் குழுவினர் தமக்குள் கலந்துரையாடி, கருத்துப் பரிமாறித் தீர்வு காணலாம் என்பது ஏ.ஜே.வில்சனின் அறிவுரையாக இருந்தது. இந்த அறிவுரையை இரு தரப்பினரும் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டனர். இந்த அறிவுரைக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு முன்பாக இரு வெவ்வேறு சம்பவங்கள் நடந்து முடிந்தன. அதனால் கொள்கையளவில் காணப்பட்ட இணக்கம் நடைமுறைக்கு வராமலேயே காலம் கடந்தது. அந்த இரு வெவ்வேறு சம்பவங்கள் பற்றியும் இங்கு குறிப்பிடுவது அவசியம். உமாமகேஸ்வரன் தலைமையிலான குழுவினர் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் மீது 1981 ஆகஸ்ட் 27இல் நடத்திய தாக்குதல் அவற்றில் முதலாவதாகும். தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளை உறுப்பினராக அரசியலில் அறிமுகமான உமா மகேஸ்வரன் பொலிஸாரால் தேடப்படும் நிலை ஏற்பட்டபோது தலைமறைவானார். பின்னர் புலிகளின் உறுப்பினராகி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு வடிவம் பெற்றபோது அதன்

### 69 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

மத்திய குழுவுக்குத் தலைவரானார். 1976இல் ஈரோஸ் இயக்கத்தின் அனுசரணையுடன் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அல்பதா பிரிவிடம் ஆயுதப் பயிற்சி பெற்ற உமா மகேஸ்வரன், 1980இல் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தை தாபித்தார். இவரது தலைமையிலான குழுவினரே ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலை நடத்தியிருந்தனர். இந்தத் தாக்குதலில் பொலிஸ் கான்ஸ்டபிள்களான நசீர், ஜயரத்னா, குருசாமி மற்றும் பந்துலசேன ஆகியோர் கொல்லப்பட்டதுடன், பொலிஸ் நிலையத்திலிருந்த ஆயுதங்களும் அபகரிக்கப் பட்டிருந்தன.

இத் தாக்குதலின் எதிரொலியாக இரத்தினபுரி, பலாங்கொட, காவத்தை போன்ற இடங்களில் வெடித்த இனக் கலவரம் இரண்டாவதாகும். ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலில் கொலையுண்ட பந்துலசேனன் பூதவுடல் அவரது சொந்த இடமான இரத்தினபுரிக்குக் கொண்டுவரப்பட்டது. இதனையடுத்து இப் பகுதியில் இருந்த தமிழர்களுக்குச் சொந்தமான கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. தமிழர் வீடுகள் சேதமாக்கப்பட்டன. தமிழர்கள் பலர் தாக்கப்பட்டனர்.

**ஒரு கையால் அடித்துக்கொண்டே மறு கையால் அரவணைக்கும் தந்திரத்தை ஜே.ஆர். கடைப்பிடித்தார்.**

பொலிஸாரும் இராணுவத் தினரும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் ஒரு தலைப்பட்சமாக நடந்துகொண்டனர். இந்த அசம்பாவிதங்கள் நடந்து முடிந்து இரு வாரங்கள் கழிந்த பின்னரே ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா இப் பகுதிகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். வன்செயல் காரணமாக ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டார். மலையகத்தைச் சேர்ந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட அவல நிலைமைகளைக் கண்டார். தோட்டத் தொழிலாளர்களான பலரும் கண்ணீர் மல்கத் தமது அநுபவங்களை எடுத்துரைத்தனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரான தொண்டமான் அமைச்சரவை உறுப்பினராக இருந்தபோதும் தமக்குப் பாதுகாப்பான நிலை இல்லை என்பதை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கு உணர்த்தினார்.

இந்தக் கண்ணீர்க் கதைகளைக் கேட்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சிங்களவர் என்ற வகையில் வெட்கப்படுவதாகவும், ஏழைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு சிங்களவர்களால் இழைக்கப்பட்ட கொடுமை கண்டு வேதனைப்படுவதாகவும் பகிரங்கமாக எடுத்துரைத்தார். தனது ஆட்சியில் இப்படி நடந்துவிட்டமைக்காகக் கவலைப்படுவதாகவும், இதனால் தான் பெரும் மனச் சங்கடத்துக்கு உள்ளாகியிருப்பதாகவும் கூட அவர் கூறியிருந்தார். ஆனாலும் என்ன.....?

(தொடர்ந்து வடியும்....)




**வணக்கம்! வணக்கம்! வணக்கம்!!!**

"போன வாரம் மிகவும் ஏடா கூடமான வாரமாக இருந்தது. சின்னவருக்குப் படு குசியாக இருக்கும், மன்னவரின் நாக்கைப் பிடுங்கி எடுப்பதற்கு. பாவம் மன்னவர்" என்று எனக்காகக் கவலைப்படும் நெஞ்சங்களுக்கு மன்னவரின் நன்றிகள். சரி சின்னவரே போட்டு தாக்கும்..........

**சின்** :- மன்னவரே! முதல் கேள்வியிலேயே உங்கட மூக்கை உடைக்கமாட்டன். நடுங்காதையுங்கோ.....யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில உரிமைப் போராட்டம் நடத்திற மாணவிக்கு சக மாணவர்களும் ஆதரவு தந்திருக்கினமே!

***மன்*** *:- அப்பாடா! இது புயலுக்குப் பிந்திய அமைதியாக்கும்....ம்...சரி..கொஞ்சக் காலமாக அரசியலில படு பிஸியாக இருந்த பிள்ளையள் இப்பதான் கண்ணாடியைப் பாத்திருக்கினம் தாம் தங்கட போராட்ட சக்தியை பாவிக்க வேண்டிய இடத்தை தெரிஞ்சிருக்கினம்.*

**சின்** :- என்னவோ இனியாகிலும் ஏகம், தேசியம் எண்டு கொடி பிடிக்காமல் ஒழுங்குப் படிச்சால் சரிதான். அடுத்த கேள்வி இது. வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் கிளிநொச்சியில திறக்கப்பட்டுள்ளதே!

***மன்*** *:- தேவையான செயலகம்தானே. அதை எங்கை திறந்தா என்ன? இதில என்ன சந்தேகப் பார்வை.....ஓ.....எல்லா மனித உரிமை மீறலையும் தம்பிமாரே செய்வினமே...அவையளின்ர பகுதிக்குள்ளயே இருந்துகொண்டு எப்பிடி உண்மையைச் சொல்லப் போகினம் எண்டு சந்தேகப் படுகிறீரோ. புதுக்குடியிருப்புக்குப் போன எந்த வெளி அமைப்புக்கும் இடம் கொடுக்காத தம்பிமார், இதைத்தன்னும் திறக்க விட்டிருக்கினமே. இதை நினைச்சுச் சந்தோசப்படுங்கோ.*

**சின்** :- ம்......ம்...திருடனுக்கு விதானை வேலை குடுத்த மாதிரித்தான் இருக்கப் போகுது. சரி அடுத்த கேள்வி. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு இலக்கு வச்ச தற்கொலைக் குண்டுதாரியின்ர குண்டு பொலிஸில வெடிச்சிருக்கே....மன்னவரே பதிலை மழுப்பாமல் சொல்லுங்கோ.....

***மன்*** *:- எந்தக் கேள்வி முதல் வருமெண்டு பயந்தனோ அது வந்திட்டுது. சின்னவரே மழுப்ப வேண்டிய தேவை எனக்கில்லை. அமைச்சர் டக்ளஸ் குறிவைக்கப்பட்டது உண்மை. இது முதல்முறையுமில்லை. அது தொடருது. மற்ற ஊடகங்கள் சொல்லுறது போல டக்ளஸோ, வேறு யாருமோ திட்டமிட்டுச் செய்யேல்லை. அந்த வல்லமை அவையளுக்கு இல்லை. கிட்டத்தட்ட 240 பேரை இப்பிடிச் சிதறி வெடிக்க வச்ச தம்பிமார்தான் இதையும் செய்திருக்கினமெண்டு நினைக்கிறன். இதையே பி.பி.சி. செய்தியாளர் பிரான்சிஸ் ஹரிசன் தெரிவிச்சிருப்பதை விளங்கிக் கொள்ளும்.*

**சின்** :- மன்னவரே உம்முடைய துணிச்சலுக்கு சபாஷ்....தினப்பத்திரிகை ஒண்டு தற்கொலைக் குண்டு வெடிப்பை அமெரிக்கா கடுமையாக் கண்டிச்சிருக்கிறதை சின்னதாகவும் கிழக்கு வன்முறைகளைத் தடுக்க வேணுமெண்டதைப் பெரிசு படுத்தியும் தலைப்புப் போட்டிருந்ததே....

***மன்*** *:- கிழக்கு வன்முறைகளைத் தடுக்கச் சொன்னது அரசுக்கான வேண்டுகோள். அதைப் பெரிசாத்தானே போட வேணும். புலிகளை அமெரிக்கா கண்டிச்சிருக்கிறதை பெரிசாப் போட ஏலுமே.... அமெரிக்காவுக்குத்தான் புத்தியில்லை எண்டா எங்கட தேசப் பற்றாளர்களுக்கும் புத்தியில்லை எண்டே நினைக்கிறீர்.*

**சின்** :- வாழ்க இலங்கை ஊடக அதர்மம். அடுத்தது மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் எதனை உணர்த்துது?

***மன்*** *:- பாராளுமன்றத்தில பெரும்பான்மையை நிரூபிக்க ஏலாத அரசு மீது மக்களுக்கிருக்கிற நம்பிக்கையை நிரூபிச்சிருக்குது. இப்ப தெரியுதோ, மக்கள் என்ன நினைக்கினம், மக்களின்ர பிரதிநிதிகள் என்ன நினைக்கினமெண்டு? மனசாட்சியை ஏமாத்தினாலும் மக்களை ஏமாத்த ஏலாது.*

**சின்** :- அதெல்லாம் சரி. எங்கட தன்மானத் தமிழன் தலைநகர் வாழ் தமிழ் மக்களின் பாதுகாவலன் மகேஸ்வரன் நாட்டை விட்டுப் போயிட்டாரே.......?

***மன்*** *:- சாதகப்படி அவருக்கு நேரம் சரியில்லை. அவருக்கு நாக்கில சனி பிடிச்சிருக்கு....அவரை நம்பி வாக்களிச்ச மக்கள் வெட்கப்பட்டுக்கொள்ளட்டும். உயிருக்கு ஆபத்தெண்டு நாட்டை விட்டுப் போக வெளிக்கிட்டால் இலங்கையில இருந்து எல்லாருமெல்லோ போக வேணும். எந்த எம்பஸி விசாக் குடுக்கும்? அப்பிடிப் பார்க்கேக்க அமைச்சர் டக்ளஸ் பாராட்டப்பட வேண்டியவர்தான்...என்ன..... பாராட்ட மனசு துடிக்குது..... உதடு தடுக்குது. நானும் பெஞ்சாதி பிள்ளையளைப் பாக்க வேணுமெல்லோ.*

**சின்** :- மன்னவரே ஏன் நடுங்குறீர்? செத்துச் செத்து வாழிறதை விடவும் வாழ்ந்திட்டுச் சாகிறது மேல். அடுத்த கேள்வியைப் பாரும். பயங்கரவாதத்தத் தேடி அழிக்கிற நாடுகளுக்கு கொள்ளுப்பிட்டியில நடந்த தற்கொலைத் தாக்குதல் கூறும் செய்தி என்ன?

***மன்*** *:- என்னப்பா சித்திரவதையான கேள்வியாக் கேக்கிறீர். இந்தக் குண்டு வெடிப்பையும் பயங்கரவாத நாடுகைளயும் எதுக்கடாப்பா முடிச்சுப் போடுறீர். அமெரிக்க, பிரிட்டிஷ் எம்பஸிக்கு முன்னாலயே குண்டை வெடிக்க வைச்சு நாலுபேரைக் கொண்டு பத்துப் பேரைக் காயப்படுத்தியிருக்கினமெண்டால் உந்த நாடுகளின்ர நடவடிக்கைகளுக்கெல்லாம் தம்பி பயப்படேல்லை எண்டுதான் அர்த்தம். அமெரிக்காவால என்ன புடுங்க முடியும்? வந்தாத் தெரியும் வன்னியான் அடி....எங்களுக்கு கெரில்லா யுத்தம் தெரியுமெண்டதை உலக நாடுகள் புரிஞ்சு கொண்டாச் சரி எண்டுதான் சொல்லுது.*

**சின்** :- ஆஹா....ஈராக்கை மாதிரி இலங்கையையும் அடிக்கலாம் எண்டு நினைச்சுப் போட்டியளாக்கும். மன்னவரே இலங்கை வானொலியின்ர தேசிய சேவையில பின்நேரம் 5 மணிக்குத் தொடங்கி ஏழு மணி வரைக்கும் ஒலிபரப்பப்படுகிற ரி.பி.சி. ஒலிபரப்பை நிறுத்தச் சொல்லி உங்கட தம்பிமார் ஒற்றக் காலில நிற்கினமே.

***மன்*** *:- ஒற்றைக் காலில நிற்கிறதப் போய்ப் பார்த்தனீரோ? கேட்கிறார் கேள்வி. அந்த ஒலிபரப்பு முழுக்க முழுக்க தமிழ் தேசியத்திற்கு விரோதமான செய்தியத்தான் சொல்லுது. இலங்கையில எல்லா ஊடகங்களையும் தேசியத்தின்ரபக்கந் திருப்பியாச்சுது. இது மட்டும்தான் தலையிடியாக் கிடக்கு. ஒண்டை மட்டும் தெளிவாச் சொல்லிறன். சமாதானத்தை விரும்பாதவைதான் தம்பிமார் செய்யிற விஷயங்களை வெளியால சொல்லினம். இவை ஒருத்தரும் தன்மானத் தமிழரில்லை. தமிழன் காட்டிக்கொடுக்கமாட்டான்.*

**சின்** :- அட டா..... தன்மானம் த்கதிமி ஆடுதுடோ. கூல் டவுன் கூல் டவுன். மன்னவரே! இந்தியாவில சிவாஜி கணேசன்ர வீடு தீப்பிடிச்சதெண்டும் உடனடியாகவே கமல்ஹாசன் போய் ஆறுதல் சொன்னாரெண்டும் செய்தி வந்ததே.

***மன்*** *:- ஆஹா இது கேள்வி....சின்னவரே. அடிக்கடி மேடைகளில சிவாஜிக்கு மூத்த பிள்ளை தான் எண்டு கூறி வாறவ. கமலஹாசன். அப்பிடியிருக்க இந்தச் சம்பவத்தைக் கேட்டு கமல் பதறிப்போனது நியாயம்தானே.*

**சின்** :- அப்பாடா.... ஆள் கடல் ஆயிட்டார். மன்னவரே கடைசிக் கேள்வி. இந்த வாரம் முரசு சினிமா விமர்சனம் செய்யல்லையே.

***மன்*** *:- அட இப்பதாண்டாப்பா நல்ல நல்ல கேள்வியாக் கேக்கிறாய். அது அடுத்த வாரம் 'நியு' படத்தைப் பற்றி விலா வாரியா சொல்ல இருக்கினம்....*

*'வாலி', 'குஷி' படங்களை இயக்கி வெற்றியடையச் செய்த எஸ்.ஜே.சூர்யா இயக்கி நடிச்சிருக்கிற 'நியு' படம் சிறுவர்களையும், இளசுகளையும் தாய்மார்களையும் கவரக்கூடிய வகையில நல்லா வந்திருக்கு. ஓடும் எண்டு எதிர்பாக்கிறன்.*

*இன்னொரு விசயம். நேரம் கிடைச்சா 'டே ஆப்டர் ருமாறோ' எண்டொரு ஆங்கிலப் படம் வந்திருக்கு. அதைப் பாரும். பிரமாண்டம்....... பிரமாண்டம்....... பிரமாண்டம். சாக முதல் ஒரு நல்ல சினிமா பாத்த மாதிரியும் இருக்கும். ஓகே.....*

**மன்னவரும் - சின்னவரும்**

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்

# நெஞ்சினில் என்ன காயமோ...? 65

### மனச்சிதைவு நோய் (Schizophrenia)

கல்யாணி 23 வயதுடைய இளம் யுவதி. 5 வருடங்களுக்கு முன் வரை இவள்தான் வகுப்பில் முதல் பிள்ளை. மிகுந்த சுறுசுறுப்புடன் பாடசாலையில் அனைத்து நடவடிக்கையிலும் ஈடுபடும் இவள், வீட்டிலும் பெற்றோரின் மனம் கோணாதபடி தனது பொறுப்புகளையும் கடமைகளையும் செவ்வனே செய்து வந்தவள்.

இன்று வீட்டின் ஓர் ஓரமாக வெறித்த பார்வையுடன் இருக்கும் இவளை அடையாளம் காண்பது என்பது மிகவும் பழக்கமானவர்களுக்குக் கூட சிரமமாக இருக்கலாம். இந்த மாற்றங்கள் அவள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிக்கொண்டு இருக்கும்போதே நிகழ்ந்தன. மற்றோருடன் அதிகம் கதைக்காது

## உள மருத்துவம்

தனித்திருக்கத் தலைப்பட்டாள். சுகாதாரம் குறித்து அவளது கவனம் குறைந்தது. சந்தோசத்தை தொலைத்தவளாக எந் நேரமும் கவலையுடன் காணப்பட்டாள். ஆரம்பத்தில் பரீட்சை தொடர்பான மாற்றங்களாகப் பெற்றோர் கருதிய பொழுதும் பின்னர் ஏற்பட்ட நடத்தை மாறுபாடுகள் அவர்களைக் கலங்கச் செய்தன. அவள் அடிக்கடி கோபப்படவும், சண்டை பிடிக்கவும், ஏசவும் ஆரம்பித்தாள். அயலவர்கள் தனக்கு சூனியம் செய்து கொல்லப் பார்க்கிறார்கள் எனக் குற்றஞ் சாட்டினாள். அத்துடன் தனது

> உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாக காணப்படும் இன்றைய காலகட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றுக்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே மேற்படி உள மருத்துவத்துறையில் அநுபவம் பெற்றவர்களும் நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த. கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ். எம்.டி உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு. தி. சுவீந்திரன் பி.ஏ (உளவியல்) எம்.பில். உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களை பகிர்வர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

நடவடிக்கைகளை தொடர்ந்தும் அவர்கள் கவனித்து வருவதாகவும் அதற்கு வீட்டாரும் உடந்தை எனவும் நம்பினாள். அவள் சில வேளைகளில் உணவு நஞ்சு ஊட்டப்பட்டிருக்கிறது எனக் கூறி உணவைச் .சாப்பிட மறுத்த சந்தர்ப்பங்களும் உண்டு. சில வேளைகளில் அம்மாவை உண்ணச்செய்து பின்புதான் உணவுண்ணுவாள். வீட்டுக்கு வெளியே செல்வதைத் தவிர்த்தாள். சில சமயங்களில் தனியே கதைக்கவும் காரணமின்றிச் சிரிக்கவும் ஆரம்பித்தாள்.

ஒருநாள் இரவு திடீரென கத்தியொன்றை எடுத்துக்கொண்டு அயல் வீட்டிற்குச் செல்ல முனைந்தபொழுதுதான் அவளின் நோயின் தீவிரத்தைப் பெற்றோரால் அறிய முடிந்தது. இதன் பின்னர் அவள் உள மருத்துவத்துறையில் அனுமதிக்கப்பட்டு அவளின் மனச்சிதைவு நோய் குணமாகிய போதும், மருந்துகளைத் தொடர்ந்து முறையாகப் பாவிக்காததால் கடந்த 5 வருடங்களில் 3 முறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். இந் நோயினால் அவளது படிப்பு சீர்கெட்டு, செயற்றின் குறைவடைந்தது. சிறகடித்து பறந்த அவள், சிறையிலிருக்கும் ஒருவரைப் போலானாள்.

### மனச்சிதைவு நோய் என்றால் என்ன? (Schizophrenia)

மனச்சிதைவு நோய் என்பது பாரிய உளநோய்களில் ஒன்றாகும். இது "உளப்பிளவு நோய்" என்றும் அழைக்கப்படும். மற்றோரால் எளிதில் அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய, பைத்தியம், விசர் என்று அழைக்கக்கூடிய நோயாளிகளில் பலர் மனச்சிதைவு நோயினாலேயே பாதிக்கப்பட்டுள்ளனர்.

(தொடரும்)

# ரங்கராட்டின மனசு

நான் நடத்துகிற லை∴ப் புரோகிராம் ஒன்றின்போது, அதில் கலந்து கொண்டவர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டேன். "உங்களில் எத்தனை பேருக்கு ரங்கராட்டினத்தில் சுற்றிய அநுபவம் உண்டு?" பலரும் கையை உயர்த்தினார்கள். ஒருவரைக் கேட்டேன் "உங்கள் அநுபவம் எப்படி?" அவர், "பிரமாதம்! ரங்கராட்டினத்தில் ஏறி அமர்ந்து அது சுற்ற ஆரம்பித்தவுடன், நான் ஒரு சிறுவனைப் போல உணர்ந்தேன். ஒவ்வொரு தடவையும் கீழே இருந்து மேலே செல்கிறபோது ஒரு விதமான வேடிக்கை என்றால், மேலே இருந்து கீழே இறங்குகிறபோது இன்னொரு விதமான வேடிக்கை, ரங்கராட்டினம் சுற்றிய ஒவ்வொரு விநாடியும் என்னால் இரசிக்க முடிந்தது. அது ஒரு இனிய அநுபவம்" என்றார். அவர் சொல்லி முடித்தபோது 'அந்த மகிழ்ச்சியில் இன்னமும் கொஞ்சம் அவரது மனதில் மிச்சமிருக்கும் போல இருக்கிறதே' என்று நினைக்க வைத்தது. "உங்கள் அனைவருக்கும் இதே போன்ற சந்தோசம் கிடைத்ததா?" என்று நான் கையை உயர்த்தியவர்களைப் பார்த்துக் கேட்டேன். ஒருவர், "ஐயோ! ரங்கராட்டினம் சுற்றுவதைப் போல ஒரு கொடுமையான விசயம் இருக்க முடியாது. கீழிருந்து மேலே செல்லும்போது வானத்தில் தூக்கி எறியப்பட்ட உணர்வு. மேலே இருந்து கீழே வருகிறபோது, தலை குப்புற கீழே வீசி எறியப்பட்டது போன்ற உணர்வு. ரங்கராட்டினம் சுழல ஆரம்பித்த மறு விநாடியே, 'நாம் தவறு செய்துவிட்டோம். இதில் ஏறி இருக்கவே கூடாது' என்ற எண்ணம்தான் எனக்கு ஏற்பட்டது" என்றார்.

இரண்டு பேரும் தமக்கு ஏற்பட்ட அநுபவத்தினைத்தான் கூறினார்கள். பொய் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இதில் யார் சொல்லுவது சரி? நீங்கள் உங்கள் அநுபவத்தின் பேரில், யாராவது ஒருவரது கருத்துச் சரி என்று சொல்லக்கூடும். ஆனால், என்னைக் கேட்டால், 'இரண்டுமே சரிதான்!' என்றே சொல்லுவேன்.

ஆனால் ஒன்று ரங்கராட்டினம் சுற்றுவதைக் கொடுமையான அநுபவம் என்று நினைப்பவர், மன உறுதியுடன் இருந்தால், அதை சந்தோசமான ஒரு அநுபவமாக மாற்றிவிட முடியும்.

(தொடரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி 78

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | | 7 | | 8 |
| 9 | 10 | 11 | | 12 |
| 13 | 14 | 15 | 16 | |
| 17 | | | 18 | 19 |
| | 20 | 21 | 22 | 23 |

### இடமிருந்து வலம்

1) எம்.ஜி.ஆர். நடித்த ஒரு படம் (ஒரு பறவையின் பெயர்)
9) தமிழர் விரும்பியுண்ணும் ஒரு உணவு வகை. (குழம்பியுள்ளது).
13) அவதூறு சொல்பவர்களை பேச்சுத் தமிழில் இந்த பேர்வழிகள் என்று சொல்வார்கள் (குழம்பியுள்ளது)
18) பழைய நீட்டலளவையில் ஒன்று.
20) ஈரூடக பிராணிகளில் ஒன்று. இதன் இறைச்சி மிகச் சுவையானது. (குழம்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

1) மன்னாரின் பெருநிலப்பரப்பு புராதன காலத்தில் இப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டது.
3) சமையலறையிலிருக்கும் மிக முக்கியமானது (குழம்பியுள்ளது)
5) வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் கடலுணவுப் பொருட்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
10) புலிக்கு இப்படியும் ஒரு சொல் உண்டு.
16) திராவிட கழகம் வெளியிடும் ஒரு சஞ்சிகையின் பெயர். (குழம்பியுள்ளது)
19) ஆணிவேர் இல்லாத ஒரு தாவரம். மாடு விரும்பி உண்ணும். (தலைகீழாக உள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல.76க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

திருமதி.எஸ்.திலகம், என்பீல்ட் தோட்டம், டிக்கோயா.

| பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள். |
|---|
| எம்காயத்திரி, 64/9, லக்கி ஒழுங்கை, ரத்தோட்டை வீதி, மாத்தளை. |
| கே.இராஜகோபால், அடைக்கலம் தோட்டம், வட்டுக்கோட்டை. |
| தாரணி.மூர்த்தி, 85/14, பொக்குன வீதி, ஹெந்தல, வத்தளை. |
| முனியாண்டி தவராஜன், 1/8, காளி கோவில் வீதி, மடுல்சீமை. |
| ரபீக்கா முஹம்மது, யூசுப் ஜான், இல 31, கல்லூரி வீதி, திருகோணமலை. |
| எம்.சுந்தரேசன், 49, நர்சிங்ஹோம் வீதி, ஹட்டன். |
| சலுஜா முருகையா, மட்டக்களப்பு, பெரிய கல்லாறு 0 2, |
| வளர்மதி மூர்த்தி, இந்தஹென எஸ்டேட், நமுனுகுல. |
| ஆயிஷா பாரூக், 216 2/1, அழுத்மாவத்தை வீதி, கொழும்பு - 15. |
| எம்.செப்மாலை, 65/3 நீதிமன்ற வீதி, திருகோணமலை. |

### குறுக்கெழுத்துப் போட்டி 76 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ப | 2 க | 3 ல | 4 வ | 5 ன் |
| 6 ட் | | 7 ன் | | 8 மா |
| 9 ட | 10 ன் | 11 வே | | |
| 12 ம் | | | | 13 ச |
| | 14 தூ | 15 வா | 16 ன | 17 ம் |
| 20 ள | 19 து | 20 சி | | 21 ன |

## போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 21.07.2004க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

**குறுக்கெழுத்துப் போட்டி இல-77**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ. இல - 1772,**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

**சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.**


# ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

## வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லாவிதமான,ஆண்கள்,பெண்கள்,குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சயபாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஓரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**
377,379A,Galle Road,Wellawatta,Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel:2364792

Branch:
No,33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் — மகளிர் மட்டும்


59

பெயர்:- ..............................
முகவரி:- ..............................
..............................................
தொழில்:- ..............................
கையொப்பம்:- ..........................



* ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
* மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா)
* ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: **21-07-2004**

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர்,த.பெ.இல-1772,
கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு சேலை? 50
## செங்கலடி வாசகிக்கு அதிர்ஷ்டம்!

**இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்**

**இந்துமதி வடிவேல்**
**5, ஏறாவூர், செங்கலடி.**

பரிசு பெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்த வாரம் யாருக்கு? ஒரு வாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா. இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசுபெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்ற பின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# இவ் வாரச் சிறுகதைகள்

# பாச மலர்கள்



திறந்திருந்த சாளரத்தினூடு ஊடுருவிய காலைக் கதிரின் கிரணக் கீற்றுக்கள் வதனியின் நெற்றிப் பொட்டில் விழுந்தபோது தான் விடிந்துவிட்டதை அவள் உணர்ந்து கொள்கின்றாள். இவ்வாறுதான் ஒவ்வொரு நாளும் இரவின் ஆரம்பப் பகுதியில் இதயம் அமைதி பெற மறுத்து, சிந்தனைக் கடலில் மூழ்கி, தூக்கமின்றித் தவித்திருந்து அவளை யறியாமலேயே இரவின் பிற்பகுதியில் உறங்கிப்போவாள். இவ்வாறு சூரியக் கதிர்கள்தான் அவளைத் தட்டியெழுப்பிவிடும். மணி ஆறரை ஆகிவிட்டதை அருகேயுள்ள பழனி கோயிலின் மணி உறுதிப்படுத்த, அலுப்புடன் புரண்டு படுத்துக்கொண்டாள். அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால், பக்கத்து வீட்டிற்குக் கேட்கும் அளவிற்கு அவளது தாயார் பெயர் கூறி எழுப்பும் இம்சை குறைந்திருந்தது. அவளது எண்ணப் பறவைகள் கடந்தகால நினைவுகளை நோக்கி படிப்படியாகப் பறந்து சென்றன.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேலென்ற வயல்களினையும், மையத்திலே பிள்ளையார் கோயிலினையும், அதனருகே ஒரு தாமரைக் குளத்தினையும், வயல் களைச் சூழ ஓங்கி வளர்ந்த காடுகளையும் பிரதான போக்குவரத்துப் பாதையினையும் கொண்டதுதான் அவளது கிராமம். ஆமாம், அதுதான் சரசாலை. இவ்வூரின் பெயருக்கு மக்கள் பல்வேறுபட்ட காரணங்களைக் கூறுவர். எனினும் இராவணனைக் கொல் வதற்கு இராமன் சரம் தொடுத்த இடமே சரசாலை எனும் கருத்து கல்விமான்களி டையே நிலவி வருகின்றது. ஊரிலே பெரும்பான்மையானோர் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். அத்தகைய ஒரு குடும்பத்தில் நான்கு அண்ணன்மார்களுக்கு பிரியமான தங்கையாக வதனி பிறந்தாள். வாழ்க்கை யிலே எவரும் அநுபவிக்க முடியாத இன்பத்தை அவள் இப் பிறப்பின் மூலம் பெற்றுக்கொண்டாள். அவளுக்கு நான்கு வயதாக இருக்கின்ற காலப்பகுதியில் காலத்தின் சதியினால் இரண்டாவது அண்ணா வெளிநாட்டிற்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பிரிவு என்றாலே என்ன என்று தெரியாத அந்தப் பச்சிளம் பருவத்தில் அண்ணன் அவளைப் பிரிந்து சென்றது பெரிதாகப் பாதிக்க வில்லை. ஆனால், நாளாக நாளாக அதுவே அவள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தி அழியாத வடுவாக மாறிவிட்டது. குழந்தைப் பருவத்தில் கையைப் பிடித்தபடி உலா வருவதும், உணவூட்டிவிடுவதும், ஈருடலும் ஓருயிருமாக வாழ்ந்ததும் மின்னலைப் போலத் தோன்றி மனதை ரணமாக்கிக் கொண்டிருந்தன.

காலச்சக்கரம் யாருக்காவும் காத்திருப் பதில்லையல்லவா? தொடர்ச்சியான இடப்பெயர்வுகள் நடைபெற்று, அதன் பின் மீண்டும் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பி மகிழ்ச்சியாக வாழ்க்கையை ஓட்டிக்கொண்டி ருந்தார்கள். அப்போது போக்குவரத்துப் பிரச்சினைகளாலும் இன்னும் பல நெருக்கடிகளினாலும் அவர்கள் நகரத்திற்கு வர வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் மீண்டும் சாவகச்சேரியில் குடியேறினார்கள். இவ்வேளையில்தான் வதனியின் மூன்றாவது அண்ணா பொறியியலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அவளுக்கு அண்ணனைப் பிரிகின்ற அடுத்த பேரிடி கலக்கத்தைக் கொடுத்தது. கண்களால் கண்ணீர் குறைவின்றிச் சொரிய எவ்வளவோ துன்பத்தின் மத்தியில் விடைகொடுத்து அனுப்பினாள். அதன் பின் மீண்டும் இடப்பெயர்வுகள் ஏற்பட, வலிகாமத்திற்குச் சென்று தங்கிக் கொண்டார்கள். எவ்வளவோ வசதியீனங்களுக்கு மத்தியில் வதனியின் குடும்பம் துன்பப்பட்டது. வாழ்க்கையில் வசதியும் வாய்ப்பும் தொடர்ந்து நிலைத்திருப்பது இல்லை என்ற பேருண்மையை அவர்கள் அக் குறுகிய கால வாழ்க்கைக்குள் நன்கு உணர்ந்து கொண்டார்கள். இவ் வேளையில்தான் வதனியின் கடைசி அண்ணனும் தன் சுயவிருப்பின் பெயரில் வெளிநாடு சென்றார். அவளது மூத்த அண்ணனும் தன் தொழிலுக்காகச் சென்றுவிடுவதால் பிரிவுத் துன்பம் அவளைச் சூழ்ந்து வாட்டியது. தனிமையிலிருந்து அழுது தனது மனச் சுமையைக் குறைப்பதைத் தவிர அவளுக்கு வேறு வழி தெரியவில்லை. ஓய்வான நேரங்களில் தனது தாயுடனே இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்வாள். அவளது தாயினையே அவள் தன் தோழியாகவும் தெய்வமாகவும் கண்டாள்.

இரண்டு வருடங்களின் பின்னர் அவர்கள் மீண்டும் தென்மராட்சி மண்ணை வந்தடைந்தார்கள். அப்போது வதனி உயர்தரத்தில் கல்வி கற்றுக்கொண்டி ருந்தாள். அதற்கிடையில் மூத்த அண்ண னின் திருமணம் நிச்சயிக்கப்பட்டு நாளும் குறிக்கப்பட்டது. அந்த வேளையில்தான் அந்த இனிமையான செய்தி தொலைபேசி வயர்களின் ஊடாகத் தவழ்ந்து வந்து அவளது செவிகளை நிறைத்தது. ஆமாம். அவள் பதினைந்து வருடங்களாகப் பிரிந்திருந்த அண்ணாவை நிஜமாக நேரில் காணப் போகின்றாள். அவளுக்கு எல்லாமே கனவில் நடப்பதைப் போல தோன்றின. அவளுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றியது. நாட்களை எண்ணி எண்ணியே நாட்காட்டி கிழிந்து போனது. தூசு தட்டுவதும், வீடு கழுவுவதும், வீட்டை அழகுபடுத்து வதுமாக வீடே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

குறித்த அந்த நாளும் வந்தது. எல்லோருமே வதனியின் அண்ணாவை எதிர்பார்த்து வாசலுக்கும் கேற்றுக்கும் ஓடிக்கொண்டிருந்தனர். திடீரென்று கார் ஒன்றின் ஓசை கேட்டது. வதனியின் அண்ணா வந்து இறங்கினார். சுமார் ஒரு மணித்தியாலம் வரை அவர்களது அன்புப் பரிமாறல்களைப் பார்த்து கல்லும் கூட கனியத் தக்கதாய் இருந்தது. வதனி இவ்வளவு நாளும் பிரிந்திருந்த துன்பமும் இரத்த பாசமும் ஒன்று சேர ஆவேசத்துடன் அண்ணாவை ஆரத் தழுவிக்கொண்டாள். வதனிக்கு அண்ணாவுடனிருந்த அந்த இருபது நாட்களும் சொர்க்க லோகத்தில் இருப்பதைப் போன்ற பிரமையை ஏற்படுத்தியது. அண்ணாவை விட்டு ஒரு நிமிடம் கூடப் பிரியாது அவரது கையைப் பற்றியபடியே திரிந்தாள். இவ்வேளையில் மூத்த அண்ணாவின் திருமணம் இனிதே நடைபெற்று முடிந்தது. அவளருகில் மூன்று அண்ணன்மார் இருந்தது பேரானந்தத்தைக் கொடுத்த போதும் கடைசி அண்ணா இல்லையே என்ற குறை நெருஞ்சி முள்ளாக.... மனதை நெருடத்தான் செய்தது.

திருமணம் நடைபெற்று இரண்டாம் நாள் அவளது இரண்டாவது அண்ணா வெளிநாட்டிற்குப் புறப்பட ஆயத்தமானார். வதனிக்கோ பூமி கால்களுக்கிடையில் நழுவிச் செல்வதைப் போன்று காணப் பட்டது. வாழ்க்கை மீது வெறுப்பே ஏற்பட்டது. அண்ணனும் தங்கையும் கட்டித் தழுவியபடி அழுதார்கள். விசும்பினார்கள். இறுதியில் அவளது அருமை அண்ணா மனத்தினை தங்கையிடம் கொடுத்துவிட்டு வெற்றுடலுடன் புறப்பட்டுச் சென்றார். அவருடன் மூன்றாவது அண்ணாவும் புறப்பட்டுக் கொழும்பிற்குச் சென்றார். மறுநாள் மூத்த அண்ணாவும் தன் புகுந்த வீடு சென்று விட்டார். வதனிக்கோ யாரோ தனது தலையில் பாறாங்கல்லைப் போட்டு, குற்றுயிராய் நடுக்காட்டில் விட்டதைப் போல இருந்தது. முழுமையில் சாகடித்திருந்தால் கூட இந்தத் துன்பத்தை அநுபவிக்க முடிந்திராது என்று நினைத்துக்கொண்டாள். அழுதாள்.... அழுதாள்....... கண்ணீர் வற்றிப்போகும் வரை அழுதாள். ஊன் மறந்தாள். உறக்கம் இழந்தாள். அண்ணாவின் அறைக்குச் சென்று அடிக்கடி பார்த்தாள். அது வெறிச்சோடிப் போய்க் கிடந்தது. அறையை அடித்து உடைக் கலாம் போல் ஆவேசம் பொங்கியது.

மறுநாள் தொலைபேசி கிணு கிணுக்க ஓடிச் சென்று எடுத்தாள். அவளுடைய பாசமான அண்ணா லண்டன் போய்ச் சேர்ந்துவிட்டார். வதனியின் உடம்புதான் இங்கிருக்கிறதே தவிர, மனம் முழுமையாகவே அண்ணனுடன் சென்று விட்டது. தினமும் அண்ணாவுடைய படத்தைப் பார்த்துக் கண்ணீர் விடுவாள். படிக்க இருந்தால் அண்ணாவின் ஞாபகம். அவளுக்கு அண்ணாவே இந்த உலகமாக மாறிவிட்டது. அவளது அண்ணனுக்கும் இதே நிலைதான். அவளை நினைத்து உண்ணாமல், உறங்காமல், வேலைக்குச் செல்லாமல் தவித்துக்கொண்டிருந்தார். வதனியின் அன்பு மொழிகளைக் கேட்கத் தினமும் தொலைபேசி எடுப்பார். இருவரும் நேரம் போவது தெரியாமல் கதைப்பார்கள். வதனி மீண்டும் எப்போது அண்ணனைக் காண்பேன்? என ஏங்கிக்கொண்டிருக்கிறாள். தன் மேலுள்ள அதீத பாசத்தின் காரணமாக அண்ணா நிச்சயமாய் அவளைப் பார்க்க வருவார் என்று அவளுக்கு நன்றாகத் தெரியும். இந்த நம்பிக்கையில்தான் அவள் இன்னமும் நிம்மதியாய் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

**- செ. வாணி, சாவகச்சேரி.**

# ‘சக்தியின் தேடலில்...’

கதை : கிண்ணியா அமீல் அலி
கவிதைகள் : கலைக்காதலன் சத்தார்.

விஞ்ஞானம் - அலி அக்பர் சுபியான் பீ.எஸ்.ஸி.
தமிழ் - எம்.வை.எம்.அலி. பீ.ஏ
இஸ்லாமிய நாகரிகம் - ஏ.ஆர்.எம். ரபீக்குள்ளாஹ் (நளீம்)
கணிதம் - அரூஸ் சேரோ, பாரூக் சேரோ தெரியவில்லை. மதிலுக்கு மறுபுறமிருந்த விளம்பரப் பலகையை மறைத்துக்கொண்டிருந்தது சக்தியின் தலை. ‘மஹ்பூபா மகளிர் கல்லூரி’க்கருகில் நின்றுகொண்டிருந்தாள் சக்தி! இவள் ஈஸ்வரன் மகளோ, சாரதாவின் தங்கையோ அல்ல! ஆலங்கேணி - வள்ளுவர் வீதி - அமரர் அம்பலவாணர் ஐயாவின் தூரத்துறவுப் - பொண்ணு. இவள் மீதுதான் இன்று பல ‘அஜித்’தர்களுக்கும் ‘விஜய்’களுக்கும் ஒரு கண்ணு. ஏறக்குறைய சிம்ரன் இவள்! நேர்கொண்ட பார்வைக்காரி! இரண்டாம் குறுக்குத் தெரு வதனியைத் தேடி நான்காம் குறுக்குத் தெருவில் நின்றாள்!

**“நிழலில் அமர வேண்டிய இந்த நிலா வெய்யிலில் வேகலாமா...?”**

மாவை வரோதயனின் ‘வேப்பை மரத்தை’ மூடி வைத்துவிட்டு நிமிர்ந்தாள் சக்தி - சிறுகதைப் பிரியை!

சைக்கிளிலிருந்து இறங்கினான் ழகரணியன்!

“கிளாஸ் போல...?”

மௌனித்தது பூ!

**“நீ மௌனித்துப் போகும்போதெல்லாம் நான் மரணித்துப் போகிறேன்...!”**

சிலேடைச் சிரிப்போடு நின்றுகொண்டிருந்த “கம்ப விழிக் காளை”யவன் பார்வையைத் தணிக்கைக்குட்படுத்திக் குனிந்து முறைத்துச் சிவந்தாள் சக்தி!

**“நீ கறுப்பாக இருந்தாலும் கலகலப்பாக இருக்கிறாய்.... என் கவிதைகளைப் போல...!”**

சில நிமிஷத் தாமதப் பொழுதில் வந்து சேர்ந்தாள் வதனி.

“ஹாய் சக்தி” - என்றாள் வதனி.

“ஹாய் வதனி...” - என்றாள் சக்தி.

“ஹாய் மதினி” - என்றான்



ழகரணியன்!

“மூஞ்சியையும் மொகறக்கட்டையையும் பாரு...”

மஹ்பூபா மகளிர் கல்லூரிக்குள் நுழைந்தனர் சக்தியும் வதனியும்.

**“சில அழகுகள் வெறுத்துப் போனாலும் அவர்கள் ஞாபகங்கள் அலுத்துப் போவதில்லை...!”** என்றபடி, ழகரணியன் நின்றான் ‘வாணி புத்தகசாலை’ வாசற்படி.

★ ★ ★

**“சில அழகுகள் நெஞ்சைவிட்டும் அகல்வதே இல்லை... அதில் நீயும் ஒருத்தி...!”**

“இன்னிக்கும் வந்துட்டான்டீ...”

ஹிஜ்ரா வீதி நளீப் சேரின் ஆங்கில டியூஷன் முடிந்து..

அல்-அக்ஸா வீதியால் வந்துகொண்டிருந்தவர்களை வழிமறித்தான் ழகரணியன்!

“இஞ்ச பாருங்க ழகா... சக்திக்கு இதுலயெல்லாம் துளி கூடப் பிரியங் கிடையாது...!”

**“இது ஈர்க்கிள் கூடல்ல இதயக் கூடு!”**

“எங்களை தொந்தரவு செய்யாதீங்க பிளீஸ்...”

“வாடீ போகலாம்...”

“நான் வாடிப் போகலாம்...”

“செத்தாலும் கவலையில்லை...”

**காதல் தோல்வி! மாணவன் தற்கொலை**

(- ஏ.ஸீ. முஹம்மது முஸ்இல்-)

ஈச்சந்தீவைச் சேர்ந்த ழகரணியன் (வயது 18) தான் காதலித்தவள் தன்னைக் காதலிக்காத காரணத்தினால் மனமுடைந்து சுருக்கிட்டு...

- திடுக்கிட்டு விழித்த சக்திக்குத் தூக்கம் வரவேயில்லை. கண்களை மூடினால் ழகரணியன்தான் வந்துகொண்டிருந்தான்!

இப்பொழுதெல்லாம் ழகரணியன் மூன்று முறை பல் துலக்குகின்றான்! அவனுடைய கையெழுத்து அழகாகியது! தபால்காரன்தான் இன்னும் தெய்வமான பாடில்லை. கையெழுத்தை மட்டுமாவது வைத்துவிடு! கடிதத்தை நானே எழுதிக்கொள்கிறேன்’ என மேத்தா பாணியில் புலம்ப ஆரம்பித்தான்.

சக்தியின் அழகில் ழகரணியன் மயங்கியதில் வியப்பில்லை.

நேற்றைக்குப் பிறகு - சக்தி இறுதியாக எடுத்த முடிவு சரி என்றே பட்டது - விஜயா, சசிகலா, வசந்தமலா - வதனி எல்லோருக்கும்.

★ ★ ★

“நீ நாளைக்கே யாழ்ப்பாணம் போ...!” - என்றார் அப்பா. என் ஆத்மாவோடு கலந்தவளை எப்படி மறந்து தொலைப்பது என்றேங்கியழுது வடியும் அவனது இரவுகள் இனி... விடியப் போவதில்லை.

ழகரணியன் இதயத்தால் அழுதுகொண்டிருக்க... அவனுடைய அப்பா சக்தி எழுதிய கடிதத்தை மீண்டும் ஒரு தடவை படித்துப் பார்த்தார் :

..... ழகரணியனின் நடவடிக்கைகள் இப்பொழுது படுமோசம். பாடசாலை, லைப்ரரி, டியூஷன், மார்க்கட்... எங்குமே செல்ல முடியவில்லை. என்னைப் பின்தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறார்... அவர் என் மீது காதல் வசமாகிவிட்டார் போல் தெரிகிறது... இருந்தாலும் எனக்கு அவர் மீது துளி கூட விருப்பம் கிடையாது. நான் என் முறை மச்சான் சரவணனைத் திருமணம் செய்யப் போகின்றேன். தயவு செய்து உங்கள் மகன் ழகரணியனிடம் என்னைப் பின்தொடர்ந்து வந்து எனக்குப் பிரச்சினைகள் தர வேண்டாம் என்று சொல்லி வையுங்கள்... ழகரணியனின் பெற்றோரே... இது உங்கள் கவனத்திற்கு...

**- கிண்ணியா அமீர் அலி -**

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

### இறைவன் இல்லையேல் வாழ்வில்லை

நீங்கள் எல்லாவற்றையும் சந்தோஷ உணர்வுடன் செய்தீர்களானால் அப்போது நிறைவேற்ற வேண்டிய மிகக் கஷ்டமான வேலை என்று எதுவும் இல்லை.

நீங்கள் திறமையாக முயற்சிக்கும் போது, உங்கள் திறமையான முயற்சி போதுமானதாக இல்லையெனில், அதனை இறைவனின் கரங்களில் ஒப்படைத்து விடுங்கள்.

நீங்கள் மிகவும் விசேஷமானவர் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் பாகத்தை வேறு எவராலும் உங்களை விடத் திறமையாகச் செய்ய முடியாது.

இறைவன் எனது அதி உன்னத துணை என்பதனை நான் எப்போது மறக்கின்றேனோ அப்போதே தனிமை வருகின்றது.

உங்கள் எதிர்பார்ப்புகளை இறைவனிடத்தில் நிலைத்திருக்கச் செய்யுங்கள். அப்போது மனிதர்களால் உங்களை வீழ்த்த முடியாது.

வயது போவது பரவாயில்லை. ஆனால் விடயங்களைக் கையாளும்போது நீங்கள் வயதாகி விடுவீர்கள்.

மின் குமிழில் மின் இழை இல்லையெனில் ஒளி இல்லை. இறைவன் உங்கள் வாழ்க்கையில் இல்லையென்றால் வாழ்க்கையே இல்லை.

எந்தளவிற்கு நீங்கள் உங்களைப் புரிந்து கொள்கிறீர்களோ அந்தளவுக்கு சந்தோஷமாகவும் அமைதியாகவும் இருப்பது எளிதாகின்றது.

உங்களுடைய பற்றுதல்கள் எல்லாம் ஒரே ஒரு இறைவனிடம் இருக்கும் போது உங்களுடைய பெறுபேறுகள் அதிக மாகும்.

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

---

## இலக்கிய நயம்

### "மயக்கும் மாலையே போ! போ!! இனிக்கும் இரவே வா! வா!!"

தருவது முழுடில்யன்

"மகதியையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த சங்கீதன், 'பூக்களும் பெண்களும் பார்க்கச் சலிப்பதில்லை' என்று நினைத்துக் கொண்டான். அரையிருட்டில் மகதி அதீத அழகுடன் தோன்றினாள்.

மேற்கில் சூரியன் வீழ்ந்து மறைந்திருந்தான். ஆனாலும் பூமியை முற்றிலும் இருளில் மூழ்கிவிடாமல் காத்திருந்தன சந்திரனின் கதிர்கள். இந்தச் சந்தியாகாலப் பொழுதை பெண்ணாக வால்மீகி வர்ணித்திருந்ததை சங்கீதன் நினைத்தான்.

அதுவரை சிவப்புச் சேலையை உடுத்திருந்த சந்தியா, சந்திரனின் கரங்களான அவனது கிரணங்களின் தீண்டுதலால், தனது சேலையை நெகிழவிட்டு நிர்வாணமாக வெளுத்து நின்றாள் என்ற வால்மீகியின் வர்ணனை, இந்த மாலை முடிந்த இரவின் சந்திர வெளிச்சத்திற்கு எவ்வளவு பொருத்தம் என்று யோசித்தான்.

நிலாவொளி பாலென ஓடிப் பரவியிருந்தது.

தன் குளுமையான கிரணங்களால் மகதியின் கன்னங்களை, கழுத்தை, அதனுடன் சேர்த்து அவள் சேலையை ஊடுருவி மார்புப் பகுதியையும் தழுவ முற்பட்ட சந்திரன், தனக்குப் பெண்ணாசையால் கிடைத்த பழைய சாபத்தை மறந்து விட்டவன்போல் ஆங்காங்கே அவள் ஆடைகளை ஊடுருவினான்.

இவன் பார்வை செல்லுமிடங்களைக் கவனித்த மகதி, மௌனத்தை உடைத்து, "என்ன ஒரே யோசனை?" என்றாள்.


சங்கீதன் முகத்தில் கிலேசத்தின் சாயை லேசாக ஒரு விநாடி படர்ந்து பிறகு நீங்கியது.

"உன்னைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியுமா என்று யோசித்தேன்..."

அவள் முகத்தில் சிரிப்பு குமிழ்ந்தது. பிறகு சட்டென்று அது அமிழ்ந்தது. வேதனை நிறைந்தது.

உலகில் உள்ள சோகக் கவிதைகளையெல்லாம் உள்ளடக்கிய அந்தக் கண்களைப் பார்க்க முடியாமல் பார்வையைத் திருப்பினான் சங்கீதன்.

பூசலம்புகள் என்று கண்களை கம்பன் வர்ணித்ததன் பொருத்தத்தை நினைத்தான். அந்தக் கண்கள் தன் கண்களினூடாகப் பாய்ந்து இதயத்தில் தைப்பதையும் வலியுண்டாக்குவதையும் உணர்ந்தான்.



சட்டென நெருங்கி அவள் மடியில் முகம் புதைத்து வீழ்ந்தான்.

"ஏய்! பொது இடத்தில்... என்ன இது?" என்று அவன் தோள்களைப் பற்றித் தூக்கினாள் மகதி.

"சரி, மறைவாகப் போய்விடலாமா?"

"ச்சீ... வெட்கமில்லை?"

"வெட்கங் கெட்ட நேரம்தானே இது?"

"ஹூம்... நல்ல அழகுதான்!" என்று முகத்தைத் திருப்பினாள் மகதி.

மோவாயைப் பற்றி முகத்தைத் தன்பக்கம் திருப்பிக் கொண்டே "அதனால்தானே என்னால் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாமலிருக்கிறது" என்றபடி அவள் முக அழகை நெருக்கத்தில் பருகினான்.

அவள் தன் தாமரைக் கண்களைத் தரையில் சாய்த்தாள்.

அவன் விலகிய பிறகும், ஏதோ நினைவாக "விடுங்கள் என்னை..." என்றாள்.

"எதை?" என்று கேட்டபடி அவன் மீண்டும் நெருங்கினான்.

மகதி உதட்டைக் கடித்துக் கொண்டாள். 'ஐயோ, என்ன உளறுகிறேன் நான்!' என்று மனதுக்குள் திட்டிக்கொண்டு விலகி அமர முற்பட்டாள்.

சங்கீதன் சிரித்தபடியே, அவள் கைகளைப் பற்றி இழுத்து விரல்களை முரட்டுத்தனமாக அழுத்தினான். அந்த முரட்டுத்தனம் அவளுக்கு வேண்டியிருந்தது. பாசாங்கை எல்லாம் ஆசைவென்றது.

அவன் முரட்டுத்தனத்துக்குத் தனது முரட்டுத்தனமும் சிறிதும் குறைவல்ல என்பதை மகதியும் காட்டினாள். அவனை வென்றுவிடும் முயற்சியில் கரங்களை நெரித்தாள். இதனால் உற்சாகமடைந்த சங்கீதன், பற்றிய விரல்களை வேகமாய் இழுத்தான்.

மறுகணம் அவள் தலை அவன் விசால மார்பில் புதைந்தது.

அதுவரை அவள் முரட்டுத்தனமாகச் சிறை வைத்திருந்த அவன் கைகள் விடுதலை அடைந்தன. தகுதியற்றவருக்குக் கிடைத்த சுதந்திரம்போல, அவன் கை மீண்டும் அடாவடித்தனத்தில் இறங்கியது. தனக்குக் கிடைத்த சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்ய ஆரம்பித்தது.

அத்துமீறிய இடங்களில் அவன் கை சஞ்சரித்தது. அவளுடைய அங்கலாவண்யங்களைத் தேடி எங்கெங்கோ அலைந்தது.

விம்மிக் கிடந்த அவள் கவர்ச்சிப் பிரதேசங்கள் மேலும் அதிகமாக உறுதிப்பட ஆரம்பித்ததை அவன் கைகள் அறிந்தன.

இன்ப வேதனையைத் தாளாமல் அசைந்தாள் மகதி.

அவளை இம்சைப்படுத்தும் வெறியில் அவன் முன்னேறினான்.

அவள் வலியில் கிடைக்கும் இன்பத்தை அநுபவித்தாள்.

உடல் முழுவதும் மயிர்க்கூச்சல் எடுத்தது. இதயம் பெரிதாகத் தாளம் போட்டது.

அவளை அள்ளியெடுத்துத் தன் முகம் நோக்கி நிமிர்த்தினான் சங்கீதன்.

நேருக்குநேர் நோக்கத் திராணியற்று முகத்தைத் திருப்பினாள் மகதி. அவள் உதடுகளைக் கவ்வ விரைந்த அவன் அதரங்கள், அவள் வலது கன்னத்தைக் குழைத்து விடுவனபோல் அதில் அழுத்தமாகப் பதிந்தன.

மகதி வெட்கத்தில் கண்களை மூடிக்கொண்டாள். கவிழ்ந்த செந்தாமரையெனத் தோன்றிய விழிமடல்களின் மீதும் மாறி மாறி அவன் அதரங்கள் பதிந்தன. பின்னர் அங்கிருந்து கீழிறங்கி அவள் கழுத்தில் வெகு நேரம் புதைந்து கிடந்தன.

அந்நிலையில் "மகதி" என்று மெதுவாக அழைத்தான் சங்கீதன்.

"உம்" என்ற உணர்ச்சிமிகுந்த முனகல் வெளிப்பட்டது அவளிடமிருந்து.

முகத்திலும்... பல தாமரை இதழ்கள்... என்று ஏதோ முணுமுணுத்தபடியே அவன் உதடுகள் அவள் கழுத்தை விட்டும் கீழிறங்கின.

மையப் பகுதியில் அவன் முகம் புதைந்தது.

அவள் தரை சாய்ந்தாள்.

இரு கன்னங்களையும் அழுத்திய மெத்தென்ன சுகமான உணர்ச்சியால் திக்குமுக்காடி முகத்தை இருபுறமும் வேகமாக அசைத்தான் சங்கீதன்.

இடையை அணைத்திருந்த கைகள், அவள் முனகல்களை அதிகப்படுத்தும் விதத்தில் அழுத்தி இழுத்தன. பின்னர் அங்கிருந்து கீழிறங்கி குன்றுகளைத் தடவிச் செல்லும் தென்றல் போல அலைந்தன.

தன்னிலை மறந்தவளாக அவள் வேகமுற்றாள்.

அவன் கரங்களுக்குத் தன் கரங்களால் வழிகாட்டி அழைத்துச் சென்றாள்.

வேகமூட்டப்பட்ட மென்மை, எவ்வளவு முரட்டுத் தனத்தைக் காண்பிக்கக் கூடியது என்பதை அவனுக்கு உணர்த்தினாள்.

ஒருவரையொருவர் மீறிவிட முயன்ற போராட்டத்தில், மென்மையை வன்மையே வெற்றிகொள்ளும் என்ற உலகியல் சமன்பாடு பொருளற்றுப் போய்... இருவருமே வென்று, இருவருமே தோற்றுச் சாய்ந்தார்கள்.

நிலவருகே ஓடிக்கொண்டிருந்த மேகங்களைப் பார்த்தபடி படுத்திருந்த சங்கீதன், தனக்குள் சிரித்துக்கொண்டான்.

'இவளது அணைப்பைவிட்டு எங்குதான் போவேன்? இவளை மார்போடு இறுக்கி அணைக்கும் இன்சுவையை எனக்கு வேறெது தரமுடியும்?

இவளை விட்டுவிட்டு வேறு பொருள் தேடப் போவதா? பைத்தியக்காரத்தனம்!

பெரிய வீரர்களின் தலைவனான அந்தப் பெரும் வள்ளல் ஓரியின் வற்றாத செல்வங்கள் அனைத்தும் கிடைப்பதாக இருந்தாலும், இவள் தரும் இன்பத்துக்கு அவை ஈடாகுமா? இவளைப் பிரிந்துபோய் நான் ஈட்டும் செல்வங்கள் மிக மிக வறிதானவைதான்.'

சங்கீதனின் உள்மனம் இதனை உணர்த்தியது.

*சுணங்கணி ஆகம் அடைய முயங்கி*
*வீங்குவர்க் கவவின் நீங்கல் செல்லேம்*
*மழவர் பெருமகன் மாவள் ஓரி*
*கைவளம் இயைவது ஆயினும்*
*ஐதே கம்ம, இயைந்துசெய் பொருளே.*
*(நற்றிணை - 52 : 4-5, 9-11.)*

---

காலைக்கடன் கழித்த பின்னர் பத்திரிகை படிப்பீர்களா அல்லது அதற்கு முன்பே பத்திரிகை படித்துவிடுவீர்களா?

*-எம்.எச்.எம்.இர்பான், பொகவந்தலாவ.*

மிக முக்கியமான இந்தக் கேள்வியில், முக்கியமான அடுத்ததை ஏன் விட்டு விட்டீர்கள்....கடனின்போதே பத்திரிகையையும் படிக்கலாமே!

***

**அமைச்சர் டக்ளஸைக் கொல்ல வந்த குண்டுதாரியை யார் அனுப்பியிருப்பார்கள் என்று உங்களால் அனுமானிக்க முடிகிறதா?**

*-நெ.பி.மரியடினேசன், நானாட்டான்.*

நாமாக எதைத்தான் யோசிக்க முடிகிறது? யோசிப்பதையும் வெளியே சொல்லிவிட முடிகிறதா? ஏதோ...நம் பத்திரிகைகள் எழுதுவதிலிருந்து ஊகித்துக் கொள்ள வேண்டியதுதான்! 'இது புரிந்துணர்வு உடன்படிக்கையைப் படுமோசமாகச் சிதைக்கும் செயல்' என்று கோபத்துடனோ அல்லது இத்தகைய கொலை முயற்சிகள், புலிகளைப் போருக்கே செல்ல வைக்கும்...' போன்ற 'தமிழ் வீர' மிரட்டல்களையோ காணோம்! குண்டு வைத்தது யார் என்று ஆதாரபூர்வமாகத் தெரியாமல் குற்றம் சாட்டி எழுதுவது பத்திரிகா தர்மமில்லை என்ற பொறுப்புணர்வும், இனந்தெரியாதவர்கள்தான் செய்திருக்கிறார்கள் என்ற தெளிவும் எல்லாத் தமிழ்க் கட்டுரையாளர்கள், கருத்துதிர்ப்பாளர்களிடமும் பூரணமாகக் காணப்படுவதால்... 'தமிழுணர்வுள்ளவர்கள்' இரகசியமாகப் பெருமிதப்படக்கூடிய நம்மவர் வேலைதான் இது என்று புரிந்துகொள்ள முடிகிறது.

***

## சிந்தியா பதில்கள்

**விஜய்யின் 'உதயா' பற்றி ஒன்றும் சொல்லவில்லையே?**

*-எம்.எஸ்.குட்டி, மட்டக்களப்பு.*

அதில் சொல்லும்படியாக என்னதான் இருக்கிறது. ஒரு வெற்றிப் படம் தந்த இயக்குநர், தனது இரண்டாவது படத்திலேயே இவ்வளவுக்குச் சொதப்ப முடியுமா என்ற ஆச்சரியத்தைத் தவிர!

***

**கொள்ளுப்பிட்டி குண்டுவெடிப்புக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்று புலிகள் மறுத்திருக்கிறார்களே?**

*-நா.பிரியா, மொறகொல்ல*

மட்டக்களப்பு இலுப்படிச்சேனையில் கருணா அணியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி இரு தமிழ் இளைஞர்களைப் புலிகள் பகிரங்கமாகச் சுட்டுக் கொன்றிருப்பதை, 'வீரப் பயணத்தின் முன்னேற்றம்' என்று நம் தமிழ்ப் பெருங்குடிமக்கள் திருப்தியோடுதானே பார்க்கிறார்கள்! டக்ளஸைக் கொல்லும் துணிகர முயற்சியைப் பறைசாற்றுவதற்கு ஏன் அநியாயத்திற்குக் கூச்சப்படுகிறார்கள் என்று தெரியவில்லை.....!

***

**இந்திரன் கெட்டதும், சந்திரன் கெட்டதும், ஹக்கீம் கெட்டதும்....?**

*-இ.கமால்தீன், ஏறாவூர்.*

இந்த ஆண்களுக்குக் கெடுவதற்குக் கூடத் துப்பில்லை. அதற்கும் பெண்கள்தானா உதவ வேண்டியிருக்கிறது.

***

**'ஐ' அலைவரிசையில் ஒளிபரப்பாகும் 'கதையல்ல நிஜம்' 'ராகம் சங்கீதம்', 'அபூர்வராகங்கள்' போன்ற அருமையான நிகழ்ச்சிகள் சக்திக்குச் சரியான போட்டிதானே?**

*-பா.ஜனாத்தனி, பெரியகல்லாறு-02.*

ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளால் பார்வையாளர்களின் எண்ணிக்கை உயர்வதில்லை. தொடர்ச்சியாக, பார்க்கத் தக்க நிகழ்ச்சிகளைத் தரும் அலைவரிசையில் இடையிடையே சலிப்பான நிகழ்ச்சி ஒன்றிரண்டு போனாலும் இரசிகர்கள் அலைவரிசையை மாற்றிவிடாமல் பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்கிறது ஓர் ஆய்வு. திட்டமிட்ட நேர ஒழுங்கில் தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதும், அடிக்கடி நேரத்தை மாற்றி இரசிகர்களைக் குழப்பாமல், குறைந்த பட்சம் இன்ன நேரத்திலிருந்து இன்ன நேரத்துக்குள் நல்ல சில நிகழ்ச்சிகள் இருக்கும் என்ற நம்பிக்கையைப் பார்வையாளர்களிடம் பதிய வைப்பதும், அதன்படி அவர்களை ஏமாற்றிவிடாதிருக்கும் பொறுப்புணர்வைக் கொண்டிருப்பதுமே அந்த அலைவரிசைக்கு அதிக இரசிகர்களைப் பெற்றுத் தரும்.

***

**அமைச்சர் டக்ளஸைக் கொல்வதற்கு ஏவப்பட்ட மனித வெடிகுண்டு வேறு நால்வரைப் பலிவாங்கியது மட்டுமல்லாமல், தலைநகர்த் தமிழர்களுக்கும் ஏராளம் இடைஞ்சல்களைத் தந்துவிட்டிருக்கிறதே?**

*-சி.மாலினிப்பிரியா, கொழும்பு - 13.*


பின்லேடனைக் கொல்வதற்காக என்று ஆப்கானிஸ்தான் எங்கும் குண்டுகள் வீசியதை அமெரிக்க மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். சதாமைக் கொல்வதற்காக ஈராக்கிய மக்களுக்குப் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியதையும் அவர்கள் அங்கீகரித்தே இருந்தார்கள். அதுபோல் 'வீரத் தமிழர்களும்' தாங்கள் அல்லாத 'பிறர்' அழிவதைப் பொருட்படுத்துவதில்லை.

***

**மகேஸ்வரன் எம்.பி. தனக்கு வாக்களித்த மக்களுக்குப் பின்புறத்தைக் காட்டிவிட்டு அவசரமாக வெளிநாட்டுக்குத் தப்பிப் போயிருப்பது, புலிகளின் கொலைப் பயமுறுத்தலினாலா? அல்லது அவரது ஊழல்கள் பிடிபட்டு அரசு நீதிமன்றத்தில் நிறுத்தப்போகிறது என்ற பயத்தினாலா?**

*-ஆர்.விக்கி, சாவகச்சேரி.*

இரண்டும்தான்! ஆனால், "புலிகளின் அங்கீகாரத்துடனேயே கொழும்பில் சிங்களத் தேசியக் கட்சியில் போட்டியிடுகிறேன்" என்று நம்ப வைத்தார். சூடு வாங்கிய பிறகும் "இது கொழும்புத் தமிழ் விரோதிகளின் வேலை" என்று படுத்துக் கிடந்தபடியே சொல்லி எம்.பி.யானார். இப்போது "அசல் தமிழனைக் கொல்ல கொலையாளி வாசல் வரை வந்துவிட்டான்" என்று நம்பும்படியாக அலறி, மீண்டுமொருமுறை தமிழ் மக்களின் ஏமாளித்தனத்தை நிரூபித்துவிட்டு, வெளிநாடு பறந்துவிட்டார் மக்களின் பிரதிநிதி!



விஜய்

***

**எந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது கடினம்?**

*-எஸ்.எம்.அஹமட், ஏறாவூர்.*

குழந்தைகளின் கேள்விகளுக்கு! அவர்களின் அலைவரிசைக்குள் நுழைவது நமக்குக் கஷ்டம் என்பதால் அவர்களிடமிருக்கும் பதில்களுக்குள் சென்று சேர முடிவதில்லை. உதாரணம் : ஒரு சிறுவன் அழுதுகொண்டிருக்கிறான். ஒரு மருத்துவர் அவனுக்கு ஆறுதல் சொல்கிறார்.

"ஏனப்பா அழுகிறாய்?"

"எங்கள் வீட்டு நாய் செத்துப் போச்சு...!"

"இதோ பார், போன கிழமை என்னுடைய தாத்தா கூடத்தான் செத்துப் போனார்....நான் அழுதுகொண்டா இருக்கிறேன்....?"

"உங்கட தாத்தாவை நீங்கள் குட்டியிலிருந்தேயா வளர்த்தீங்க?"

***

**தமிழ்த் தரப்பின் தற்காப்புக்கான தாக்குதல்களைப் பெரிதுபடுத்துகிறீர்களே.... சிங்கள அரசாங்கத்தினால் எமது மக்கள் அடைந்த துன்பங்களும் உயிரிழப்புகளும் அவலங்களும்....இத்தகைய அழிவிலிருந்து எங்களைத் தற்காத்துக்கொள்வதற்காகச் சில தர்மத்தை மீறிய செயல்களைச் செய்வதற்கும் உரிமையை வழங்கியிருக்கிறது என்பதுதான் உண்மை?**

*-எம்.சிற்றம்பலம், திருகோணமலை.*

"இலட்சக்கணக்கில் உயிரிழப்புகளைச் சந்தித்தவர்கள் யூதர்களாகிய நாங்கள். நம்மை எதிர்ப்பவர்களைக் கொன்று நிர்மூலமாக்கும் உரிமை நமக்கிருக்கிறது" என்றுதான் ஏரியல் ஷெரோனும் சொல்கிறார்.

**தமிழ்த் திரைப்பட உலகில் அழகான அம்மா யார்?**

*-மனோ கோபாலன், ஹப்புத்தளை.*

'இந்த அழகுத் தெய்வத்தின் மகனா இவன்!' என்று தெய்வமகன் வியந்த தாய்.

***

**சிந்தியா! அப்படிப் போடு என்றால் என்ன?**

*-முஹமட் பாரிஸ், நிந்தவூர் - 22*

உங்களுக்குப் பிடித்த ஒரு பாடலை, அதன் சிறப்புக்களை விவரித்து எனக்கும் அந்தப் பாடல் பிடிக்கும் என்பதை அழுத்தமாக நான் சொன்னேன் என்றால், அதனால் உற்சாகமடையும் நீங்கள் என்ன சொல்வீர்களோ, அதுதான்! (இந்தப் பதில் போதுமா.....இன்னும் கொஞ்சம் வேணுமா....)

***

**பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டால் அனைவரிடமும் உள்ள துப்பாக்கிகளை என்ன செய்யலாம்?**

*-சி.துஷ்யந்தன், மண்டூர்.*

போர்த் துப்பாக்கிகளைப் பூமியில் நட்டு வைப்போம். பூங்கொடிகளை அதன் மீது சுற்ற வைப்போம்!

***




**1744இல்** நடைபெற்ற கென்ட்லண்டன் கிரிக்கெட் போட்டியின் பின்னர் பிரபல கிரிக்கெட் வீரர்கள் பலர் தோற்றம் பெற ஆரம்பித்தனர். லண்டன் கிரிக்கெட் கழகத்தில் இருந்து வந்த ரொபர்ட் சொல்டின் அக்கால கட்டத்தின் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரராகக் கணிக்கப்பட்டார். எனினும், அவர் பாதாள உலகக் கோஷ்டிகளுடன் இணைந்து சட்ட விரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்ததால் அவருக்கு கிரிக்கெட் விளையாட தடைசெய்யப்பட்டது.

இதன்படி பார்க்கும்பொழுது கிரிக்கெட் உலகில் விளையாடத் தடை விதிக்கப்பட்ட முதலாவது வீரர் இவராவார்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கிரிக்கெட் போட்டியொன்றின்போது உலகில் முதலாவது சதத்தினைப் பெற்ற வீரர் ஜோன் மின்புல் என்பவராவார். ஹெம்ப் லெண்டன் கிரிக்கெட் கழகத்துக்காக விளையாடிய டேவிட் ஹெலிஸ் என்பவர் கரங்களின் கீழாகப் பந்து வீசிய (Under ArmBowler) முதலாவது பந்து வீச்சாளர் என்ற பெருமையைப் பெறுகின்றார். எனினும் இவர் அக் காலகட்டத்தின் மிக வேகமாகப் பந்து வீசக் கூடியவராகவும் கணிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பிற்காலத்தில் கால் விரல்கள் வீங்கும் நோய்க்கு ஆளாகிய இவர், கைத்தாங்கியின் உதவியுடனேயே நடமாடினார் என்றும் தெரியவருகின்றது.

சசெக்ஸ் மாநில ஹெம்ப்லெயின் அணிக்கானச் சகல துறை ஆட்டக்காரராக விளங்கிய நோக்மான் என்பவர் சிறந்த களத் தடுப்பாட்டக்காரராக விளங்கினார். எனினும் துரதிர்ஷ்டவசமாக இவர் 1789இல் நித்திரையில் இருந்தபோது தீப்பிடித்து மரணமானார்.

1700ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியளவில் கிரிக்கெட் விளையாட்டானது பிரித்தானியாவின் காலனித்துவ நாடுகளிலும் பரவத் தொடங்கியது. இதற்கு முக்கிய காரணகர்த்தாக்களாக விளங்கியவர்கள் பிரித்தானிய இராணுவ வீரர்களாவர்.

இதனிடையே நெபொலொனிக் வோடர்லு யுத்த காலகட்டத்தின்போது இடைநடுவில் பிரித்தானிய இராணுவத்தினர் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டதாக வரலாறு கூறுகின்றது.

ஆசிய, தென் மற்றும் வட ஆபிரிக்க நாடுகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இராணுவ வீரர்கள் தமது ஓய்வு நேரங்களில் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டு வந்ததால் அந்த நாடுகளிலும் அது பரவ ஆரம்பித்துவிட்டது.

1792இல் கல்கத்தா கிரிக்கெட் கழகம் தோற்றுவிக்கப்பட்டதன் பின்னர் இந்திய உபகண்டத்திலும் கிரிக்கெட் விளையாட்டு பரவ ஆரம்பித்துவிட்டது. இக் கழகத்தின் மூலம்தான் இந்தியாவிலுள்ள ஈடன் கார்டன் கிரிக்கெட் மைதானம் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தற்போது டெஸ்ட் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டு வருகின்ற நாடுகளில் பல நாடுகளுக்குக் கிரிக்கெட் விளையாட்டு பரவுவதற்கு முன்பதாகவே பர்மியுடான் (1701) அயர்லாந்து (1656), மியன்மார்(1870), கனடா (1820), சீனா (1866), டென்மார்க் (1860), பிஜி (1874), ஜிப்புரோல்டா (1822), ஹொங்கொங் (1851), கென்யா (1888), நெதர்லாந்து (1855), நைஜீரியா (1861), போர்த்துக்கல் (1855), ஸ்கொட்லாந்து (1865), சிங்கப்பூர் (1819), உகண்டா (1893) மற்றும் அமெரிக்கா (1751) ஆகிய நாடுகளில் கிரிக்கெட் போட்டிகள் நடாத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

மேற்குறிப்பிட்ட நாடுகளில் அக்கால கட்டத்தில் உதைபந்தாட்டம், கிரிக்கெட் விளையாட்டை விடவும் பிரபலமாக இருந்ததன் காரணமாகவும், பிரித்தானிய இராணுவம் இந் நாடுகளில் இருந்து வெளியேறியமை காரணமாகவும் கிரிக்கெட் விளையாட்டு ஒழுங்காக நிலை கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதேநேரம் கிரிக்கெட் விளையாட்டுக்கு பாரியளவிலான உபகரணங்கள் தேவை என்பதனாலும் இது அந்தளவுக்குப் பிரபலமாக வில்லை என்றே குறிப்பிட வேண்டும்.

**-மைந்தன்**

## எந்தக் கிழமையில் பிறந்தீர்கள்? என்ன அதிர்ஷ்டம் பெறுவீர்கள்?

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பி.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

### ஆதிக்கம் 3 : பிறந்த கிழமை சனி

பிறப்பெண் 3இல் பிறந்திருக்கிறீர்கள். பிறந்த கிழமை சனிக்கிழமையினையும் கொண்டுள்ள நீங்கள் அமைதியை விரும்புகின்றவர். சமாதானம், சாந்தம் உங்களுக்கு மிகவும் உகந்ததால் சாந்த குணம் உங்களுடையது.

பரந்த மனது, விரிந்த இதயம் உங்களுக்கு இருப்பதால் பெருந்தன்மையுள்ளவர் நீங்கள். படித்தவர்கள் எல்லோரும் மேதைகளுமல்லர்; படிக்காதவர்கள் எல்லோரும் முட்டாள்களுமல்லர். நீங்கள் உங்கள் கல்வியைத் தொடரமாட்டீர்கள். அதனால் அதிகம் படிக்காதவராகக் காணப்படுவீர்கள். கல்வித் தகைமை குறைவாக இருந்தாலும் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்குவீர்கள்.

நீங்கள் செய்கின்ற தொழில் எப்படிப்பட்டதாக இருந்தாலும் அந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் பேரும் புகழும் எடுப்பீர்கள். அதாவது தொழிலில் நல்ல பெயர் உங்களுக்குக் கிடைக்கும்.

சோம்பலைச் சிறிது விரும்பக் கூடியவர்களாகக் காணப்படுவீர்கள். உடலை வருத்தி வியர்வை சிந்தி உழைப்பதற்கு உங்களுக்கு விருப்பமில்லை. இலகுவான தொழிலையே விரும்புவீர்கள். ஒரு திட்டம் போடுவீர்கள். ஆனால் அந்தத் திட்டத்தினைச் செயற்படுத்த மாட்டீர்கள். இதற்குச் சோம்பலும் உங்கள் மனமுந்தான் காரணமாகும். இன்று செய்யக் கூடியதை இன்றே செய்யமாட்டீர்கள். நாளை நாளையென்று தள்ளிப் போட்டுக்கொண்டே செய்வீர்கள். இதனால் பல வெற்றிகளும் சாதனைகளும் உங்களால் செய்ய முடியாமல் போகின்றன. இதன் காரணமாக உங்கள் வாழ்க்கையில் அதிக முன்னேற்றம் ஏற்படாது. சமநிலையில்தான் வாழ்க்கை காணப்படும். ஆனால் உங்கள் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தவரையில் சுலபமாக, நீங்கள் எதிர்பாராத வண்ணம், கைக்கும் உங்கள், பைக்கும் பணம் வந்தவண்ணமிருக்கும்.

'தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்; விழுந்தும் மீசையில் மண் படவில்லை'யென்ற குணம் உங்களிடம் உள்ளது. தான் செய்வதுதான் சரி, தான் நினைப்பதுதான் சரி என்ற தீர்மானத்தோடு வாழக் கூடியவர்களாக நீங்கள் இருப்பீர்கள்.

மாணிக்கத்தைத் தோண்டியெடுத்துப் பட்டை தீட்டினால்தான் ஒளி தரும். பெறுமதியாகும். இதைப் போல உங்களுக்குள் இருக்கின்ற பிடிவாதக் குணத்தை நீக்கினால் வாழ்க்கையில் உச்ச நிலையினை நீங்கள் அடையலாம்.

பிறரின் யோசனைகளோ அல்லது நண்பர்களின் உபதேசங்களோ அல்லது பெற்றோரின் புத்திமதிகளோ உங்களுக்குக் கசப்பானது. அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டீர்கள். இவர்களின் கருத்துக்ளையும் நீங்கள் உவப்பானதாகக் கருதினால் வாழ்க்கையில் பெரிய முன்றேத்தை சாதிக்கலாம். கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். எல்லாம் எனக்குத் தெரியும் என்ற கொள்கை உங்களுக்குத் தேவையில்லை. உடலைக் கொண்டு உழைக்கக் கூடிய தொழில் செய்தாலும் அது சிரமத்தை உங்களுக்கு ஏற்படுத்தாது.

16 வயதுக்குப் பின்னர்தான் ஒரு தொழிலைத் தெரிவுசெய்வீர்கள். பல இடங்களிலும் அலைந்து அலைந்து தொழில் செய்வீர்கள். இதனால் வருமானம் மிகுதியாகச் சேராது. வரவும் செலவும் சரி என்ற நிலையில் இருக்கும். 22 வயதுக்குப் பின்னர் உங்கள் தொழிலின் மூலம் வருமானம் உயரும். 31 வயதில் இன்னும் வருமானம் அதிகரிக்கும். 40 வயது தொடக்கம் 49 வயது வரை வருமானம் இன்னும் இன்னும் தாராளமாகக் கிடைக்கும். 50 வயதில் ஒரு நண்பரின் உதவி காரணமாக ஒரு வியாபாரத்தை ஆரம்பிப்பீர்கள். ஆரம்பத்தில் நட்டத்தையும் கஷ்டத்தையும் கொடுத்து பின்னர் வருமானம் அதிகரிக்கும். இதனால் ஆயுள் வரையில் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் வாழ்வீர்கள்.

16 வயதில் உங்களுக்கு ஒரு ஆபத்து ஏற்படும். 37 வயதில் ஒரு கண்டம் ஏற்படும். இதன் பின்னர் இறுதி மூச்சு உள்ள வரை உங்களுக்கு எந்த விதமான ஆபத்துக்களும் நேராது. உடற்சூடு காரணமாக அதனோடு தொடர்புடைய வியாதிகள் ஆரம்பத்தில் ஏற்படும். இதன் பின்னர் மலச்சிக்கல் ஏற்படும். இந் நோயைக் கவனியாது விட்டால் மூலவியாதி ஏற்படும். சிரமத்தை அதிகம் ஏற்படுத்தாது. 28 வயதின் பின்னர்தான் இந்த நிலை உங்களுக்கு ஏற்படும். நீங்கள் சாப்பாட்டு விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். கோழிக்கறி, சீரகம், பெருங்காயம், மிளகு, வெங்காயம், வாழைப்பிஞ்சு, வாழைப்பூ, பசுநெய், மோர், தயிர், பசளைக்கீரை போன்ற உணவுகளைச் சாப்பிட வேண்டும்.

நீங்கள் பிறந்த எண் மூன்று என்றாலும் உங்களுக்கு வாழ்க்கையில் அதிர்ஷ்டத்தைத் தரக் கூடிய எண் 7 ஆகும். ஆகவே ஒரு மாதத்தில் வருகின்ற 7, 16, 25 திகதிகளில் நல்ல முக்கியமான காரியங்களைச் செய்யுங்கள். வெற்றி நிச்சயம். மேற்குறிப்பிட்ட திகதிகள் சனிக்கிழமையில் வந்தால் உங்களின் சிறப்பு இன்னும் அதிகமாகும்.

நீங்கள் தவிர்க்க வேண்டிய நிறம் வெண்மை. இது தவிர்ந்த வேறு எந்த நிறமாக இருந்தாலும் லைட்கலரில் அணியுங்கள். நீலக்கல் பதித்த வெள்ளை மோதிரம் உங்களுக்கு அதிர்ஷ்டமானது. உங்கள் வீட்டின் இலக்கம் ஒற்றை எண்ணில் அமைவது சிறப்பானதும் அதிர்ஷ்டமானதுமாகும். ஆகவே, ஆதிக்க எண் 3ஐயும் பிறந்த கிழமையாகிய சனிக்கிழமையினையும் கொண்டுள்ள நீங்கள் வாழ்க்கையில் சுகபோகங்களைப் பெற்று வாழ என் நல்லாசிகள்.


**சாந்தமும் சிறப்பும் எண் மூன்றுக்குண்டு. சனிக்கிழமையும் இதனோடு சேர்ந்தால் ஞாலமும் வசப்படுவது கண்டு பனிக்குளிர் மகிழ்ச்சி எழும் உங்களுக்குள்.**

*(அடுத்து சனிக்கிழமை பிறந்தவர் களைப் பார்ப்போம்)*

# ஆசியக் கிண்ணம் 2004 - யாருக்கு ? இலங்கை கோட்டை விடுமா ?

**ஆறு** நாடுகள் பங்குகொள்ளும் ஆசியக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி 16ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், ஹொங்கொங், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என ஆறு நாடுகள் பங்குகொள்ளும் இப் போட்டியின் முதல் போட்டியில் பங்களாதேஷ், ஹொங்ஹொங் மற்றும் இந்தியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய அணிகள்




மோதுகின்றன.

முதல் சுற்றில் ஒவ்வொரு அணியும் இரண்டு நாடுகளைச் சந்திக்கும். இதில் தெரிவாகும் அணிகள் இரண்டாம் சுற்றுக்குத் தெரிவாகி ஆகஸ்ட் முதலாம் திகதி இறுதிப் போட்டிகள் நடைபெறும்.

'ஏ'.பிரிவில் பாகிஸ்தான், பங்களாதேஷ், ஹொங்கொங் அணிகளும் 'பி'.பிரிவில் இலங்கை, இந்தியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

முதல் கட்ட லீக் சுற்றில் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அணிகள் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் மோதுகின்றன. இரண்டு பிரிவுகளிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இரண்டாம் கட்ட லீக் சுற்றுக்குத் தகுதி பெறும். இதிலிருந்து அதிக வெற்றிகளைப் பெறும் இரண்டு அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும். 16ஆம் திகதி பங்களாதேஷை எதிர்த்து ஹொங்கொங் எஸ்.எஸ்.சி யிலும், இந்தியாவை எதிர்த்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தம்புள்ளையிலும் மோதுகின்றன.

இலங்கைக்கு வருகை தரும் வீரர்களுக்கு நமது நாட்டின் பாதுகாப்புக் குறித்து வெளியிடப்பட்ட அச்சம் காரணமாக பலமான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.


இப் போட்டியில் பங்குகொள்ளும் இந்திய, பாகிஸ்தான் அணிகளின் வீரர்கள் வரிசையை அண்மையில் அந் நாடுகள் வெளியிட்டன. இந்திய அணியில் கங்குலி (கப்டன்), ராகுல் டிராவிட் (துணைக் கப்டன்) யுவராஜ் சிங், சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ்.லக்ஷ்மன், வீரேந்திர் ஷேவாக், முகமது கைப், பார்த்தீப் பட்டேல், அனில்கும்ப்ளே, ஹர்பஜன் சிங், ஸகீர்கான், ஆஷிஷ் நெஹ்ரா, இர்பான் பதான், எல். பாலாஜி ஆகியோர் அடங்குகின்றனர்.

விக்கெட் காப்பாளர் சிக்கல் காரணமாக பார்த்தீவ் பட்டேல் சேர்க்கப்பட்டமை காரணமாக வேகப் பந்துவீச்சாளரான




அகார்கார் இவ்வணியில் சேர்க்கப்படவில்லை. 14 பேர் கொண்ட அணியில் சேர்க்கப்பட்டுள்ள பட்டேல், உலகக் கிண்ணப் போட்டிகளில் பார்வையாளராக இருந்தது போல்தான் ஆசியக் கிண்ணப் போட்டிகளிலும் இருப்பாரா என்பது இரசிகர்களின் கேள்வியாயிருக்கிறது. பல்வேறு பயிற்சி முகாம்களை நடாத்தி திறமையாகத் தெரிவுசெய்யப்பட்ட நான்கு வேகப் பந்துவீச்சாளர்கள் அடங்கிய இந்திய அணி திட்டமிட்டபடி 13ஆம் திகதி இலங்கை வந்தது.

இதேவேளை 14 பேர் கொண்ட பாகிஸ்தான் அணியில் இன்சமாம்-உல்ஹக் (கப்டன்,) யூசுப் யுகானா (துணைக் கப்டன்) இம்ரான் பர்ஹத், யாசீர்ஹமத், இம்ரான் நசீர், யூனிஸ்கான், சொய் மாலிக், அப்துல் ரசாக், மொயின் கான், முகமது சமி, சொய்ப் அக்தார், டேனிஸ் கனேரியா, ராணா நவிதுல்ஹசான் ஆகியோர் அடங்குகின்றனர். முக்கியமாக கராச்சியில் இந்திய அணிக்கெதிராக நடைபெற்ற ரெஸ்ட்டில் திறமையாக விளையாடிய இளம் வேகப் பந்துவீச்சாளர் உமர்குல் இடம்பெறவில்லை. காயம் காரணமாக சர்வதேசப் போட்டிகளில் இருந்து விலகியிருந்த அக்தார் மீண்டும் இவ்வணியில் இணைந்திருக்கிறார். கடந்த




2000ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசியக் கிண்ணப் போட்டியில் சம்பியனான பாகிஸ்தான் அணி இம்முறை பலமான மோதலைச் சந்திக்கும் என்பது மாத்திரம் தெரிகிறது. ஏனெனில், முதல் சுற்றில் பாகிஸ்தான் அணியுடன் மோதவுள்ள பங்களாதேஷ், ஹொங்கொங் அணிகளை வென்று இரண்டாம் சுற்றுக்குள் வரும் வேளை இந்திய, இலங்கை அணிகளை தலா ஒவ்வொரு போட்டியில் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்.

வானிலையின் ஒத்துழைப்பு போட்டிகளில் முக்கிய பங்களிப்பு வழங்கும் என்பது குறிப்பிடத் தக்கது. இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் ஜோன்ரைட், தமக்கு ஆசியக் கிண்ணப் போட்டிகளில் பங்குகொள்ளும் அனைத்து அணிகளது பலம், பலவீனம் தெரியும் எனவும் தமக்கு வெற்றி வாய்ப்பு அதிகமாகவே இருப்பதாகவும், பாகிஸ்தான் அணியே தமக்குச் சவாலாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு கடந்த 8ஆம் திகதி தனது 32ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய இந்திய அணியின் கப்டன் கங்குலி, இரண்டரை மாத இடைவெளிக்குப்பின் மிகப் பெரிய தொடரைச் சந்திக்கின்றோம். இருந்தாலும் சாதித்தே தீருவோம் எனச் சபதம் கூறியுள்ளார்.

இதற்கிடையில் புதிதாகக் களமிறங்கும் ஹொங்கொங் அணியின் திறன் சோதிக்கப்படுவதும் பங்களாதேஷ், அரபு எமிரேட்ஸ் அணிகள் பலம் பெறுவதும் இப் போட்டியில் நடைபெறும் என்பது குறிப்பிடத் தக்கது.

இதேவேளை ஐ.சி.சி. தரவரிசையில் 110 புள்ளிகளைப் பெற்று 4ஆம் இடத்தில் உள்ள இலங்கை அணி 136 புள்ளிகள் பெற்று 1ஆம் இடத்திலுள்ள அவுஸ்திரேலிய அணியுடனான போட்டியில் மோதிவருகிறது. இந்தப் போட்டியில் இலங்கை அணி தோல்வியைத் தழுவும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை, ஆசியக் கிண்ணப் போட்டிகள் இலங்கை அணிக்குச் சொந்த மண்ணில் மிகப் பெரிய சவாலாக அமையப் போகிறது.

முரளிதரன் இல்லாத அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் இலங்கையால் சாதிக்க முடியாது போனது என்பதனை விடவும், ஷேன் வோனால் முரளியின் சாதனையை முறியடிக்க முடியாமல் போனதுதான் கவலை.

என்ன ஆனாலும் தூஸ்ரா சிக்கலில் மாட்டியிருக்கும் முரளி, ஐ.சி.சி.யால் மறுபரிசீலனை செய்யப்படவுள்ளார். அதற்குள் இலங்கை அணி தனது சொந்த நாட்டில் இம்முறை ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றுமா? என்பது ஆகஸ்ட் முதலாம் திகதி ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெறும் பகலிரவுப் போட்டியில்தான் தெரியும்; தெரியப் போகிறது.

"மாஜிக் தந்திரங்கள்" குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.




முன் பகுதியில் சொன்னது போல சபையோரிடம் காண்பித்து அதை ஸ்ரூலின் மேல் வைத்து மேலே ஒரு சாக்பீஸையும் வைத்து, அதன் மேல் ஒரு கறுப்புக் கைக்குட்டையைப் போட்டு மூடி, மந்திரக்கோலைக் கொண்டு மந்திரம் போடுவது, போல பாவனை செய்து, சாக்பீஸை கையில் பிடித்து "வணக்கம்" என்று எழுதுவது போல வெறும் கையை ஆட்டிக் காண்பித்துவிட்டு கறுப்புக் கைக்குட்டையை எடுத்துவிட்டு அதைக் கையில் பிடித்துக்கொண்டு சிலேட்டை எடுத்து சபையோரிடம் எழுத்தைக் காண்பிக்க இந்தச் சிலேட்டில் எழுத்து எப்படி வந்தது? சாக் பீஸ் எப்படி சிலேட்டில் எழுதியது? என்று ஆச்சரியப்படுவார்கள். கையில் எடுத்த கைக்குட்டையை உடனே ஸ்ரூலின் மேலுள்ள தகரத் தட்டின் மேல் போட்டு அதை சபையோர் காணாதபடி செய்துவிட வேண்டும்.

*குறிப்பு* :- இந்தக் காட்சியை நடத்தும்போது மேசை மீதுள்ள இரண்டு சிலேட்டுகளில் தகரத் துண்டு வைக்கப்பட்ட சிலேட்டுக்குப் பதிலாக தகடு வைக்காத சிலேட்டை எடுத்து விடாமல் கவனமாக இருக்க வேண்டும். தகடு வைத்த சிலேட்டை சபையோருக்கு முன் திருப்பித் திருப்பிக் காண்பிக்கும்பொழுது, தகடு கீழே விழாமல் தந்திரமாக அதை அழுத்திப் பிடித்துக கொள்ள வேண்டும்.

### இரத்தத்தை சுத்த நீராக மாற்றுதல்

இந்தக் காட்சியை நடத்துவதற்கு சர்பத் குடிக்கப் பயன்படுத்தும் கிளாஸில் மூன்று புதியதாக வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். இந்தக் கிளாஸில் ஒன்றை எடுத்து, அதன் மேல். விளிம்பிலிருந்து ஒரு செ.மீ உயரம் குறைவாக உள்ள கண்ணாடியை ஒட்டினாற்போல உள்ள இரத்தம் போன்ற ஓர் சிவப்பு நிறமுள்ள உள்ளுறையொன்றைத் தயாரிக்க வேண்டும். இந்த வெல்வெட் உள்ளுறையை போட்டு வெளியே இருந்து பார்த்தால் அதில் இரத்தம் இருப்பது போலவே இருக்க வேண்டும். இந்த விதமான ஒரு கண்ணாடி உள்ளுறையைத் தையற் தொழிலாளியிடம் சொல்லித் தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

காட்சி ஆரம்பிக்கும்முன் நாலைந்து வெண்டைக்காய்களைத் துண்டுகளாக நறுக்கி ஒரு பாத்திரத்தில் போட்டு, கிளாஸ் ஒன்றை எடுத்து அதில் நிறைய சுத்தமான தண்ணீரை எடுத்து அதில் விட்டு நன்றாகக் கலக்கிக்கொண்டேயிருந்தால் அது விளக்கெண்ணெய் போல குழ குழவென்று வரும். இந்த நீரை எடுத்து அதில் இரத்தம் போன்ற சாயப்பவுடரை தேவையான அளவு போட்டு நன்றாகக் கரைத்து துணியில் வடிகட்டி, இரண்டு கிளாஸ்களில் ஒன்றை எடுத்து அதில் மேல் விளிம்பிலிருந்து ஒரு செ.மீ. குறைய இந்த இரத்தம் போன்ற வெண்டைக்காய் நீரை விட்டால் அது அசல் இரத்தம் போலவே இருக்கும், இதை மேசை மேல் வைத்து பக்கத்தில் ஒரு காலி கிளாஸை வைத்து விட வேண்டும்.

வேறொரு கிளாஸை எடுத்து அதில் சிவப்பு வெல்வெட் உள்ளுறை போட்டு அதில் உள்ளுறை அளவிற்கு சுத்தமான தண்ணீரை விட்டால் அதுவும் வெளிப் பார்வைக்கு இரத்தம் போலவே இருக்கும். இதையும் மேசை மேல் வைத்துவிட வேண்டும்.

காட்சியை ஆரம்பிக்க, காட்சி நடத்துகிறவர் மேசைக்கு வந்து



மந்திரக்கோலை சுழற்றிக் காண்பித்துவிட்டு மேசை மேல் வைக்கப்பட்டிருக்கும் வெண்டைக்காய் சாற்றையும் அடுத்துள்ள காலி கிளாஸையும் கையில் எடுத்து மேடைக்கு வந்து "இதோ பாருங்கள்! இது இப்போதுதான் எடுக்கப்பட்ட இரத்தம். இதோ பாருங்கள்"! என்று சொல்லி வெண்டைக் காய் நீரை உயர்த்தி காலியான கிளாஸில் விட்டு, மறுபடி அது இருந்த கிளாஸ்க்கு மாற்றி கையில் வைத்துக்கொண்டு மேசை அருகே சென்று இந்த இரண்டு கிளாஸ்களையும் மேசை மேல் வைத்து விட்டு, மேடையின் ஓரத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு ஸ்ரூலை எடுத்து வந்து சபையோருக்கு முன் போட்டு, மேசை அருகில் சென்று மேசை மேல் வெல்வெட் உள்ளுறை வைத்து தண்ணீர் விடப்பட்ட கிளாஸை கையில் எடுத்துவந்து ஸ்ரூலின் மேல் வைத்து மறுபடி கையில் எடுத்து உயர்த்தி சபையோரிடம் காண்பித்து, திரும்ப ஸ்ரூலின் மேல் வைத்து கறுப்புக் கைக்குட்டையினால் மூடி மந்திரக் கோலைக் கொண்டு மந்திரம் போடுவது போல பாவனை செய்துவிட்டு, மூடிய கைக்குட்டையை எடுப்பது போல கைக்குட்டையின் நடுப்பாகத்தில் ஆள்காட்டி விரலை வைத்து, கிளாஸின் வெளிப்பக்கம் பெருவிரலை வைத்து, இரண்டு விரல்களைக் கொண்டு கிளாஸில் உள்ள வெல்வெட் உள்ளுறையை கைக்குட்டை நடுப்பாகத்தில் வரும்படி எடுத்து, உள்ளுறையை கைக்குட்டைக்குள் மறைத்து அதை ஸ்டூலின் மேல் வைத்துவிட்டு கிளாஸை சபையோருக்குக் காண்பித்தால் அந்த இரத்தம் நிறம் மாறி வெறும் தண்ணீராக இருப்பதைக் கண்டு சபையோர் ஆச்சரியப்படுவார்கள்.

*குறிப்பு* :- வெல்வெட் உள்ளுறை வைக்கப்பட்ட கிளாஸிலிருந்து வெல்வெட் உறையை வெளியே கைக்குட்டையுடன் எடுக்கும்பொழுது வெகு கவனமாக இருக்க வேண்டும். உறை கைக்குள் மறைவாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

### காகிதப்பூ மேடையில் பறந்து செல்லுதல்

சுமார் ஆறு செ.மீ. குறுக்களவுள்ள இதழ்கள் நிறைந்த ஒரு பார்வையான காகிதப் பூவை வாங்கி வந்து அதன் நடுவில் ஒரு மெல்லிய இரும்புக் கம்பியைச் செலுத்தி அதன் தலைப்பில் பட்டாணியளவிற்கு ஒரு வட்டமான வளையம் போல வளைத்து விட்டு, கம்பியின் மறு பகுதியை கீழ்ப் பக்கமாக இழுத்து கீழ்ப் பக்கமாக நன்றாக மடக்கிவிட வேண்டும்.

ஒரு சிறிய சிமிழில் அதாவது சிறிய டப்பியில் கொஞ்சம் கண் மையை அடைத்து வைத்துக்கொண்டு இந்தப் பூவையும், மைச்சிமிழையும் மேடையிலுள்ள மேசையின் மேல் வைத்துவிட் வேண்டும். உதவியாள் பரணில் ஏறி, நூலின் முனையில் மெழுகு உருண்டை திருகப்பட்ட, நூலை மேலே இருந்து துளையின் வழியாக இறக்க வேண்டும். இந்தச் சமயம் மேடையில் ஒரு ஸ்ரூலைப் போட்டு, அதன் மேல் ஒரு சிறிய முக்காலியைப் போட்டு, இதன் மேல் ஒரு கறுப்புக் கைக்குட்டையை விரித்து, இந்தக் கறுப்புக் கைக்குட்டையின் மேல் சரியாக மையத்தில் கறுப்பு நூல் சுருட்டப்பட்ட மெழுகு உருண்டை நிற்கும் அளவிற்கு தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து வரும்..........

## காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை.
*-காதில பூ கந்தசாமி-*

கேட்டியளே சங்கதிய. என்ன நடக்குது, ஏது நடக்குது எண்டு ஒண்டுமே புரியுதில்லை. சண்டையா சமாதானமா, சண்டைக்கான சமாதானமா, சண்டைக்கு முந்தின சமாதானமா, சமாதானமெண்ட பெயரில சண்டையா, சண்டையில்லாத சண்டையா, என்னவோ ஏதோ. ஆனா நாட்டிலயெண்டால் குண்டு வெடிக்குது. கொலைகள் நடக்குது. யுத்த நிறுத்த மெண்டும் சமாதானமெண்டும் பெயர் மட்டும் போர்ட்டெழுதித் தொங்கப் போட்டுக் கிடக்குது!

நிலைமை நல்லாத் தெரியேல்லை. தற்கொலைக் குண்டு அளவுக்கு உள்ளால கடுப்பேறியிருக்குதெண்டால் சாதாரணமாய் நினைச்சுத் தூங்க முடியேல்லை. சமாதானப் பேச்சை நம்பிக் கடை கண்ணியத் திறந்தவன், முதலைக் கிதலை உறுட்டிப் பிரட்டி முதலீடுகளப் போட்டவன் முழுசாடிக்கொண்டு நிக்கிறான். ஸ்ரொக் மார்க்கெட், தட்டுப்பட்டு விழுகிற கடுதாசிப் பெட்டிகள் கணக்கா, கொடகொடவெண்டு கொட்டுண்டு நிக்குது. ஆனா எங்கட அரசியல்வாதிகளோ, 'எதுவும் பெரிசா நடக்கேல்லை, யுத்த நிறுத்தத்தோட சம்பந்தமில்லாத விஷயமிது' எண்டு விளப்பம் சொல்லுறதக் கேக்க சிரிக்கிறதா அழுகிறதா தெரியேல்லை. ஆனானப்பட்ட அமைச்சுக்குள்ள புகுந்து அதால அரும்பொட்டில மிஸ்ஸாகி அருகிலயிருந்த பொலிஸ் ஸ்ரேஷனுக்க புகுந்து வெடிச்சிருக்குது தற்கொலைக் குண்டு. இவை அது ஏதோ விலகி நடந்ததா விளம்பினம். விலகி நடந்திருந்தா இந்த நாலு பொலிஸாரும் என்ன நாண்டுகொண்டு நின்டே செத்தவை? யுத்த நிறுத்தத்துக்கு ஆபத்தெண்டு கண்டா தேர்தல் வெற்றிக்குப் பிசகாகிப் போயிடுமெண்டு நினைச்சுக் கண்டும் காணாமல் போயிட முனையினமோ என்னவோ? ஆனாலும் பாருங்கோ. பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டிட்டுதெண்டு நினைக்குமாப் போல நாங்கள் நினைக்கேலுமோ? பூனைக்கு உலகம் இருண்டு போனதாய்த் தெரியலாம். ஆனா எங்களுக்குப் பட்டப் பகல் வெளிச்சமாய் கண்ணை மூடிக்கொண்டு நிக்கிற பூனையெல்லோ தெரியுமெண்டதை அவை நினைக்கேல்லை. இந்தப் பூனைத்தனத்தை விட்டிட்டு, நிலைமைய நாடி பிடிச்சுப் பார்த்து, நடக்க வேண்டியத நேரகாலத்துக்கு முடிவு செய்து நடந்தா வெள்ளம் வரமுன்னம் அணை கட்டிக்கொள்ளலாம்.

இதில நம்ம மகேசண்ணையார் கொஞ்சம் மதியூகிதான். நிலைமையை அனுமானிச்சு நாட்டை விட்டே ஓட்டமெடுக்கிறார். ஓடிறதப் பகிடி பண்ணிறவன் பண்ணட்டும். பகிடி பகிடியோட போயிடும். உயிர் போனால் ஊராரே வந்து தரப்போறாங்கள். உண்மைதான். யாழ்ப்பாணத்தால தூக்கியெறியப்பட்டுக் கொழும்பில வந்து விழுந்தவர், கொழும்பிலயும் குண்டடிபட்டுத் தப்பிப் பிழைச்சு நிக்கப் பாத்தால் நிலைமை விட்டுத் துரத்திக்கொண்டேயிருக்கு. வீடு வரை ஆள் வந்து விசாரிச்ச பிறகும் வில்லங்கத்தை உணராட்டா வியாபார மூளையிருந்தும் வேலையில்லாமல் போயிடுமெல்லோ. இத்தனை பேச்சுப் பேசி, எத்தினை பேரோட மல்லுக்கட்டி, ஜனாதிபதி முதல் மனோ கணேசன் வரை மட்டந்தட்டிப் பேசி, வீராவேஷம் காட்டினவரே இப்ப விட்டிட்டு ஓட வேண்டிக் கிடக்குதெண்டால், விஷயம் எந்தளவு சீரியஸாய்ப் போயிருக்குதெண்டு பாக்க வேண்டாமோ! இப்பிடியாகிப் போயிருக்கு நிலைமை. எங்கட கூட்டமைப்புக்காறர் குடுத்த பேட்டிகளைக் கேட்டால் முழுப் பூசணிக்காயக் கூடச் சோத்துக்க புதைக்க வெளிக்கிட்டவ போலக் கிடக்கு. புதையுதோ இல்லையோ புதைக்கத் தெண்டிச்சவையெண்டு காட்டினாலே தங்களுக்குச் சேட்டிபிக்கேட் கிடைச்சிடு மெண்டு நினைக்கினம். நினைக்கட்டும் நினைக்கட்டும். இன்னும் கொஞ்சக் காலத்தால தங்களையே புதைச்சாலும் தூக்கியெடுக்க ஆளிராதெண்டு புரிஞ்சால் சரி. ரவியானவர் சொன்ன லொஜிக்கு களைக் கேக்கத்தான் வியப்பாக் கிடக்குது. இந்தாள் ஆனையக் காட்டிப் பூனையெண்டு நம்ப வைக்கவும் தயங்கமாட்டுதெண்டு தெளிவாய்த் தெரியுது. என்னவோ, என்ர புத்திக்குப் படுகிற ஒண்டை மட்டும் சொல்லிறன். அழிவுகளில குளிர்காய நினைச்சா, உயிருக்கே உலை!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

## இந்த வாரம் உங்கள் பலன்

(18.07.2004 தொடங்கி 24.07.2004 வரை)

**சோதிட மாமணி தில்லை**

### இந்த வாரக் கிரக நிலை

கர்க்கடகம் - சூரியன், புதன், செவ்வாய், சிங்கம் - வியாழன், துலாம் - கேது, மேடம் - இராகு, இடபம் - வெள்ளி மிதுனம் - சனி,
சந்திரன் கர்க்கடகம், சிங்கம், கன்னி இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

***மேடம்*** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற் கால்) தொழில் நிலை உயர்ச்சி, பொருள் வரவு, கடன் சுமை நீங்கும், உயர்ந்த நிலை, குடும்ப நன்மை, பிள்ளைகளால் மகிழ்ச்சி, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**

***இடபம்*** : (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)
தொழில் மந்தம், செலவு மிகுதி, வெளியிடப் பயணம், வீண் துயர், குடும்ப கலகம், உத்தியோக மாற்றம், மனப் பயம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**

***மிதுனம்*** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)
தொழில் பலிதம், பண வரவு, அன்னியர் உதவி, முயற்சி மேன்மை, குடும்ப நன்மை, உத்தியோகச் சிறப்பு, மாணவர் கல்வி ஊக்கம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03**

***கர்க்கடகம்*** : (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் கலக்கம், வீண் செலவு, அன்னியரால் தொல்லை, கௌரவக் குறைவு, பெரியோர் பகை, குடும்ப நன்மை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**

***சிங்கம்*** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்)
தொழில் கலக்கம், செலவு மிகுதி, வெளியார் தலையீடு, காரிய நட்டம், குடும்ப நன்மை, பிள்ளைகளால் செலவு, உத்தியோக மாற்றம், மன மகிழ்ச்சி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01**

***கன்னி*** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)
தொழில் நன்மை, பாரிய செலவு, வீண் குறை கேட்டல், வெளியிடப் பயணம், உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03**

***துலாம்*** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)
தொழில் மந்தம், செலவு மிகுதி, மனக் கிலேசம், வீண் பிரயாணம், தேக சுகக் குறைவு, உத்தியோக நன்மை, வெளியார் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07**

***விருச்சிகம்*** : (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை )
தொழில் உயர்ச்சி, பலவித பேறு, உயர்ந்த நிலை, முன்னேற்றம், பூமி பேறு, குடும்ப சுகம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், ஊக்கமின்மை, விவ்சாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**

***தனு*** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)
தொழில் உயர்ச்சி, பெரியோர் உதவி, பண வரவு, ஆடம்பர வாழ்வு, செலவதிகம், உத்தியோகம் சிரமம், வீண் அலைச்சல், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**

***மகரம்*** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)
தொழில் உயர்ச்சி, பலவித நன்மை, பண விரயம், அன்னியரால் தொல்லை, உத்தியோக உயர்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**

***கும்பம்*** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)
தொழில் சிறப்பு, உயர்ந்த எண்ணம், பணக் கஷ்டம், அன்னியர் சகவாசம், உத்தியோக முயற்சி, பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03**

***மீனம்*** : (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)
தொழில் கலக்கம், வீண் பிரயாணம், அன்னியரால் தொல்லை, வெளியிட வாழ்க்கை, உத்தியோகம் சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)



## கை கண்ட பலன்



எனது கிளை நிறுவனத்தில் மாந்திரிக ஜோதிட, வேலைகளுக்கு கைமேல் பலன். நுவரெலியாவில் எனது மூத்த சகோதரனாகிய P.T.R அவர்களிடம் சென்று உங்கள் வேலைகளை அப்பொழுது நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம் மாந்திரிக உச்சாடன பீடம் பேராசிரியர் டாக்டர் பி.கே. சாமி.

Prof.Dr. P.K. SAMY (J.D.G.A.N.)J.P.
33, DAILY FAIR COMPLEX
NUWARAELIYA
T.P. 052 - 2222508

நுவரெலியாவை தவிர வேறு எங்கும் கிளைகள் கிடையாது இங்கும் தீயவேலைகளுக்கு இடமில்லை.

# உலக விலை

அமெரிக்காவின் கம்பீரத்தை வெளியுலகத்திற்குக் கம்பீரமாய்க் காட்டும் சுதந்திரதேவி சிலையின் கைகளில் ஒசாமா பின்லேடனின் தலை இருப்பது கிராபிக்ஸ் என்றாலும் ஆச்சரியமானது. 2001 செப்டம்பர் 11ஆம் திகதி உலக வர்த்தக மையக் கட்டிடத்தைத் தாக்கிய சம்பவத்துக்குத் திட்டமிட்டவர் என்ற வகையில் அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவுக்கு சிம்ம சொப்பனமாக இருப்பவர் ஒஸாமாதான். ஒஸாமாவைக் காட்டித்தருபவருக்கு பல மில்லியன்களைத் தருவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. எட்டப்பர் நிறைந்த உலகில் எவருக்கு என்ன விலையோ?


## நிபுணத்துவ கைரேகை



கைரேகை என்பது ஒரு கடல் போன்றது. அப்படியே அதை ஆராய்ச்சி செய்வதென்றால் ஆதி பராசக்தியின் அருட்கடாட்சம் வேண்டும். இக் கூற்றுக்கமைய உலக நாடுகளுக்கு சென்று கைரேகைக் கலையை அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராய்ந்து நிபுணத்துவம் பெற்ற என்னைச் சந்தியுங்கள். உங்கள் கைரேகையை பார்த்துப் பலா பலனை தெரிந்து கொள்ள முன்னறிவித்தலுடன் வந்தால் கைரேகை வாசிக்க காலநேரம் கொடுக்கப்படும்.



Tel: 2344832
கே.கங்காதரன் (M.A) J.P.
162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.
Booking Time 4.00 p.m To 7.00 p.m Only


# அழகு



அழகிப் போட்டிகள் பற்றி பல தகவல்கள் தெரிந்திருப்பீர்கள். ஆண் அழகர்கள் போட்டி அரிதாகவே நடப்பதுண்டு. கட்டுமஸ்தான உடல்வாகு கொண்ட ஆண்கள் எப்போதும் அழகானவர்கள் என்கின்றனர் பெண்கள். மும்பையில் நடந்த இந்திய கிளாஸிக் பாடி - பில்டிங் போட்டியில் உடல் வலுவை வெளிக்காட்டுகிறார் பஞ்சாப்பின் விதீந்தர்சிங். இப்போட்டியில் இவர் வெற்றி பெற்றார்.

# உறவு

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே" என்றொரு பாடல் உண்டு. தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் உள்ள உயிரியல் பூங்காவில் புலியின் மேல் படுத்து இளைப்பாறும் பன்றிக் குட்டி. இந்தப் பூங்காவில் புலி போன்ற வன விலங்குகளுடன் பன்றி, நாய் போன்ற வீட்டுப் பிராணிகளை பிறந்தவுடன் இணக்கத்துடன் வளர்த்து விடுகின்றனர். அவை பேதமறியாமல் அன்னியோன்னியமாக வாழ்கின்றன. இப்படிப் பாகுபாடு மறந்து விலங்குகள் வாழ்வது பார்வையாளர்களை வெகுவாகக் கவர்கின்றதாகப் பூங்கா நிர்வாகிகள் கூறுகின்றனர்.



# பூ



பூக்களைப் பற்றி பூரிப்பான செய்திகள் எமக்கு அத்துப்படி. இதோ படத்தில் காணப்படும் பூவும் புதுமையானதுதான். யானை முக வடிவில் காட்சிதரும் "புலி நகக் கொன்றை" என்ற இம் மலர் ஜூன், ஜூலை மாதங்களில் மட்டுமே விசேடமாகப் பூக்கின்றன. இந்தியாவின் புதுச்சேரி அபிசேகப்பாக்கத்தில் பெருமளவில் இவை அதிகமாகக் காணப்படுகின்றன. இப்போ கவனித்துப் பாருங்கள். பூவும் - யானையும் தெரிகிறதா?

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் கேசவன் கஜுராம்

**18.07.2004**



கரவெட்டி பொன்னாலையைச் சேர்ந்த திரு-திருமதி. கேசவன்-ரதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கஜராம்(கஜன்) தனது முதலாவது பிறந்தநாளை 18.07.2004 ஞாயிற்றுக்கிழமை Canada Montreal இல் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா-அம்மா, சவூதியில் இருக்கும் அப்பாப்பா, இலங்கையில் இருக்கும் அப்பம்மா, பொன்னாலை அம்மப்பா - அம்மம்மா மற்றும் சிவரூபன் மாமா குடும்பத்தினர், சசிகரன் மாமா குடும்பத்தினர், பிரபு சித்தப்பா, U.K ஜெயராஜ் மாமா, அத்தை, சந்தியா அத்தை, Canada பெரியப்பா - பெரியம்மா, அண்ணாமார், மலேசியா பெரியப்பா - பெரியம்மா, ஆனைக்கோட்டை பெரியப்பா - பெரியம்மா, அக்கா, கொழும்பு பெரியம்மா - பெரிய மாமா, சின்னமாமா, அண்ணாமார், பொன்னாலை பெரியப்பா - பெரியம்மா, அக்காமார், அண்ணாமார் மற்றும் சித்திமார், சித்தப்பாமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், பூட்டிமார், பூட்டன்மார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கஜன் குட்டியை பொன்னாலை வரதராஜப் பெருமாள் அருள் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- அப்பா - அம்மா Canada.

## 9ஆவது பிறந்தநாள் வாழ்த்து


நவாலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த திரு - திருமதி திருநாவுக்கரசு - லிங்கேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி லட்சனி தனது 9ஆவது பிறந்தநாளை 23.07.2004 அன்று சுவிஸில் சூரிச் மாநிலத்தில் அமைந்துள்ள தமதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா - அம்மா, தங்கை தளிரினி, சுவிஸிலுள்ள சித்தப்பா - சித்தி, அண்ணன்மார்கள் பிரவீன், பிரேன், ஜோன்சன், மஞ்சு அக்கா குடும்பம், தம்பி மாருதன், ராஜா குடும்பம், நகுலேஸ்வரன் மாமா குடும்பம், காந்தன் மாமா குடும்பம், ஆனந்தன் மாமா குடும்பம், செல்வா மாமா குடும்பம், சிவச்செல்வம் மாமா குடும்பம், லவிஞ்சன் மாமா நேசன் மாமா குடும்பம் தாஸ் மாமா குடும்பம் கதிரைமலை மாமா, லண்டனிலுள்ள அண்ணாமார்கள் விந்தன், கிருபாகரன் குகன் மாமா குடும்பத்தினர், சாந்தன் மாமா, குடும்பத்தினர் டோஹாவிலுள்ள குகன் சித்தப்பா, ருபன் சித்தப்பா, ஜேர்மனி சிவாழினி பெரியம்மா குடும்பம் திருகோணமலையைச் சேர்ந்த உதயன்மாமா குடும்பம், மட்டு. துறைநீலாவணையைச் சேர்ந்த ஆசைத்தம்பி மாமா குடும்பம் யாழ்ப்பாணத்திலுள்ள பெரியம்மாமார்கள் விக்கினேஸ்வரி, நாகேஸ்வரி குடும்பத்தினர் பெரியத்தை, சின்னத்தம்பி, புவனேஸ்வரி, சின்னத்தை சின்னராஜா - மல்லிகாதேவி குடும்பத்தினர், அப்பப்பா மருதகுட்டி, போரதனையிலுள்ள கிருஷ்ணா அக்கா மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பலகலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.



செல்வி திருநாவுக்கரசு லட்சனி

23.07.2004

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் அஸ்வின் 17.07.2004

குப்பிளான் தெற்கைச் சேர்ந்த ஜெயகுமார் - கொக்குவில் மேற்கைச் சேர்ந்த கௌசினி தம்பதிகளின் அன்புச் செல்வம் அஸ்வின் 17.07.2004 அன்று தனது பிறந்தநாளை சுவிஸ் Baden இலுள்ள தனது இல்லத்தில் மிகவும் எளிமையாக கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா - அம்மா, ஆசை அண்ணா அஹிஷன் மற்றும் குப்பிளானிலுள்ள அப்பப்பா - அப்பம்மா, மாமா, அத்தை, மச்சான்மார்களான திருப்பரன், திருஷன், மச்சாள்மார்களான ஜீவிகா, கேமிகா, லண்டனிலுள்ள தாத்தா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார்களான நிவேதா, மேதினி, சிநேகா, நிந்துஷா, சிம்யா, அண்ணாமார்களான நிதுர்ஷன், நிலுக்ஷன் கனடாவிலுள்ள பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், அண்ணாமார்களான ரேனுஷன், துரிஷன், அக்காமார்களான ஜஸ்வினி, ஐஸ்மிதா, மச்சான்மார்களான சாருஷன், சிந்துஷன், ஆருஷன், சுவிஸிலுள்ள பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், மச்சாள்மார்களான சுரேனியா ஜெனுஷியா, மச்சான் சாஜிதன், அக்காமார்களான கனுஷியா, சாருணியா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் அருள் பெற்று பல்கலையும் கற்று, சீரும் சிறப்புமாக வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:-
திரு - திருமதி ஜெயக்குமார் (சாந்தன்), சுவிஸ்.
0041562220031.